
# ஆண்டாள்

கே. ஏ. மணவாளன்



T
891.481 015 2
An 22 M





உள் அட்டையில் காணும் சிற்பக் காட்சியில், பகவான் புத்தரின் அன்னை மாயாதேவி கண்ட கனவின் பலனை, மன்னர் சுத்தோதனருக்கு நிமித்திகர் மூவர் விளக்குகின்றனர். அவர்களுக்குக் கீழே அமர்ந்து அந்த விளக்கத்தை எழுதுகிறார் ஓர் எழுத்தர். எழுதும் கலையைச் சித்திரிக்கும் முதல் இந்தியச் சிற்பம் இதுவாகவே இருக்கலாம்.

(நாகார்ஜுன மலைச் சிற்பம்—கி.பி. இரண்டாம் நூற்றாண்டு.
பட உதவி: நேஷனல் மியூஸியம், புதுதில்லி.)

இந்திய இலக்கியச் சிற்பிகள்

# ஆண்டாள்

கே. ஏ. மணவாளன்

சாகித்திய அக்காதெமி

*Andal*-Monograph in Tamil by K. A. Manavalan, Sahitya Akademi, New Delhi, 1990.

SAHITYA AKADEMI
REVISED PRICE Rs. 15·00

Library IIAS, Shimla
T 891.481 015 2 An 22 M
00117372

891.481 015 2
An 22 M

© சாகித்திய அக்காதெமி

முதல் வெளியீடு: 1990

**சாகித்திய அக்காதெமி**

தலைமை அலுவலகம்:
ரவீந்திரபவன், 35, ஃபெரோஸ்ஷா சாலை, புது தில்லி 110 001
விற்பனை:
'சுவாதி' மந்திர் மார்க், புது தில்லி 110 001

கிளை அலுவலகங்கள்:
ஜீவன்தாரா பில்டிங், 4வது மாடி,
டைமண்ட் ஹார்பார் ரோட், கல்கத்தா-700 053
29, எல்டாம்ஸ் சாலை, தேனாம்பேட்டை, சென்னை 600 018
172, பம்பாய் மராத்தி கிரந்த சங்கிரகாலய மார்க்கம்
தாதர், பம்பாய், 400 014
(கிளை அலுவலகங்களிலும் விற்பனை உண்டு)

SAHITYA AKADEMI
REVISED PRICE Rs. 15·00

Indian Institute ... SHIMLA
117372
14/12/04

பாவை அச்சகம், சென்னை-14.

## சமர்ப்பணம்

ஸ்ரீவைணவ உலகின் முடிசூடா மன்னராய்த் திகழ்ந்த மகாவித்வான் மகா மகிமோபாத்யாய காஞ்சி பிரதிவாதிபயங்கரம் ஸ்ரீமான். உ. வே. அண்ணங்கராசாரிய சுவாமிகளின் திருவடிகளில் அன்னாருடைய திருவருளுக்குப் பாத்திர மானவன் என்ற முறையில் இந்நூலைக் காணிக்கையாக்குகிறேன்.

## உள்ளடக்கம்


| | | |
|---|---|---|
| 1. | முன்னுரை | 7 |
| 2. | ஆழ்வார்கள்—ஆண்டாள் காலம்—வரலாறு | 9 |
| 3. | பாவை நோன்பு—தைந்நீராடல் | 20 |
| 4. | நாச்சியார் திருமொழி நயங்கள் | 42 |
| 5. | இலக்கிய நோக்கில் திருப்பாவை | 87 |
| 6. | பயன்பட்ட நூல்கள் | 105 |

# முன்னுரை

பாரத நாட்டின் பல்வேறு சமயங்களுள் மிகவும் தொன்மை யானது வைணவம். திருமாலாகிய விஷ்ணுவைப் பரம்பொருளாக ஏற்றுக் கொண்டவர்கள் வைணவர்கள். பக்தி நெறிக் காவலர் களான ஆழ்வார்கள் திருமாலையே முழு முதற்கடவுளாக ஏற்றுக் கொண்டு நாலாயிர திவ்வியப் பிரபந்த பாடல்களை தமிழில் அருளியுள்ளார்கள். இவர்களுடைய பாடல்கள் பக்தி நெறியைப் பரப்பியதோடு அல்லாமல் பேரிலியக்கியங்களாகவும் திகழ்கின்றன. பெருந்தமிழன் என்று தங்களைச் சொல்லிக் கொள்ளும் ஆழ்வார் கள் பதின்மராவர். இவர்களோடு மதுரகவிகள், ஆண்டாள் என்ற இருவரையும் சேர்த்துப் பன்னிருவர் என்று கூறுவதும் உண்டு.

தமிழகத்தின் தெற்கே பாண்டி நாட்டில் ஸ்ரீவில்லிபுத்தூரில் அவதாரம் செய்தருளிய ஆண்டாள் மிகப்பெரிய பெண்பாற் புலவராவார். இறையருளால் விளைந்த ஞானம் தந்தையாகிய பெரியாழ்வாரால் நெறிப்படுத்தப் பட்டது. ஆண்டாள் பிறப்பும் வளர்ப்பும் தனித்தன்மை வாய்ந்தவை. அதுபோலவே அவளுடைய வாக்கும் வாழ்வும் போற்றுதற்குரியன. இதற்கு ஆண்டாள் இயற்றிய திருப்பாவை, நாச்சியார் திருமொழி என்ற திவ்வியப் பிரபந்தங்களே சான்றாகும். இப்பிரபந்தத்தில் காணப்படும் இலக்கியச் செறிவையும் பக்தி வளத்தையும் விளக்கி இந்நூல் எழுதப்பட்டுள்ளது. ஆண்டாள் வாழ்க்கை வரலாறும், பொதுச் செய்திகளும் இடம் பெற்றுள்ள இந்நூலில் ஆழமான தத்துவக் கொள்கைகளோ சமய உண்மைகளோ கூறப்படவில்லை.

இந்திய இலக்கியச் சிற்பிகள் வரிசையில் ஆண்டா ளைப் பற்றி எழுதும்படி நல்வாய்ப்பினை வழங்கிய சாகித்திய அக்காதெமிக்கு என் மனமார்ந்த நன்றி யினைத் தெரிவித்துக் கொள்கிறேன். என் எழுத்துப் பிரதியினைச் சோதித்துக் கொடுத்த நண்பர் வித்துவான் திரு. வெங்கடராமாநுசம் அவர்கட்கும், படி எடுத்து உதவிய என தருமைச் செல்விகள் பத்மலதா, மாலதி ஆகியவர்கட்கும் என் நன்றியினைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

**கே. ஏ. மணவாளன்**

# ஆழ்வார்கள்—ஆண்டாள் காலம்-வரலாறு

இன்தமிழ் பாடினான் அருள்கண்டீர் இவ்வுலகினில் மிக்கதே என்று மதுரகவியாழ்வார் திருவாய் மலர்ந்தருளியபடி, அருளாளர்களான பக்தி நெறிப் பாவலர்கள் பலர், நம் பாரத நாட்டில்—தமிழ் கூறும் நல்லுலகில் பல்வேறு காலங்களில், பல்வேறிடங்களில் தோன்றியுள்ளனர். இவர்கள் ஆண்டவனின் கமலப் பொற்பாதங்களின் கீழ், தம் வாடாப் பாமாலைகளை வைத்து அஞ்சலி செய்துள்ளனர். அத்தகு பக்தி நெறிக் கவிஞர்களுள் கோதை நாச்சியாராகிய ஆண்டாள் தலை சிறந்தவராவார்.

வாழ்க்கை வெம்பாலையில் வாடி வதங்கும் மன்னுயிர்க்கு ஆண்டவன் திருவடி நிழலைத் தவிர வேறொரு புகலிடமில்லை. இதனைப் ''புகலொன்றில்லா அடியேன் உன்னடிக்கீழ் அமர்ந்து புகுந்தேனே'' என்ற நம்மாழ்வார் திருவாக்கிலே காணலாம். நீரும் நிழலுமின்றித் தவிக்கும் ஜீவன் (ஆன்மா)கடைத்தேற இறைவனது பாத கமலங்களே பெரிதும் உறுதுணையாகும். ''உன்பாத நிழலல்லால் மற்றோர் உயிர்ப்பிடம் நானெங்கும் காண்கின்றிலேன்'' என்கிறார் பெரியாழ்வார். பிறவியாகிய வாழ்க்கையைப் பெருங்கடலாக வருணிப்பது கவிஞர் மரபு. அத்தகு கடலினின்றும் கரையேற இறைவன் திருவடிகளே புணையாகும் என்பதனைத் திருவள்ளுவப் பெருந்தகையார் 'பிறவிப் பெருங்கடல் நீந்துவர் நீந்தார் இறைவனடி சேராதார்' என்று கூறியுள்ளாரன்றோ! ஆண்டாளும் 'துன்பக்கடல் புக்கு வைகுந்தன் என்பதோர் தோணி பெறாது உழல்கின்றேன்' என்று அருளியுள்ளார்.

இந்திரிய சுகங்கள் தொடக்கத்தில் இன்பத்தை அளிப்பது போல் தோன்றி, இறுதியில் துன்பத்தையே விளைவிக்கும் என்பதனை நன்குணர்ந்து தேறிய ஞானிகள், பேரறிவாளர்கள் என்பதில் ஐயமில்லை. ஆண்டவனுடைய அருள் நெறியில் நிற்றலே மனக்கவலைக்கு மாற்று மருந்தாகும். ஆண்டவன் அருளைப் பெற பக்தி நெறியே சிறந்தது என்பதனை ஆழ்வார்

களும் நாயன்மார்களும் தத்தம் பாசுரங்களில் அறுதியிட்டுக் கூறியுள்ளார்கள். அறிவைக் காட்டிலும் அன்பு வலிமை வாய்ந்தது. ஞானயோகம் என்று சொல்லப்படும் அறிவு நெறியை பற்றி நின்று இறைவனைக் காண்பதைவிட, அன்பு நெறி நின்று இறைவனைக் காண்பது எளிது. இதனையே திருமழிசை ஆழ்வார் ''உள்கனிந்து எழுந்ததோர் அன்பிலன்றி அழியானை யாவர் காணவல்லரே' என்று கூறியுள்ளார்.

ஒரு மலரைப் பலரும் பலவிதமாக நோக்குகின்றனர். தாவர விஞ்ஞானி அதன் இதழ் அமைப்புகளை ஆராய்வான். ஒரு காதல் வயப்பட்ட உள்ளத்தவன் அம்மலரில், தன் காதலியின் முகத் தையே கண்டின்புறுவான். ஆனால் ஒரு ஞானியான பக்தனோ மாயோனின் முறுவலை அம்மலரில் தரிசிப்பான். இப்படிக் காண் கின்ற பொருள்களிலெல்லாம் கடவுளின் வடிவம், நிறம், புன் முறுவல் ஆகியவற்றைக் கண்ட பக்தர்கள் வரிசையில் தலை சிறந்து விளங்கியவர்கள் ஆழ்வார்கள். ஆழ்வார்கள் வரிசையில் பெண்பாற் புலவரும், பக்தையுமான ஆண்டாளுக்குத் தனிச் சிறப்புண்டு. இனி ஆழ்வார்களின் வரலாறு, காலம் ஆகியவற்றை யும் ஆண்டாளின் காலம், பிறப்பு வளர்ப்பையும் காண்போம்.

## ஆழ்வார்கள் வரலாறு—கால நிலை

ஆழ்வார்கள் அவதார புருடர்களாகவும், அறிவால் மேம் பட்டவர்களாகவும் வைணவ சமயச் செழிப்புக்கு உரமிட்டவர் களாகவும் விளங்கியவர்கள். இறைவனுடைய அழகிலும் குணங் களிலும் ஆழங்கால் பட்டு மயங்கிய இவ்வாழ்வார்களின் வரலாறு கள், வடமொழியில் கருடவாகன பண்டிதர் என்பவராலும் தமிழ் வடமொழி கலந்த மணிப்பிரவாள நடையில், பின்பழகிய பெருமாள் சீயர் என்பவராலும் இயற்றப் பட்டுள்ளன.

இவையன்றி பிரபன்னாமிருதம், பிரமதந்திர சுதந்திரசீயர் இயற்றிய குருபரம்பரை முதலாகப் பிற்கால நூல்களும் சில உள. ஆழ்வார்கள் வரலாறுகளுடன் நாதமுனிகள், ஆள வந்தார், இராமாநுசர் போன்ற ஆசாரியர்களுடைய சரிதங் களும், இந்நூல்களில் காணக்கிடக்கின்றன. ஆழ்வார்களால் திருவாய் மலர்ந்து அருளிச் செய்யப்பட்ட நாலாயிர திவ்வியப் பிரபந்த பாசுரங்களின் தமிழ்நடையின் போக்காலும், இலக்கண வமைதிகளாலும், சொற்பொருள் வழக்குகளாலும் அவர்கள் எல்லாம் கடைச்சங்க காலத்துக்குப் பிற்பட்ட கால விசேடங் களில் விளங்கியவர்கள் என்பதனை அறியலாம்.

"சங்க முகத் தமிழ் மாலை பத்தும் வல்லார்"
(பெரியதிருமொழி 3, 4, 10)

"சங்கத் தமிழ் மாலை முப்பதும்"
(திருப்பாவை 30)

என்று அச்சங்கத்தை அப்பெரியோர்கள் குறிப்பிட்டுள்ளனர்.

ஆழ்வார்களெல்லாம் ஆசாரியருள் தலைவரான நாதமுனிகள் காலத்துக்கு முற்பட்டவர் என்பதும், அந்நாத முனிகள் கி. பி. 823-ல் அவதரித்தவர் என்பதும் பிரபன்னாமிருதம், கோயி லொழுகு முதலிய நூல்களால் தெரியவரும் செய்தியாகும்.

## ஆழ்வார்களின் வரிசை

ஆழ்வார்களின் அவதார முறையை உபதேசரத்தினமாலை என்னும் நூலில் மணவாளமாமுனிகள் பின்வருமாறு கூறியுள்ளார்.

'பொய்கையார் பூதத்தார் பேயார் புகழ்மழிசை
அய்யனருள் மாறன் சேரலர்கோன்—துய்யபட்ட
நாதனன்பர் தாள்தூளி நற்பாணன் நன்கலியன்
ஈதிவர் தோற்றத்தடைவா மிங்கு

(உபதேச—மாலை)

இப்பாடலில் ஆழ்வார்கள் பதின்மர் மட்டிலுமே கூறப் பட்டிருந்தாலும், ஆண்டாளையும் மதுரகவிகளையும் சேர்த்துப் பன்னிரண்டு ஆழ்வார்கள் என்ற வழக்கு வைணத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டுள்ளது. பொதுவாக ஆழ்வார்களின் காலம் வரலாற்றாசிரியர்களின் ஆய்வுப்படி ஐந்தாம் நூற்றாண்டின் பிற்பகுதி முதல் எட்டாம் நூற்றாண்டின் முற்பகுதி வரை (பொய்கையாழ்வார் முதல் திருமங்கையாழ்வார் வரை) என்று தெரிகின்றது.

## ஆண்டாள் காலம்[1]

ஆண்டாள் அவதார காலம் அவள் இயற்றிய திருப்பாவையில் வரும் "புள்ளின் வாய் கீண்டானை" என்று தொடங்கும் பாடலின் இடையில் வரும் "வெள்ளி எழுந்து வியாழன் உறங்கிற்று" என்ற சொற்றொடரை ஆராய்ச்சி செய்து

---

1 ஆழ்வார்கள் கால நிலை; பக். 123-128 ஆராய்ச்சிப் பேரறிஞர் திரு. மு. இராகவையங்கார்.

அறுதியிடப் பட்டுள்ளது. 'புள்ளின் வாய் கீண்டானை' என்ற பாடலின் திரண்ட கருத்து— "உடனொத்த கன்னியரெல்லாம் மார்கழி நீராடுதற்குரிய களத்தை அடைந்துவிட்டனர். வெள்ளி எழுந்தது; வியாழனும் உறங்கியது; புட்களும் ஒலியெழுப்பின. இங்ஙனமாகவும், நீ இன்னும் பள்ளியிலிருந்து எழுந்திராமல் உறங்கலாமோ? பெண்ணே! துயிலெழுந்து எம்முடன் வருக" என்பதாம்.

திருப்பாவையில் பொழுது விடிவதற்குரிய அடையாளங்கள் பல கூறப்பட்டுள்ளன. அவை கீழ்வானம் வெளுப்பதும், கோழி கூவுதும், பறவைகள் ஒலிப்பதும், முனிவர்களும், யோகிகளும் துயிலெழுந்து அரியின் பெயரை முழங்குவதும் போன்ற பலவாம். இவை நிகழ்வதற்கு முன்பே விரதநியமத்தை முடிக்க வேண்டி, மகளிர் விரைதல் கூறப்படுதலின் பொழுது விடியுமுன்பே ஆய்ப் பாடிப் பெண்டிர் நீராட்டம் செய்தார்கள் என்று அறிய முடிகிறது.

அதிகாலையில் சுக்கிரன் உதயத்தைக் கண்டு எழுந்து தங்கள் வேலைகளைத் தொடங்குவது கிராமத்து வழக்கமாகும். எனவே ஆண்டாளும் ஆய்ப்பெண்டிர் பாவனையில் நீராட்டத்துக்கு மற்றவர்களை எழுப்புகிற பாசுரத்தில், இந்த வெள்ளி எழுச்சியையும் வியாழன் அத்தமிக்கும் தன்மையையும் ஒரு சேர வைத்துப் பாடியுள்ளாள். அதாவது அவ்வுதயாத்தமனங்கள் உடன் நிகழ்வனவாயின. இவ்வாறு ஒருவரும் கூறாத முறையில் வெள்ளி வியாழங்களின் உதயாத்தமனங்களை ஒருசேர வைத்துக் கோதையார் கூறுதலை வானசாத்திர அறிஞர்கள் ஆராய்ந்து மார்கழிப் பௌர்ணமியையன்று வைகறையில் வெள்ளியெழ வியாழ முறங்கிய காலம் கி. பி. 731 டிசம்பர் மாதம் 18 ஆம் நாள் என்று முடிவு செய்துள்ளனர். இந்த காலம் பெரியாழ்வாரின் காலத்தை ஒட்டி பின்பழகிய சீயர் குருபரம்பரை நூலோடு மாறு படாமலிருப்பதால் ஏற்புடையதே என்று அறிஞர்கள் கூறியுள்ளனர். எனவே திருப்பாவை அவதரித்த காலமும் இதுவே என்று உணரத் தட்டில்லை என்கிறார் திரு. மு. இராகவைய்யங் கார்.

ஆண்டாளது அவதார நாள்—நளவருடம் ஆடிமாதம் சுக்கில சதுர்த்தசியும் செவ்வாய்க்கிழமையுங் கூடின பூரநக்ஷத் திரம்—என்று குருபரம்பரை நூல்கள் சில கூறுகின்றன இக்காலக் குறிப்பைக் கொண்டு கி. பி. 776 ஆம் வருடம் ஜூன் மாதம் 25 ஆம்தேதியே ஆண்டாள் அவதார காலம் என்று திருவாளர்

சுவாமிக் கண்ணுபிள்ளையவர்கள் கூறியுள்ளார்கள். எது எப்படியாயினும் ஆண்டாள் காலம் கி. பி. எட்டாம் நூற்றாண்டின் இடைப்பட்ட காலம் என்பதில் ஐயமில்லை.

## கோதையின் பிறப்பும் வளர்ப்பும்

முத்தமிழ் வளர்க்க முச்சங்கம் நிறுவிய பாண்டி நாட்டிலே ஸ்ரீவில்லிபுத்தூர் என்று சிறப்புடன் விளங்கும் ஊரே நம் ஆண்டாளின் பிறப்பிடமாகும். ஆண்டவனது பேரன்புப் பூஞ் சோலையிற் பூத்த ஒரு கற்பக நறுமலரே ஆண்டாள். அவனுடைய அன்புத் தொட்டிலிலே தாலாட்டப்பட்டு அவனையே நாயகனாக அடைய வேண்டும் என்றாசைப்பட்டு அவ்விருப்பம் நிறைவேறப் பெற்றவள் ஆண்டாள். இவளுடைய தோற்றம் வினோதமானது. வேயர் குலத் தோன்றலாகிய விட்டுசித்தரே பெரியாழ்வார் என்றழைக்கப் படுபவர். இவர் திருநந்தவனம் அமைத்துப் பூச்செடிகளைப் பயிராக்கி அவற்றினின்றும் நறுமணங் கமழும் நறுமலர்களைக் கொய்து, வியத்தகு மாலைகளாகத் தொடுத்து ஸ்ரீவில்லிபுத்தூருறைவானான வடபெருங் கோயிலுடையானுக்குச் சமர்ப்பித்து வழிபாடியற்றி வாழ்ந்து வந்தவர். ஒருநாள் மலர் கொய்யும் போது திருத்துழாய்ப் பாத்தியின் நடுவே ஒரு பெண் மகவைக் கண்டு அக மிக மகிழ்ந்து அச்சிசுவை வாரியெடுத்தணைத்துத் தம் மனையாளிடம் கொடுத்து அன்போடு வளர்த்து வரலானார்.

மிதிலா நகரத்தில் அரசனான சனகன் வேள்வி செய்ய எண்ணி, நிலத்தை உழுதபோது ஏர்ப்படைச்சாலில் சீதை கிடைத்ததைப் போலே, இப் பெரியாழ்வாருக்கும் மகப் பேறில்லாக் குறை நீங்க ஆண்டாளாகிய இப்பெண் மகவு திருத்துழாய்ப் பாத்தியிலே கிடைத்தாள். முளைக்கும் போதே நறுமணத்துடன் முளைக்கும் திருத்துழாயினைப் போலவே இப்பெண் மகவும் எம் பெருமானிடம் பேரன்பு பூண்டு நன்ஞானப் பூங்கொடியாய் வளர்ந்தது ஓர் ஆடி மாதத்துப் பூர நட்சத்திரத்திலே கிடைத்தமையால் திருவாடிப் பூரமே பாவனமான நன்னாளாயிற்று. இந்த நன்னாளை 'இன்றோ திருவாடிப்பூரம்; எமக்காகவன்றோ ஆண்டாள் இங்கவதரித்தாள்' என்று வைணவ ஆசாரியப் பெரியாரான ஸ்ரீமணவாள மாமுனிகள் கொண்டாடிப் பாராட்டினார்.

நாளடைவிலே விட்டுணு சித்தராகிய பெரியாழ்வார் வடபெருங் கோயிலுடையானுக்குச் சாத்தும் பூமாலைக்குரிய மலர்களை அளிக்கும் திருநந்தவன நிலத்தில் அவதரித்த காரணத்

தினாலோ; தமிழணங்கின் தாழ்குழலில் சூடுதற்குரிய பூமாலை போன்ற பாமாலைகளைப் பாடித்தரப் போகின்றாள் என்பதனை முன்கூட்டி உணர்ந்ததாலோ, அப்பொற்பாவைக்குக் 'கோதை' என்று தாமே பெயரிட்டழைத்தார்.

கோதிலாக் கோதை நாச்சியாராகிய ஆண்டாளும், குழவிப் பருவ மழலை பேசியும், சப்பாணி கொட்டியும், மலர் போன்ற கன்னங்களில் முத்தமிட்டு மகிழ்வூட்டியும், கழங்கு, அம்மானை என்ற ஆட்டங்களில் ஈடுபட்டும் தன் பெற்றோரை மகிழ்வித்து வந்தார். திருத்துழாய்ச் செடி நறுமணத்துடன் வளர்வது போலவே கோதையும் மெய்ஞ்ஞானத்துடன் வளர்ந்து வந்தாள்.

ஆறுகள் கடலையே நாடி ஓடுகின்றன. தாமரையும் சூரியனையே நோக்குகின்றது. உயிர்கள் தருமனையே நண்ணுகின்றன. அதே போல கோதையாரின் மனம் ஒண்டாமரையாள் கேள்வனாகிய ஒருவனையே நோக்குவதாயிற்று. மலர்களில் மணமும் தேனும் ஒருங்கமைந்து நிற்றல் போல கோதை நாச்சியாரிடம் மெய்ஞ்ஞானமும், பாம்பணைப் பள்ளியானிடம் பேரன்பும் ஒருங்கமைந்து சிறந்து விளங்கின. இதற்கெல்லாம் காரணம் தந்தையாகிய பெரியாழ்வார் பரமனுக்குப் பூமாலை கட்டும் பொழுதெல்லாம், தன்னருமைச் செல்வியை அருகழைத்து அவளுக்குக் கண்ணன் கதைகளையெல்லாம் நெஞ்சிற் பதியும் வண்ணம் அழகாகக் கூறி வந்தது தான். கிருஷ்ணலீலைகளைச் செவிமடுத்து மகிழ்ந்த ஆண்டாளும் கண்ணபிரானிடம் அளவிறந்த அன்பு மேலோங்க அதுவே பக்தி மிகுந்த காதலாகப் பரிணமித்தது. கண்ணனைக் காண வேண்டும், அவனுடன் பேச வேண்டும், கட்டியணைத்திட வேண்டும் என்றெல்லாம் எண்ணலானாள். அவ்வெண்ணம் மேன்மேல் பெருகி வளர்ந்து உள்ளத்தில் ஆசைக்கனலை மூட்டி விட்டது.

ஒரு சமயம் கோதை மலர் கொய்து வரத் தந்தையாருடன் நந்தவனம் சென்ற போது, அங்கோர் கொழு கொம்பைச் சுற்றிப் படர்ந்திருந்த கொடியினைக் கண்டாள். சில நாட்களுக்கு முன் அதே கொடி, பற்றேதுமின்றித் தரையிலே படர்ந்திருந்ததை நினைவு கூர்ந்தாள். சில தினங்களிலே ஏற்பட்டிருந்த இம் மாற்றத்தை உணர்ந்த கோதை, இது போல் யானும் பற்றி நிற்கும் படியான—பற்றி நின்று படரும்படியான என் கண்ணன் எனக்குக் கிடைப்பானா? என்ற ஏக்கம் அவளுக்குப் பிறந்தது. அதனால்,

'என்றுகொலோ என் கண்ணனைக் கண் குளிரக்
காணும் நாள்'

என்று ஆரற்றலானாள். தோட்டத்தில் காயா மலர்களைக் காணும் போதெல்லாம் 'மாயனே வந்தருளாய்' என்று கூப்பிடுவாள். விண்ணில் கருநிற மேகங்களைக் கண்டவுடன் கண்ணன் நினைவு வர தன் வண்ணம் மாறித் தவிக்கலானாள். பொய்கைகளில் செந்தாமரை மலர்களைக் கண்டபோதெல்லாம் 'இம் மலர்கள் கண்ணனுடைய கண்களைக் காட்டி என்னை மயக்குகின்றனவே' என்று கூறித் தளர்வாளாயினாள். இவ்விதமாகக் காண்கின்ற பொருள்களிலெல்லாம் கண்ணனைக் கண்டு பெரும் பித்தம் பிடித்தவள் போலானாள். கண்ணன் திருப்பெயர்களைக் கேட்ட மாத்திரத்தில் கண்ணீர் ததும்ப நெஞ்சுருகி நிற்பாள்.

பெரியாழ்வார், கோதைக்குத் தந்தையாக மாத்திரமிருக்கவில்லை, ஆசானாகவும் விளங்கினார். அவர் கண்ணன் கதைகளோடு மற்றும் உயர்ந்த தத்துவ ஞானக் கொள்கைகளையும் போதிப்பார். விட்டுணு சித்தராகிய பெரியாழ்வாரும் மற்றும் திருமாலடியார் பலரும் கூடி உரையாடுவதையும், பக்தி பரவசத்துடன் அவர்கள் பஜனை செய்வதையும், மனமுருகிப் பாடும் பாசுரங்களையும், அப் பாடல்களுக்கேற்ப ஆனந்தக் கூத்தாடுவதையும், குழந்தைப் பருவ முதலே பார்த்தவளாதலால், கோதையின் விளையாட்டுக்களும், விருப்பமும் இலட்சியமும் எல்லாம் பக்திப் பரவசமூட்டுவனவாகவே முதிர்ந்து வளர்ந்தன. அவளும் திருமாலடியார்களான பக்தர்கள் குழுவில் இணைந்து ஆடிப்பாடி அகமிக மகிழ்வதைக் கண்ட பெரியாழ்வாரும் பெருமகிழ்வடைந்தார்.

தன் மகள் ஞானப்பூங்கொடியாக வளர்ந்து வருவதைக் கண்டு பேருவகை கொண்ட விட்டுணு சித்தர் மனம் பூரித்து, தம்மையும் விஞ்சிநிற்கும் ஆண்டாளின் ஞான, பக்தி பரவசங்களைக் கொண்டாடினார். ஸ்ரீ வில்லிபுத்தூர் வாழ்வாரனைவரும் போற்றும் வகையில் ஆண்டாளின் அழகும், உருவும், பேச்சும், செய்கையும் பெருமிதத்துடன் விளங்கின.

''கோல் தேடி ஓடும் கொழுந்ததே போன்றதே
மால் தேடி ஓடும் மனம்''

— என்ற நம்மாழ்வாரின் அநுபவம் ஆண்டாளுக்கும் ஏற்பட்டது. மாயோனாகிய கண்ணன் மேல் காதல் பெருகி வளர்ந்தது. இந்த மனநிலையில் அந்த மாயக்கள்வன் மாமாயனுக்குத் தான்

ஏற்றவள்தானா? என்ற கேள்வியும் அவளது உள்ளத்தில் அரும்பியது. ஒரு நாள் நிலைக்கண்ணாடியில் தன் உருவத்தைக் கண்டு மகிழ்ந்து கொண்டிருந்தாள் கோதை. அப்போது அவள் மனதில் சிறந்த பட்டுப் பீதாம்பரங்களை உடுத்திக் கொண்டும், நவரத்தின மணிமாலைகளுடன் முத்து வடங்களை யணிந்து கொண்டும், தலையில் பலவகைச் சுட்டிகளைச் சூடிக் கொண்டும், மயிற் பீலிகளாலலங்கரித்துக் கொண்டும் மனோ கரனாய் விளங்கும் அம்மாயவனைப் போல் நாமும் அலங்காரஞ் செய்து கொண்டாலென்ன என்ற எண்ணம் எழுந்தது. தன் எண்ணத்தை நிறைவேற்றத் துணிந்தனள் ஆண்டாள்.

உள்ளே சென்று நீலநிறப் பட்டாடையை உடுத்தி காறை முதலான ஆபரணங்களைக் கழுத்திலணிந்து, கைகள் நிறைய வளையல்களையும் அணிந்து அவை ஓசையெழ, குலுங்க நடந்து பார்த்து உளம் பூரித்தாள். கொவ்வைச் செவ்வாய் திருத்தினாள். இயல்பாகவே சிவந்த நிறமுடைய அவளது வாய் மேலும் பொலிவுடன் திகழ்ந்தது. ஒருவாறு தேறித் தன் காதலன் கண்ணன் பெயரைப் பலவாறு சொல்லி மகிழ்ந்து ஆனந்தக் கூத்தாடி மகிழ்ந்தாள். இச்செய்தியைப் பெரியாழ்வாரே பேசக் காண்போம்.

"காறை பூணும், கண்ணாடி காணும், தன்
கையில் வளை குலுக்கும்
கூறை உடுக்கும் அயர்க்கும், தன்
கொவ்வைச் செவ்வாய் திருத்தும்
தேறித் தேறி நின்று ஆயிரம் பேர்த்
தேவன் திறம் பிதற்றும்
மாறில் மாமணி வண்ணம் மேல் இவள்
மால் உறுகின்றாளே"

என்பதே அந்த அழகிய அழியாச் சொல்லோவியம்.

கோதையாரின் இத்தகைய செய்கைகளும் மனநிலையும் ஆழ்வாரின் உள்ளத்தில் பெருங்கவலையைத் தோற்று வித்ததில் வியப்பில்லை. பெரியாழ்வாரின் கவலையெல்லாம் இம்மங்கைக் கேற்ற மணாளன் கிடைக்க வேண்டுமே என்பதுதான்.

## சூடிக் கொடுத்த சுடர்க்கொடி

கோதையின் உருவும் திருவும் வளர்ந்ததற்கேற்பவே அவளது திருமாலன்பு பெருகி வளர்ந்தது. ஓங்கியுலகளந்த உத்த மனிடத்துப் பேரன்பு பூண்ட அம்மங்கை நல்லாள் ஒருநாள்

தந்தையாகிய பெரியாழ்வார் வீட்டில் இல்லாத சமயம் பார்த்து, அவர் வடபெருங்கோயிலுடையானுக்குச் சாத்துவதற்காகத் தொடுத்து வைத்திருந்த பூமாலைகளை எடுத்து அணிந்து கொண்டு, புட்பாலங்கார பூஷிதையாய் நிலைக் கண்ணாடியின் முன் நின்று தன் அழகை ரசித்துப் பார்த்தாள் கார்முகில் வண்ணனாகிய கண்ணனுக்குத் தான் ஏற்புடையவள்தானா? என்று தன்னைத்தானே கேட்டுக் கொண்டு, தன் உள்மனத்தின் கிடக்கை யாது என உசாவினாள். ''நம்பிக்கேற்ற நங்கை நீயே'' என்று அவளது உள்ளம் சொல்லியது. அகமிக மகிழ்ந்து நின்ற அம்மாதரசி தந்தை திரும்பிவரும் நேரமாயிற்று என்பதை உணர்ந்து அவசரம் அவசரமாகத் தான் சூடி மகிழ்ந்த பூமாலை களைக் களைந்து பூக்குடலையில் முன்பு போலவே வைத்து விட்டாள். இவ்வாறு சூடிக்களைந்து வைக்கும் வழக்கம் தொடர்ந்து நிகழ்ந்து வந்தது. ஆண்டாள் சூடிக் களைந்து வைப்பதை அறியாதே ஆழ்வார் அம்மாலைகளைப் பெரு மானுக்குச் சமர்ப்பித்து வந்தார்.

இவ்விதமாக எம்பெருமானுக்குச் சாத்தப்படும் மலர் மாலைகள் நறுமணம் மிக்கிருப்பதாகவும், மாலைகளைச் சூடும் எம்பெருமான் திருக்கோலம் முன்னிலும் பேரொளி பெற்றுத் திகழ்வதாகவும் அர்ச்சகர்களும், பிறரும் கண்டு வியந்து இதற்குக் காரணம் விட்டு சித்தரின் பரம பக்தியே என எண்ணினர். இதனால் ஆழ்வாரிடம் அவர்கள் கொண்டிருந்த நன்மதிப்பும் பக்தியும் மேலும் பன்மடங்காகப் பெருகலாயின. நடப்பது இன்னதென்பதை ஆழ்வாரே அறியாதபோது மற்றை யோர் எங்ஙனமறிவர்!

உண்மையாகவே தன்னிடம் பேரன்பு கொண்ட பக்தர்களை உலகுக்குக் காட்டித் தரவும், அவர்களுக்குப் பேரருள் புரியவும் எம்பெருமான் கையாளும் வழிவகைகள் பற்பல. அதிசயங்களை விளைவித்து அற்புதங்களை நிகழ்த்தி, தன்னடியார்களை உய்வித்து அதன் மூலம் உலகத்திற்கேஉய்யும் வகை காட்டும் எம்பெருமான், கோதையின் கோதற்ற அன்பினை வெளிப்படுத்த எண்ணினான் போலும்!

ஒரு நாள் கோதை வழக்கம் போல மாலைகளையணிந்து நிலைக்கண்ணாடியில் அழகு பார்த்துக் கொண்டிருந்த சமயத்தில் வெளியே சென்று திரும்பிய பெரியாழ்வார் கண்டு விட்டார். செய்வதறியாது கோதையும் திகைத்து நிற்க, ஆழ்வார் பெரிதும் வருந்தி, ''கோதாய்! என்ன காரியம் செய்யத் துணிந்தாய்;

எம்பெருமான் திருவடிகளுக்கு அபசாரம் செய்து விட்டாயே, இனி மலர் கொய்து மாலை கட்டி எடுத்துப் போய் சமர்ப்பிக்கவும் போதிய அவகாசம் இல்லையே அம்மா! நான் என்ன செய்வ தென்றறியாமல் அலமருகின்றேனே!'' எனப் பலவாறு சொல்லி வருந்தி சந்நிதிக்கு மாலைகளை எடுத்துச் செல்லாமல் ஆழ்ந்த வருத்தத்தில் இருந்து விட்டார். சிறிது நேரம் சென்றது.

மாலையில் திருவாராதனத்திற்கான வாத்தியங்களின் ஒலி கேட்ட ஆழ்வார் நந்தவனம் சென்று கிடைத்த மலர்களைக் கொய்து அவசரம் அவசரமாக மாலை கட்டி எடுத்து போய் எம்பெருமானுக்குச் சமர்ப்பித்துப் பின், தான் அபசாரப்பட நேர்ந்ததே என்று மனம் கசிந்து உருகி அபசாரங்களைப் பொறுத் தருள வேணும் என்று பிரார்த்தித்து வீடு திரும்பினார். அன்றிரவு ஆழ்வார் கண்ணுறக்கம் கொள்ளவில்லை. ஆண்டாள் செய்த அபசாரச் செயலை எண்ணியெண்ணி வருந்திப் புரண்டு புரண்டு படுத்தும் பெருமூச்செறிந்து கொண்டுமிருந்தார். வைகறைப் போதில் அவரறியாமலே கண்ணயர்ந்து விட்டார்.

அந்நிலையில் வடபெருங்கோயிலுடையான் ஆழ்வாரது கனவில் காட்சி தந்து, ''ஆழ்வீர், நும் திருமகளாகிய சுடர்க் கொடியாம் கோதை சூடிக்களைந்த திருமாலைகளுக்கு ஆசைப் பட்டன்றோ நாம் இங்கு பள்ளி கொண்டிருப்பது; நமக்காகப் பூத்திருக்கும் கற்பக நறுமலரல்லவோ கோதை; அவள் சூடிக் களைந்தனுப்பும் மாலைகளே நம் மனத்துக்குகந்த நறுமணம் மிக்கவை. ஆதலின் நாளை முதல் அவள் சூட்டிக் கொண்டு களைந்த மாலைகளையே நமக்குக் கொணர்ந்து சமர்ப்பியும்'' என்று அருளி மறைந்தான்.

தூக்கம் கலைந்த பின் ஆழ்வார் 'என்னே அற்புதம்! எனக்குச் சேவை சாதித்த அந்த நீல மேக சியாமளனான கண்ணன் எங்கு மறைந்தான்? நான் கண்டது வெறுங் கனவு தானா!' என்று வியந்தார். கண்களை மூடிய வண்ணம் தியானித் தார். அக் கருநிறக் கண்ணன் மறுமுறை வந்திலன்; மீளவும் நினைத்து நினைத்து உளங்குழைந்தார். நெஞ்சென்னும் உட் கண்ணால் அக்கண்ணனைக் காண முடியவில்லையே என நினைந்துருகினார். கோதையின் பெருமையை எம்பெருமான் உணர்த்த உணர்ந்து 'என்ன பேறு பெற்றேன்! என்ன பேறு பெற்றேன்!' என்று தமக்குத் தாமே சொல்லிக் கொண்டு மகிழ்ந்தார். கோதையின் பெருமையால் தமக்குப் பேரருள் பரிசல்லவா கிடைத்தது என்றெண்ணி ஆனந்த சாகரத்தில் அழுந்தினார்.

பட்டர்பிரானாகிய ஆழ்வார் விரைவாக கோதையின் முன் வந்து நின்று ஒருகணம் அவளை உற்று நோக்கினார். "அம்மா கோதாய். நீ என்னை மட்டும் ஆளவில்லை; வடபத்ரசாயியான அந்த, ரங்கமன்னாராம் எம்பெருமானையே ஆண்டு கொண்டாய்" என்று சொல்லி அவளது பெருமையை நினைந்து வணங்கப் போனார். கோதை துணுக்குற்று, தந்தையே, என்ன இது? என்னை நீர் வணங்கலாகுமா?' என்று அவரைக் கட்டி அணைத்தெடுத்து நிறுத்திக் கண்ணீருகுத்தாள். அப்போது ஆழ்வார் "அம்மா கோதாய், நீ எம்பிரானுக்காகவே பூத்த கற்பக நறுமலர், நீ சூடிக் களைந்த மாலைகளையே எம்பெருமான் திருவுள்ளம் பற்ற விரும்புகிறான். நீ என்னை மாத்திரமன்று— இந்த உலகத்தையே மாத்திரமுமன்று—சர்வலோக சரண்யனான ஆண்டவனையே ஆண்டு விட்டாய், எனவே இன்று முதல் உனது பிள்ளைப் பெயராகிய கோதை என்பது மாறி 'ஆண்டாள்' என்றே உலகத்தாரால் அழைக்கப்படுவாய். அன்றியும் நீ சூடிக் களைந்த திருமாலைகளையே இறைவன் விரும்புவதால் 'சூடிக் கொடுத்த சுடர்க்கொடி என்றும் போற்றப் படுவாய்" என்று சொல்லி ஆனந்த சாகரத்திலமிழ்ந்தார்.

அன்று முதல் நறுமணமிக்க நாண் மலர்களால் அழகுற மாலைகளைத் தொடுத்து, அவற்றை ஆண்டாள் சூடிய பின்பே எடுத்துச் சென்று வடபெருங்கோயிலுடையானுக்குச் சாத்தி, மங்களா சாசனஞ் செய்து பல்லாண்டுபாடி வரலாயினார். இறைவன் வெளிப்படுத்திய இவ்வைபவத்தால் கோதைக்கு சூடிக் கொடுத்த சுடர்க் கொடி என்றும், ஆண்டாள் என்றும் சிறப்புப் பெயர்கள் நிலை பெற்று வழங்கி வரலாயின.

## பாடவல்ல நாச்சியார்

சூடிக் கொடுத்த சுடர்க் கொடியாகிய ஆண்டாள் பூமாலைகளை மட்டுமேயன்றி பாமாலைகளையும் பாடிக் கொடுத்து பாடவல்ல நாச்சியார் என்றும் பெயர் பெற்றார். பாவை நோன்பு என்பதை அடிப்படையாகக் கொண்டு ஆண்டாளால் இயற்றப்பட்ட திருப்பாவை முப்பது பாசுரங்களும், ஆற்றாமையாலெழுந்த உள்ளத்து வேட்கையை வெளிப்படுத்தும். அங்ஙனமே மற்றொரு திவ்வியப் பிரபந்தமான நாச்சியார் திருமொழியில் இறைவனைக் குறித்துப் பாடப்பட்ட 143 பாசுரங்களுடன் சேர்ந்து மொத்தம் 173 பாசுரங்கள் ஆண்டாள் அருளிச் செய்தவையாகும். இவற்றுள் பாவை நோன்பு பற்றிய சில செய்திகளும் இவ்விடத்தில் குறிக்கப்படுவது பொருத்தமாகும்.

# பாவை நோன்பு—தைந்நீராடல்

நோன்புகள் ஒரு பயன் கருதி மேற்கொள்ளப்படும் விரதமே யாகும். நோன்புகள் முன்னோரால் அனுட்டிக்கப்பட்ட முறை யிலேயே தற்காலத்திலும் அனுட்டித்து வரப்படுகின்றன. நோன்பு நோற்பார் பின்பற்ற வேண்டிய விதிமுறைகள் பல, வரை யறுக்கப்பட்டுள்ளன. தத்தம் நோக்கம் ஈடேற கட்டுத் திட்டங்கள் பல தீவிரமாகக் கடைப்பிடிக்கப் படுகின்றன.

உலக மாந்தர் யாவருமே தம்தம் நிலையிலிருந்து மேலும் உயர்வு பெறவே விரும்புவதைக் காண்கிறோம். வாழ்க்கை நிலையில் உயர்வடைவது மாத்திரமேயல்லாமல் மறுமைக்கும் வேண்டிய நன்மையை இம்மையிலேயே இயற்றவும் முயல்கின் றனர். ஆக இம்மை மறுமை இவ்விரண்டினுக்கும் தேவையான நற்கருமங்களில் நாட்டம் செலுத்துகின்றனர். அவையே விரதம் என்றும் நோன்பு என்றும் குறிப்பிட்டுப் பேசப் படுகின்றன. விரதமும் நோன்பும் வேறுபட்ட தன்மைத்தாய் அனுசரிக்கப் பட்டாலும் அவற்றின் குறிக்கோள் ஒன்றேதான். தம்முடைய உட்கிடக்கையாகிற எண்ணங்கள் நிறைவேறும்படி அருள்புரிய வேண்டும் என்று இறைவனை வணங்கி வழிபடுதலே விரதம், நோன்பு இவற்றின் சிறப்பு நோக்கங்களாம். புனித நீராடவும், புனித தலங்களை வழிபடவும் யாத்திரை செய்வதும், முடி வளர்த்து காணிக்கை செலுத்துவதாக நேர்ந்து கொள்வதும், இது போன்ற பலவும் நோன்புகளே என்னத் தட்டில்லை. பௌர்ணமி, கிருத்திகை, திருவோணம் கூடிய நாட்களில் ஒரே வேளை உணவுண்டு இருப்பது விரதம். ''காப்பது விரதம்'' ''நோனென்பது கொன்று தின்னாமை'' என்றனள் ஔவை. குறிப் பிட்ட காலங்களில், குறிப்பிட்ட இடத்தில் தனித்தோ ஒன்று கூடியோ நோன்பு நோற்றல் வழக்கத்திலுள்ளது. மனித நாக ரீகத்தின் பிறப்பிடங்கள் நீர்வளம் மிக்க ஆற்றங்கரையிலுள்ள ஊர்களே என்பது சரித்திர ஆராய்ச்சியாளர் கண்ட முடிவு. நோன்பு நோற்போர் முதன்முதலாக நீராடி உடல் தூய்மை செய்த பின்னரே பிற பூசனைச் செயலில் ஈடுபடுவர். எனவே

நீராடிய பின்பே கடவுள் வழிபாடு என்ற நடைமுறை வந்ததென லாம். அந்த நீராட்டம் பற்றிய தொன்மையான சிறப்பினைச் சிந்திப்போம்.

நோன்புகள் வைணவம், சைவம் முதலிய மதச்சார்புடை யனவே. இவை முன்னோர் அனுட்டித்து வந்த வழியிலேயே பின்னோராலும் அனுட்டித்து வரப்படுவதைக் காண்கிறோம். இதேபோன்ற நோன்புகள் முகமதிய மதத்தினராலும், கிறித்துவ மதத்தினராலும் கூட அனுட்டிக்கப்படுகின்றன. திருக்குரானிலும் பைபிளிலும் நோன்பு நோற்றல் பற்றிய செய்திகள் உள்ளனவாம். நாம் எடுத்துக் கொண்ட தலைப்பாகிய நீராடல் என்பதற்கேற்ப இந்து சமயமும், சங்ககால நூல்களும் தெரிவிக்கும் கருத்துக்களை இனி காண்போம்.

வேதத் தொடர்புடைய யாக யக்ஞங்கள் போன்றவை அல்ல நோன்புகள். ஆனால் மூதறிஞர்களாகிய முன்னோர்களின் ஆசி யும் அனுமதியும் பெற்று இவை சம்பிரதாயமாக வளர்ந்து விட்டவை. அ த னா லே யே ஸ்ரீகோதைப் பிராட்டியாகிய ஆண்டாள் ''மேலையார் செய்வனகள்'' என்று திருப்பாவையில் சுட்டிக் காட்டினாள். முன்னோர், சிறந்த ஆதாரங்களின்றி எதை யும் அனுமதிக்க ஒருப்படார். எனவே அந்த ஆதாரங்கள் எவை என்பதையும் காண முயல்வதில் தவறேதுமில்லை. மார்கழி நோன்பு என்றும் தைந்நீராடல் என்றும் குறிப்பிடப்படுகிற இதற்கு ஆதாரமாயிருப்பவை திருப்பாவையும் திருவெம்பாவை யுமே. திருப்பாவை முப்பது பாசுரங்களும் ஸ்ரீஆண்டாளின் திரு வாக்கு. மாணிக்கவாசகரது பாடல்களே திருவெம்பாவை இருபது பாசுரங்களாகும். ''மாதங்களில் நான் மார்கழி'' என்று கீதை யில் கண்ணனாகிய ஸ்ரீபார்த்தசாரதி தன்னையே குறிப்பிட்டுக் கூறியிருக்கிறான். மார்கழி மாதமோ நடுக்கும் குளிரும் பனியும் மிகுந்த ஒன்றாகும். மார்கழி மாதத்தில்தான் திருப்பாவைக்கும் திருவெம்பாவைக்கும் மிகமிக ஏற்றம் தந்து பக்தர்கள் ஓதுகின் றனர். திருக்கோயில்களில் சிறப்பு வழிபாடுகள் வைகறைப் பொழுதில் நடைபெறுகின்றன. மற்ற மாதங்களில் பொழுது விடியும் முன்பே வழிபாடுகள் நடத்தப்படுவதில்லை. இதனால் மார்கழி மாதமே ஏற்றம் பெறுகின்றது.

இம்மாதத்தில் விடியற்காலையில் எழுந்து திருக்குளத்தில் குடைந்து குடைந்து நீராட வேண்டுமென்றால் குளிரைப் பொருட்படுத்தாத மனவுறுதியும் திடமும் தேவைதான். இவ்விடத்தில் ஓர் உண்மையை உணர்வது பொருத்தமாக

Indian ... Study 117372

இருக்கும். அதாவது குளிர் மிகுந்த காலத்தில் குளிர்ந்த நீர் நிறைந்த தடாகத்தின் கரையில் நின்றால்தான் குளிருமேயொழிய நீரில் அமிழ்ந்தபிறகு அக்குளிர் வருத்துவது இல்லை என்பதுதான். நீரை விட்டுக் கரையேறிய பின்பு குளிர் உறைக்கும், அப்போது கரையேறியிருக்க வேண்டாமோ என்றும் தோன்றுவது இயல்பு.

இப்படிப்பட்ட மார்கழித் திங்களில் மதி நிறைந்த நன்னாளாகிய முழுமதி கூடிய நன்னாளில் ''நீராடப் போதுவீர் போதுமினோ'' என்று நீராட்டத்துக்கு வரவிருப்பமுடைய பெண்களெல்லாரும் திரண்டு வாருங்கள் என அழைக்கின்றாள் ஆண்டாள். இதனால் நோன்பு நோற்க விருப்பமுடைய பெண்டிர் பலரும் கூடிச்சென்றே நீராடுவர் என்பது பெறப்படுகிறது. திருப்பாவையின் முதற் பாசுரத்தில் இவ்வாறு ''ஆயர்பாடிச் செல்வச் சிறுமீர்காள்'' என்றழைத்து அதே பாசுரத்தின் ஈற்றடியில் ''நாராயணனே நமக்கே பறை தருவான்'' என்று இறைவனாகிய கண்ணபிரானது அருள் நிச்சயமாக நமக்கு கிட்டப் போகிறது என்கிறாள் ஆண்டாள். தமது இந்த நோன்பினைப் பாரோர் புகழ்ந்து பேசுவர் என்பதனையும் தெரிவிக்கிறாள். குடைந்து படிந்து நீராடியபின், மணலால் செய்யப்பட்ட காத்தியாயனி என்னும் பாவைக்குப் பூசனையியற்றி நிவேதனம் செய்து, அவரவர்க்கு விருப்பமானவற்றை அருளும்படி வேண்டிக்கொள்வது வழக்கம்.

பாவை நோன்பு நாடு செழிக்க நல்ல மழை பொழிய வேண்டும் என்றும், வழிபடும் கன்னிப் பெண்களுக்கு நல்ல கணவன்மார்களை அருள வேண்டும் என்றும், இம்மையில் எல்லாவகைச் செல்வங்களையும் பெற்று நல் வாழ்க்கை அமைய வேண்டும் என்றும் பலபடியாக வேண்டிக்கொண்டு மார்கழி மாதம் முப்பது நாட்களிலும் விடியற்காலையில் பொழுது புலரும் முன்பே நீராடி நோன்பு நோற்பர் என்பது திருப்பாவை, திருவெம்பாவை நூல்களால் நன்கு விளங்குகிறது. இப்பாடல்கள் எம்பாவாய் என்ற முடிவினைப் பெற்றிருத்தலால் பெண்பாலர்க்கே உரிய நோன்பென்பதை அறிய முடிகிறது.

உரிய காலத்தில் திருமணம் நிறைவேறாமல் நிற்கும் பெண்களுக்குத் திருமணம் கைகூட உபாயமாகக் காத்தியாயனி விரதம் கூறப்பட்டுள்ளது. 'ஏ, காத்தியாயனீ! மகாமாயே! மகாயோகினி! ஈசுவரீ உன்னை வணங்குகிறோம். எங்களுக்கு நந்தகோபரின் மகனாகிய கண்ணனை நாயகனாக அருள்வீராக'' என்று பொருள்படும் சுலோகம் பாகவதத்தில் காணப்படுகிறது. கண்ணனே கணவனாக வேண்டும் என்று பாகவதம் காட்டிய கருத்தே,

வைணவ சமயக் கோட்பாடாயின் ''எங்கொங்கை நின்னன் பரல்லார் தோள் சேரற்க'' என்ற திருவெம்பாவை அடிகளை நோக்குமிடத்து சைவசமயக் கோட்பாட்டின் வேறுபாட்டினையும் காண முடிகிறது.

**வையத்தில் வாழ்ச்சி—வானாட்டிலில்லை.**

திருப்பாவையின் இரண்டாம் பாடலில் 'வையத்து வாழ்வீர் காள்' என விளித்துப் ''பாவைக்குச் செய்யும் கிரிசைகள் கேளீர்'' என்று நோன்பிற்குரிய கோட்பாடுகளைக் கூறுகின்றாள் கோதை. அவை பரமனடிபாடுதல், நெய், பால் இவற்றை விலக்குதல், நாட்காலே நீராடுதல், மையிடுதல், மலர் சூடல், முதலிய அலங்காரங்கள் செய்து கொள்ளாதிருத்தல், செய்யத்தகாத செயல்களை அறவே ஒழித்தல்' தீய புறங்கூறிப் பேசுவதைத் தவிர்த்தல் முதலியவற்றோடு எப்போதையும் விட அதிகமான தான தருமங்களைச் செய்தல் முதலியனவாகும். நோன்பிற்கு உரியதான இந்தக் கட்டுப்பாடுகள் நோன்பு நோற்று முடியும் நாளில் நீங்கி விடுவதையும் ஆண்டாள் தன் திருப்பாவையின் இறுதியில் கூறுவதைக் காணலாம். ஆண்டாள் திருப்பாவையின் இரண்டாவது பாட்டில் செய்ய வேண்டியவை தவிர்க்க வேண்டியவை பற்றிக் கூறும் வரிகளைக் காண்போம்.

''பரமனடிபாடி நெய்யுண்ணோம் பாலுண்ணோம்.
நாட்காலே
நீராடி மெய்யிட்டெழுதோம் மலரிட்டு நாமுடியோம்
செய்யாதென செய்யோம் தீக்குறளை சென்றோதோம்
ஐயமும் பிச்சையும் ஆந்தனையும் கைகாட்டி
உய்யுமாறு எண்ணி உகந்து''

என்பனவே அவ்வரிகள்.

நீராடலுக்கு உகந்த காலம் விடியற்காலை நேரம் என்பதும் இப்பாசுரத்தால் தெரிவிக்கப்படுகிறது. இதனை ஆண்டாள் திருப்பாவை இரண்டாவது பாட்டில் ''நாட்காலே நீராடி'' என்று குறிக்கப்படும் வரியால் உணரலாம். இந்தப் பாவை நூலில் மொத்தம் ஏழு இடங்களில் இந்த நீராட்டம் பற்றிய சொல் எடுத்தாளப் பட்டுள்ளது. அவை முறையே பாசுர எண்கள் (1) நீராடப் போதுவீர் (2) நாட்காலே நீராடி (3) சாற்றி நீராடினால் (4) மார்கழி நீராட (13) குடைந்து நீராடாதே (20) எம்மை நீராட்டு (26) மார்கழி நீராடுவான் என்பனவாகும். இதில் 2, 26 ஆகிய இரண்டினில் மட்டுமே நீராட என்ற சொல் குளியலைக் குறிக்கும். மற்ற ஐந்து இடங்களிலும் கண்ணபிரா

னோடு சேர்ந்து கலந்திருக்க வேண்டும் என்ற பொருளிலும் அமைந்திருப்பதாகப் பெரியோர் கூறுவர். உரையாசிரியர்களான பெரியவாச்சான் பிள்ளை அழகிய மணவாளப் பெருமாள் நாயனார் போன்றவர்கள் திவ்வியப் பிரபந்தத்தில் மற்றும் பல இடங்களில் வந்துள்ள சொற்களின் பிரயோகத்தை எடுத்துக் காட்டி இக்கருத்தைத் தெளிவு படுத்தியுள்ளார்கள்.

பழந்தமிழ் இலக்கியங்களில் 'சுனையாடல்' என்ற சொல்லும் கையாளப் படுகின்றது. அச்சொல்லின் உண்மைப் பொருள் வேறாயினும் நீராட்டத்தையும் இவ்வாறு குறித்தனர் என்று கொள்வது பொருத்தமுடையது. திருக்கோவையார், நற்றிணை முதலிய பழந்தமிழ் நூல்களிலும் நீராட்டம் பற்றி குறிப்புகள் உள்ளன.

வடமொழியில் சம்ச்லேஷம்=சேர்க்கை; விச்லேஷம்=பிரிவு என்ற சொற்கள் உள்ளன. சம்ச்லேஷம் என்றாலே பகவத் சம்ச்லேஷம் (பகவோனோடு கூடுகை) அல்லது கிருஷ்ண சம்ச்லேஷம் (கண்ணனோடு கலவியை விரும்பி அதை அடைய உபாயமாகவே (வழியாகவே) நீராட்ட நோன்பு நடைபெற்றது என்பதில் தவறேதுமில்லை. "கண்ணனுக்கே ஆமது காமம்" என்று அருளிச் செய்திருப்பதால் பகவத்காமம் குற்றமுடையதாகாது. இம்முறையில் பார்க்கும் போது நீராட்டம் என்பது கண்ணனை அடைவதையே நோக்கமாகக் கொண்டமைந்த ஒன்றாதலின் சிறப்புடைத்தாகின்றது.

குளிர்ந்த நீர் நிறைந்த பொய்கையில் நீராடி, உடலும் உள்ளமும் குளிர கிருஷ்ண சம்ச்லேஷமாகிற (கண்ணனோடு கூடுதலாகிற) கலவியை வேண்டிய பெண்களின் ஒருமைப்பட்ட பக்தி நெறியை உணர்வதால் கடவுளின் அருள் வெள்ளமாகிற நீரில் அமிழ்ந்து படிய ஆவலுண்டாவது திண்ணம். பாவை நோன்பு பற்றிய திருவெம்பாவைப் பாடல்களிலும் திருப்பாவையைப் போன்றே மழையை வேண்டி நோற்பதாக வருணிக்கப் படுகிறது. திருப்பாவையில் "ஆழி மழைக் கண்ணா" என்கிற பாசுரமும் "முன்னிக்கடலைச் சுருக்கி" என்ற திருவெம்பாவைப் பாசுரமும் நோக்கத்தக்கன.

மணிவாசகப் பெருமான் மேகத்தை விளித்து; "மேகமே! நீ கடல்நீரை நிரம்ப உண்டு, உமையவளை ஒத்து விளங்கி, அப் பிராட்டியின் சிற்றிடைபோல மின்னி பொற்சிலம்பொலியென ஒலி செய்து மலைமகளின் புருவங்கள் போல வில்லையுடைத்தாகி, பிராட்டியைப் பிரியாத இறைவனின் இன்னருள் அவனடியார் மீது சுரப்பது போல நீரைச் சொரிந்தருள்க" என்பது

நயந்தின்புறத் தக்கது. அன்றியும் திருப்பாவையின் பதினைந்தாம் பாசுரமும் திருவெம்பாவையின் நான்காவது பாசுரமும் பொருள் நடை ஒலிநடை இவற்றில் ஒப்புடையனவாயிருப்பதைக் காணலாம்.

''அன்றிவ்வுலகமளந்தாய்'' என்கிற திருப்பாவைப் பாசுரத்துடன் ''போற்றியருளுக'' என்கிற திருவெம்பாவை 20 ஆம் பாசுரமும் ஒப்புமையுடையதாயிருக்கின்றது. அன்றியும் திருவெம்பாவையிலும் ''சீதப்புனலாடி'' ''இருஞ்சுனை நீராட'' ''பங்கய பூம்புனல் பாய்ந்தாட'' என்பன போன்ற சொற்பிரயோகங்களால் நீராடல் என்கிற வழக்கம் சைவ வைணவ பேதமின்றிப் பின்பற்றப்பட்டதென்பது தெளிவு.

இவ்வண்ணமாக நீராட்டம் என்பது பற்றி விரிக்கப் புகில் பெருகும். உலக வாழ்க்கை நடைமுறையிலும், ஒரு பொருளை உழைத்துப் பெற்றவனுக்கே அப்பொருளின் மேன்மையும் அருமையும் புலப்படும் என்பது உண்மை. அங்ஙனமே ''உலகம் யாவையும் தாமுள வாக்கலும் நிலை பெறுத்தலும் நீக்கலும் நீங்கலா அலகிலா விளையாட்டுடையான்'' என்று கூறப்பட்ட இறைவனின் அருளை இறைவியை முன்னிட்டு நோன்பு நோற்றுப் பெற்றார்க்கேயன்றி, மற்றையோர்க்கு அதன் அருமை புலப் படாது போம். ஆகவே நம்போல் வார்க்கு நீராடுதல், நோன்பு நோற்றல், போற்றிப்பாடுதல், ஏத்திஇறைஞ்சுதல், ஆட்செய்தல் முதலியன உபாயமாகத் தக்கனவாம். இவற்றை அவரவர் இயன்ற வரை பின்பற்றி ''நாராயணனே நமக்கே பறை தருவான்'' என்று அமைதியுடனிருப்பது ஒன்றே வழி.

''நீர் நுமது என்றிவை வேர் முதல் மாய்த்து, இறை சேர்மின் உயிர்க்கு'' என்று இறைபற்றல் ஒன்றினையே உய்யும் வழி எனக் கொண்டு ''தற்செயலழிந்த தகைமை''யுடனிருப்பதே நன்று

## ஆண்டாளின் மனோ நிலை

ஆண்டாள் உலகியலில் காணக்கூடிய சராசரி மனிதர்களைப் போலவே பருவ வளர்ச்சிக்கேற்ப உடலால் அழகால் உணர்ச்சியால் மாத்திரமே வளரவில்லை. ஞானம், பக்தி, வைராக்கியம் முதலியனவும் முதிர்ந்து வளர்ந்து வந்தாள். அவளுக்குத் தான் காதலித்த கண்ணனை அடைய வேண்டும் என்ற வேட்கை மிக மிக அதிகமாயிற்று. அவனைப் பிரிந்து தரித்திருக்க அவளால் சிறிதும் முடியவில்லை; கூடிக்களிக்கவும் முடியவில்லை; மறந்து விடவும் முடியவில்லை. சில சமயங்களில்—ஏன்

பல சமயங்களில் அம்மாயக் கண்ணன் அவள் மனக் கண்முன் தோன்றுவான்; அலைக்கழிப்பான்; மறைவான். அணைந்து மகிழ விரும்பிய ஆண்டாளுக்கு அவன் திருமேனி கிடைக்க வில்லை. அக்கண்ணனை அறிய விரும்பிய அவளுக்கு அப்பரம் பொருளின் உண்மைப் பெருமை புலப்படவில்லை. ஆயினும் அவள் சித்தத்தில் அவன் கோயில் கொண்டிருந்தான். மின்னலின் கீற்றுப்போல ஒரு எண்ணம் தோன்றியது. தன் தந்தையார் சொன்ன கண்ணன் வரலாற்றுக் கதைகள் நினைவில் வந்தன. கண்ணன் காலத்தில் பல்லாயிரம் கோப கன்னிகைகள் அவனது கலவி கிடைக்கப் பெறாமல் வருந்தினார்கள். அவர்களது உள்ளத்தில் நிறைந்த அன்புப் பெருக்கு அவனை அவர்களோடு சேர்த்து வைத்தது. கானஞ்சேர்ந்து கூடியிருந்து குளிர்ந்து விளையாடும் பேறுபெற்றனர். கண்ணனைக் கட்டியணைத்து கலந்து விளையாட என்ன நோன்பு நோற்றார்களோ அக்கோபியர்! அவர்களைப் போலவே நானும் ஏன் நோன்பு நோற்கக் கூடாது? என்ற எண்ணம் எழுந்தது.

அழகுத் தெய்வமாகிய கண்ணனின் தோற்றம் அடிக்கடி தோன்றினாலும், கால வெள்ளத்தைப் பின்னோக்கிக் கடந்து சென்று அவனது அவதார காலத்தை எட்டிப் பிடிப்பது எப்படி? இது தன்னால் இயலாத காரியம் என்பதை உணர்ந்தாள். ஆயினும் கண்ணன் நடமாடிய பிருந்தாவனமும், குடைந் தாடிய யமுனையாறும், குடையாய்ப் பிடித்த கோவர்த்தன மலையும் இன்றளவும் கட்புலனாகக் காட்சி தருகின்றனவன்றோ! அவற்றையெல்லாம் கண்டு ஆறுதலடைந்து ஒருவாறு அவனையே பெற்றதாக பாவித்து மகிழலாம் என நினைத் தாள். இந்த பாவனைத் தோற்றத்தால் நிகழும் இன்பத் தையே 'பாவனாப்பிரகர்ஷம்' என்று வட நூலார் கூறுவர்.

என்றோ துவாபரயுகத்தில் நடந்த நிகழ்ச்சிகளைக் கற்பனை செய்து கொண்டு, பிற்காலத்தில் கலியுகத்தில் பிறந்த ஆண்டாள் எவ்வாறு கண்ணனை அடைய முடியும்? என்ற கேள்வி எழுகின்றது.

இதற்கு **அனுகாரத்தாலே**—ஒருவித பாவனா சக்தியாலே ஆண்டாள் அப்பேற்றினைப் பெற முடிந்தது என்பதே விடை. அந்த அனுகாரமாகிய பாவனைதான் என்ன? என் பதை இனி காண்போம்.

## ஆண்டாள் ஆயர் சிறுமியானாள்

பெரியாழ்வார் மகளாய் வளர்ந்து வந்த ஆண்டாளுக்கு, உயர்ந்த வேதத்தால்—உபநிடதங்களால்—மற்றுமுள்ள அறநூல்களால்—உயர்ந்த ஒழுகலாறுகளால் தான் விரும்பும் இறைவனாகிய கண்ணனை அடைவது முறையானாலுங்கூட, அம்முறைகளைப் பின்பற்றி அவனை அடைவது என்பது இக்கலிகாலத்தில் அவ்வளவு எளிதானதன்று என்ற உணர்வும் உதித்தது. எனவே முற்காலத்தில் அதாவது கண்ணன் வாழ்ந்த காலத்தில் அவனை அடைந்த ஆயர் குலப்பெண்கள் எவ்விதம் விளங்கினார்கள், என்னென்ன செயல்களைச் செய்தார்கள், எப்படிப் பழகினார்கள் என்பதையெல்லாம் சிந்திக்க முற்பட்டாள். அச்சிந்தனையின் பயனால் ஒரு முடிவுக்கு வந்தாள்.

அந்தணர் குலத்துதித்த பெரியாழ்வாரின் மகளான ஆண்டாளாக இருந்து அக்கண்ணபிரானை அடைவதும், அணைவதும், அருள் பெறுவதும் அவ்வளவு எளிதான காரியமன்று. எளிதாக அவனது இன்னருளுக்கு இலக்காக வேண்டும் என்றால் தானும் ஓர் ஆயர்பாடிப் சிறுமியாக மாறிவிட வேண்டும் என்று நினைத்து, அந்த மனோபாவத்துடனேயே தன் நடை உடை பாவனை முதலிய அனைத்தையும் அமைத்துக் கொண்டாள்.

ஆயர்பாடி இடைச்சிகளைப்போல தலைமுடியை ஒரு பக்கமாகச் சாய்த்து, கொண்டை அமைத்துக் கொண்டாள். அவர்கள் வெள்ளையுள்ளத்துடன் பேசும் மொழியினைத் தானும் ஏற்றிட்டுக் கொண்டு பேசலானாள். இடைச்சிகளுக்கேயுரிய முடைநாற்றமாகிய வெண்ணெய் நாற்றம் ஏற்பட பால், தயிர், வெண்ணெய் இவற்றை உடம்பிலே பூசிக் கொண்டாள். இச்செய்திகளை உரையாசிரியச் சக்கரவர்த்தியான பெரியவாச்சான் பிள்ளை “இடைமுடியும், இடைப்பேச்சும், முடைநாற்ற முமாயிற்று” என்பர். முற்றிலும் தன்னை இடையர் குலப்பெண்ணாகவே பாவனையால் மாற்றிக் கொண்ட ஆண்டாள் நோன்பை ஒரு வெளிக்காரணமாகக் கொண்டு திருப்பாவைப் பாடல்கள் முப்பதையும் பாடிப் பரவிப் பரமனைக் கிட்டிக்கைங்கர்ய மாகிற தொண்டு செய்யும் நற்பேற்றினைப் பெற்று மகிழ்ந்ததாகப் பேசுகிறாள்.

## திருப்பாவை பிறந்தது

ஆண்டாளுக்கு ஸ்ரீவில்லிபுத்தூரே திருவாய்ப் பாடியாக மாறியது. அவ்வூர்ப் பெண்களாகிய தோழிமார்களே கோபி மார்களாயினர். வடபெருங்கோயிலுடையான் திருக்கோயிலே நந்தகோபருடைய திருமாளிகையாய் விளங்கியது. ஆலிலைப் பள்ளியானாகிய பெருமானே கண்ணனாகக் காட்சி நல்கினான். இப்படிப்பட்ட அனுகாரமாகிய பாவனையோடு மேலுக்கு நோன்பு என்கிற ஒரு வியாசத்தாலே (காரணத்தாலே) திருப்பாவையைப் பாடித் தன் மனோரதத்தை (விருப்பத்தை) நிறைவேற்றிக் கொண்டாள். இவ்விதமாகத்தான் திருப்பாவை பிறந்தது என்று வைணவப் பெரியோர்களும், உரையாசிரியர் களும் உரைத்துப் போந்தனர்.

## ஆழ்வார்களும் ஆண்டாளும்

'மரங்களில் இலைகள் தளிர்ப்பது போல் கவிதை பிறக்க வேண்டும்' என்று கீட்ஸ் என்னும் மிகப் புகழ் வாய்ந்த ஆங்கிலக் கவிஞன் சொன்ன கருத்துக்கு இசைய, ஆண்டாளின் பாசுரங்கள் பிறந்தன என்றால் மிகையாகாது. ஆண்டாளின் அருளிச் செயல்கள் செஞ்சொற்களால் அமைந்து நிற்பது மட்டுமன்றி ஒவ்வொரு வரியும் அமர முத்திரைப் பெற்றுத் திகழ்கிறது. அதில் கமழும் தெய்வீக நறுமணம் சொற்கடந்தது. அது உணர்ச்சிக் கடலிலிருந்து தெறித்த அலையைத் தவிரப் பிறிதில்லை. ஆண்ட வன் இவருக்கு அளித்த ஆற்றல்களனைத்தையும் அவனுக்கே அர்ப்பணித்துவிட்டு அவனது புகழ் சிந்தும் பாமாலைகளை மிகக் கவினுற இவர் புனைந்துள்ளார். மற்றைய ஆழ்வார்களுக்கும் இவருக்கும் ஒரு விரிந்த வேறுபாடு உண்டு. ஆழ்வார்கள் ஆண்டவனைப் பாடும்போது தம்மை நாயகிகளாகப் பாவித்துக் கொண்டு (தலைவி பாவனையில்) பாட வேண்டியதாயிற்று. ஆனால் ஆண்டாளுக்கு அவ்வித நிர்ப்பந்தமின்றி இவரே பெண்ணாய்—மணமகளாய் விளங்கியதால் அவ்விதக் கட்டாய மில்லை. இயற்கையாகவே பெண் தன்மையில் விளங்கும் ஆண்டாளுக்கு பெண்பாவனையை ஏறிட்டுக் கொள்ள வேண்டிய நிலை இல்லை என்பதாம். தவிர மேட்டு நிலத்துப் புனல், கீழே அருவியாய்ப் பாய்வது போல, இவருடைய பக்தி வெள்ளம் தட்டுத் தடங்கலின்றிப் பெருக்கெடுத்துப் பாய்ந்தோடுகின்றது. இயற்கைத் தெய்வ மணத்திற்கும், செயற்கை மணத்திற்கும் உள்ள மாறுபாடு விரியாமல் என் செய்யும். மேலும் மற்றைய ஆழ்வார்களோ ஐம்புல அரக்கர்களோடு போராடியே வெற்றி

பெற்றார்கள். கருவிலே இறையருள் பெற்றுத் தோன்றின. நம்மாழ்வாருக்கே இத்தகைய வெம்பூசல்கள் இருந்தனவாகத் தாமே பணிக்கின்றார். மற்றவர்களைப் பற்றிக் கூற வேண்டுவது இல்லை. ஆனால் ஆண்டாளுக்கோ எத்தகைய அகப்போராட்டமும் நிகழ்ந்ததாகச் சொல்ல முடியாது. இவள் பூமிப் பிராட்டியின் அவதாரமானவள். இவளது காதல் போராட்டமெல்லாம் இறைவன்பால் தெளிவான பக்திநெறியின் பாற்பட்டதாகவே இருக்கக் காண்கிறோம். இறைவனது பேரருளால் பக்தி பெற்றுத் திகழ்ந்த ஆழ்வார்கள் படியினும் இவள்படி உயர்ந்தது என்று ஆண்டாளின் பக்திப் பெருக்கினை வைணவ ஆசாரியர்கள் கொண்டாடியுள்ளனர்.

## மணவினையும் ஊழ்வினையும்

தம்மால் வளர்க்கப்பட்ட ஆண்டாளுக்குத் திருமணம் நடத்தி வைத்துக் களிப்புற வேண்டும் என்று பெரியாழ்வார் விரும்பினார். இவளுடைய அறிவு, பக்தி, ஒழுக்கம், அழகு முதலிய எல்லாவற்றுக்கும் இணையான மணாளன் வாய்க்க வேண்டும் என்ற கவலை ஆழ்வாரை வாட்டியது. அதனால் அவர் வில்லிபுத்தூர் உறைவார்களில் அந்தரங்கரான சிலருடன் ஆலோசித்தார். இதனையறிந்த ஆண்டாள் தந்தையாரை வணங்கித் தம் உள்ளக் கிடக்கையை உள்ளது உள்ளவாறு வெளிப்படையாகவே கூறி விடுகிறாள். அவள் பெரியாழ்வாரிடம் ‘அப்பா! தாங்கள் நினைப்பது போல் ஒருவன் எவ்வளவுதான் ஞானபக்தி வைராக்கியங்களில் தலைசிறந்தவனானாலும், மானுடன் ஒருவனுக்கு மாலையிட என் மனம் விரும்பாது. அந்தணர் செய்யும் வேள்வியாகிய யாகத்தில், தேவர்களுக்கு இடப்படும் அவியுணவை ஒரு காட்டு நரி புகுந்து முகந்து உண்ணத் தலைப்பட்டால், அது எவ்வளவு கொடுமையோ, அவ்வளவு கொடுமை அப்பா என்னை ஓர் உலகியல் மானிடன் தொட விரும்புவது. எனது அங்கங்களும் அழகும் அப்பரம்பொருளாகிய கண்ணனுக்கே உரியனவாகும்’’ என்று சொன்னாள். தன் உடல், பொருள், ஆவி, யாவுமே பகவானுக்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டிய அவியுணவே என்பதைத் தெரிவித்தாள். இதனையே

‘‘ஊனிடையாழி சங்குத்தமர்க்கென்று
உன்னித்தெழுந்த என் தடமுலைகள்
மானிடவர்க்கென்று பேச்சுப்படில்
வாழகில்லேன் கண்டாய்’’

என்ற நாச்சியார் திருமொழிப் பாசுரத்தால் உணர்கிறோம்.

கோதைப் பிராட்டியின் மனம் திருவரங்கன் திருவருளையே நோக்கி நின்றது. உணவுண்ண மறந்தாள். உறக்கமும் நீங்கினாள்; கண்களில் நீர்பெருக அக்கண்ணனையே நினைந்து நினைந்து நைந்து நைந்து உருகினாள். இத்துன்பக் கடலினின்றும் கரையேற அந்த வைகுந்தனாகிய தோணியைப் பெற வேண்டும் என்று முயன்றாள். நோன்பு நோற்றாள். இதனை,

என்புருகி இணைவேல் நெடுங்கண்கள்
இமை பொருந்தா பலநாளும்
துன்பக்கடல் புக்கு வைகுந்தன் என்பதோர்
தோணி பெறாதுழல்கின்றேன்'

என்று ஆண்டாளின் அற்புதமான வாக்கினால் உணரலாகும். மேலும் அக்கால வழக்கப்படி, தான் விரும்பிய நாயகன் (தலைவன்) தன்னை வந்தடைவானா மாட்டானா என்று அறிய கூடலிழைத்துப்[2] பார்ப்பதற்கும் தயாரானாள்.

"பூமகன் புகழ் வானவர் போற்றுதற்
காமகன் அணிவாணுதல் தேவகி
மாமகன் மிகுசீர் வசுதேவர்தம்
கோமகன் வரில் கூடிடு கூடலே."

மண்ணின் பாரம் நீக்குதற்கே வசுதேவர்க்கும் தேவகிக்கும் புதல்வனாய்த் திருவவதரித்த கண்ணன் என் துயர் தீர இங்கே வருவானா மாட்டானா என்று அறியக் கூடலிழைத்துப் பார்த்தாள் ஆண்டாள்; காளியன் மேல் நடமாடிய கண்ணன் வருவானா மாட்டானா என்று அறிய, கூடலிழைத்தாள் கோதை.

ஆய்ச்சிமார்களும் ஆயரும் அஞ்சிடப்
பூத்தநீள் கடம்பேறிப் புகப் பாய்ந்து
வாய்த்த காளியன்மேல் நடமாடிய
கூத்தனார் வரில் கூடிடு கூடலே

(நாச்சியார் திருமொழி 4-3-4)

---

2. கூடலிழைப்பது என்பது பற்றி வைணவப் பேரறிஞர் காஞ்சி பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரிய சுவாமிகள் தமது திவ்வியார்த்த தீபிகை (நாச்சி-திருமொழி 4-1)-ல் வருமாறு விளக்கம் கூறியுள்ளார். ''கூடலிழைத்தலாவது-வட்டமாகக் கோடு கீறி அதற்குள்ளே சுழிசுழியாக முற்றும் சுழித்து இரண்டிரண்டு சுழியாகக் கூட்டிப் பார்க்கும் போது இரட்டைக் கணக்காக முடிவு பெற்றால் பிரிந்த தலைவனோடு கூடுகை. ஒற்றைக் கணக்காக முடிவு பெற்றால் கூடாமை என்று சங்கேதம் ஏற்படுத்திக் கொண்டு குறிபார்க்கையாம்.'' நாச்சியார் திருமொழி உரை, பக். 48 (1936 பதிப்பு).

இவ்விதமாக எப்பொழுதும் இறைவன்மேல் பிச்சேறிய நிலையில் தன்னை ஈடுபடுத்திக்கொண்டு, கண்ணீர் மல்கி நிற்கும் தம் மகளைக் கண்டு பெரியாழ்வாரும் கலங்கினார். இப் பெண்ணை எப்படித் தேற்றுவது என்று சிந்தித்தார். ஏதேனும் இறைவனின் குணங்கள் நிறைந்த கதைகளைச் சொல்லித் தேற்ற நினைத்தார். அவள் விரும்பும் கதைகளைச் சொன்னார்.

''பெண்ணே, கோதாய், பக்தி நெறி நிற்பார்க்கு பகவத் குணங்களை, அவன் வரலாறுகளைக் கேட்பதில் பெருவிருப்ப முண்டு. உனக்கும் அவ்விருப்பம் மிகுதியாக உண்டு என்பதும் அறிவேன். எம்பெருமானுடைய வைபவத்தில் உனக்கு விருப்ப மானதொன்றையே நீயே குறிப்பிட்டால் அதை நான் விரிவாக உனக்குச் சொல்வேன். நீடிய அரக்கர் சேனை நீறுபட்டழிய வாகை சூடிய சிலையிராமன் தோள்வலி கேட்கின்றாயா? அல்லது ஏரார்ந்த கண்ணியசோதை இளஞ்சிங்கத்தின் சரிதம் கேட்க விருப்பமா? என்று வினவினார். கோதை,' ''எந்தாய் என்மனம் எம்பெருமான் உறைகின்ற அனைத்துத் தலங்களினு டைய பெருமைகளையும் கேட்கவே விரும்புகின்றது ''என்றனள். ஆழ்வாரும் அகமிக மகிழ்ந்து, 'பெண்பாவாய், நன்றாகக் கேட்டனை. திருமால் உறைகின்ற திவ்விய தேசங்கள் 108 என்பர் பெரியோர். எனவே கோயில், திருமலை, பெருமாள் கோயில் முதலான நூற்றெட்டு திவ்விய தேசத்தும் கோயில் கொண்டுள்ள திவ்விய சரிதங்களைவுடையவனான எம்பெருமான் வரலாறுகளையும் பெருமைகளையும் உனக்குச் சொல்வேன்'' என்று தொடங்கினார்.

''ஆண்டாள், தந்தையே, தாங்கள் கூறியதிலிருந்து கோயில் எனப்படும் திருவரங்கமே தலையாய திவ்விய தேசம் என உணர்ந்தேன். அத்திருவரங்கத்து எம்பெருமானைப் பற்றியே சொல்லுங்களேன்'' என்றாள்.

''குடதிசை முடியை வைத்துக் குணதிசை பாதம் நீட்டி
வடதிசை பின்பு காட்டித் தென்திசை இலங்கை நோக்கி
கடல் நிறக்கடவுள் எந்தை அரவணைத்துயிலுமா கண்டு,
உடலெனக்கு ருகுமாலோ என் செய்கேன் உலகத்தீரே''

என்று உள்ளத்தையும் உடலையும் உருக்கவல்ல பெரிய பெருமாளாம் திருவரங்கன் பெருமையினையும், தெண்ணீர்ப் பொன்னித் திரைக்கையால் அடிவருடப் பள்ளி கொண்டிருக்கும் பாங்கினையும், அவனுடைய பெரியவாய திருக்கண்கள்

கண்டாரை பேதலிக்கச் செய்யும் பெற்றியன என்பதையும் சொல்லிப் பரவச முற்றார்.

அரங்க நகரப்பன் வைபவங்களைக் கேட்ட ஆண்டாளுடைய கண்கள் பனித்தன. மயிர் கூச்செறிய மயங்கி, திசைநோக்கித் தொழுது எழுந்தாள். அவளுடைய மெய்ப்பாடுகளைக் கண்ட ஆழ்வார் அதிசயித்தார். மற்ற திவ்விய தேசங்களின் பெருமைகளை ஆழ்வார் கூறிய போதிலும் ஆண்டாளின் மனத்தில் அரங்கனின் மேல் அன்பு பெருகி வளர்ந்தது. திருவரங்கத்திற்கே செல்லவும், அவனையே நாயகனாக அடையவும் வேண்டும் என்று உறுதி கொண்டாள். இங்கே சிலர் வேறு விதமாகவும் கூறுவதுண்டு.

பட்டர் பிரானாகிய பெரியாழ்வார், கோதைக்கு எம்பெருமான்களுடைய சரிதங்களைச் சொல்லத் தொடங்கி முதலில் வடமதுரைப் பிறந்த மாமாயனான கண்ணனைப் பற்றிக் கூறியதும் அவளுக்கு மயிர்ச்சிலுப்பு ஏற்பட்டது.

அடுத்து திருவேங்கடமுடையானது திவ்விய சரித்திரம் முகமலர்ச்சியை உண்டாக்கிற்று. திருமாலிருந்தோலை அழகரது வடிவழகைக் கூறியதும் மனமகிழ்ச்சியுண்டாயிற்று. அரங்க நகரப்பன் அற்புதச் சரிதம் கேட்டதும் அளவற்ற ஆனந்த பரவசம் ஏற்பட எழுந்து கூத்தாடினாள். மற்றுள்ள திவ்விய தேசத்து எம்பெருமான்கள் ஆண்டாளுக்கு சுயம் வரம் என்பதறிந்து ஸ்ரீவில்லிபுத்தூருக்கே எழுந்தருளி விட்டனர் என்பதாம் அது. அதாவது ஆண்டாள் தனது ஞானபூர்த்தி விசேடத்தால் மனக் கண்ணால் எம்பெருமான்களைக் கண்டாள் என்பது தகும். இவருள் அரங்கனே ஆண்டாளின் உள்ளம் கவர்ந்த கள்வன் என்பது அவளது சொல்லாலும் செயலாலும் விளங்கலாயிற்று.

## ஆண்டாளின் ஐயம்

ஆண்டாளின் மனதில் ஓர் ஐயமும் உடனெழுந்தது, அரங்கன் வந்து என்னைக் கைப்பற்றுவானோ? நம்மூர் திருவரங்கமே என்று சொல்லி உடனழைத்துச் செல்வானோ? பைந்துழாய் மாலையணிந்த அப்பரமன் கருடன் மேலேறி வந்து காட்சி தருவானோ? என்றெல்லாம் மயங்கினாள். அரங்கனின் திருமேனி சௌந்தரியத்தால் முற்றிலும் வசீகரிக்கப்பட்ட ஆண்டாளின் மனதிலேற்பட்ட கவலையால், அவள் உடலழகு குன்றவாரம்பித்தது. வளையல்கள் கழன்றன; அணிகலன்கள்

நெகிழ்ந்தன; சிந்தையில் தடுமாற்றம் ஏற்பட்டது; திகைக் கலானாள்.

நாயகி பாவனையை மேற்கொண்ட திருமங்கை ஆழ்வார் தாம் பாடிய திருநெடுந்தாண்டகப் பாசுரமொன்றில் இந்த நிலையினை அழகுறக் கூறியுள்ளார்.

''உள்ளூரும் சிந்தை நோய் எனக்கே தந்து என்
ஒளி வளையும் மாநிறமும் கொண்டார் இங்கே
தெள்ளூரும் இளந்தெங்கின் தேறல் மாந்திச்
சேலுகளும் திருவரங்கம் நம்மூர் என்ன
கள்ளூரும் பைந்துழாய் மாலை யானைக்
கனவிடத்தில் யான் காண்பன் கண்டபோது
புள்ளூரும் கள்வா நீபோகேல் என்பன்
என்றாலும் இது நமக்கோர் புலவிதானே''

என்றும்,

''மின்னிலங்கு திருவுருவம் பெரிய தோளும்
கரிமுனிந்த கைத்தலமும் கண்ணும் வாயும்
தன்னலர்ந்த நறுந்துழாய் மலரின் கீழே
தாழ்ந்திலங்கு மகரம் சேர் குழையும் காட்டி
என்னலனும் என்னிறைவும் என்சிந்தையும்
என்வளையும் கொண்டென்னை ஆளும் கொண்டு
பொன் அலர்ந்த நறுஞ்செருந்திப் பொழிலினூடே
புனலரங்கம் ஊரென்று போயினாரே.''

இப்படிப் பலவாறாக அரங்கன் மேல் ஆறாக் காதல் கொண்ட ஆண்டாளின் செயல் அவ்வூர்ப் பெரியவர்களுக்கு ஆச்சரியத்தை விளைவித்தது. கோதையாரின் நிலைகண்டு அவர்கள் இரங்கினர். பின்வருமாறு கூறினர்.

## குரவைக் கூத்து

கோதாய்! முன்பு கண்ணன் திருவாய்ப் பாடிப் பெண் களோடு குரவைக் கூத்தாடி மகிழ்ந்தான். ஆயர் சிறுமியரான அவ்வாய்ப் பாடிப் பெண்களும், அக்குரவைக் கூத்திலீர்க்கப்பட்டு மிகமகிழ்ந்து களிப்பில் ஆழ்ந்தனர். கண்ணன் அதனை உணர்ந்து இப்படி இவர்கள் நம்மைக் கூடி அநுபவிக்கும் இம்மீக்களிப்பு (மிகுந்த மகிழ்ச்சி) அளவுமீறினால் ஆபத்தாகி விடும். இதனை மாற்ற வேண்டும் என்று திருவுள்ளங்கொண்டு அவர்களை ஒரு

நொடியில் பிரிந்து ஒளித்து நின்றான். அப்பிரிவினை ஆற்றாத ஆயர் சிறுமியர் ஒவ்வொருத்தியும், தானே கண்ணன் என்று சொல்லிக் கொண்டு, மற்றொருத்தியை தீயகாளியன் (விஷப் பாம்பின் பெயர்) என்று விளித்தும், ஒருவாறு தங்கள் ஆற்றா மையைத் தணித்துக் கொண்டார்கள் என்று சொல்ல, அது கேட்ட கோதையும் தானும் அவர்களைப் போலவே தன் ஆற்றா மையைத் தணித்துக் கொள்வதற்குரிய வழியைச் சிந்தித்து முடிவில் ஸ்ரீவில்லிபுத்தூரையே திருவாய்ப் பாடியாகவும், அத் தலத்துறையும் பெருமானையே கண்ணனாகவும் அவ்வூர்ப் பெண்களான தனது தோழிமார்களையே கோபிமார்களாகவும் தானும் அக்கோபியர்களுள் ஒருத்தியெனவும் பாவனை செய்து கொண்டு (ஆயர் சிறுமியாகவே மாறி) பல பதிகங்களைப் பாடி அருளினாள்.

## ஆண்டாள் திருமணம்

ஆண்டாள் தான் கண்ட கனவு நனவாகுமோ என்று கவலை யோடு ஐயுற்று இருந்த நிலையில் பெரியாழ்வார் அங்கு எழுந் தருளினார். கோதையின் கண்களில் கண்ணீர் மல்கி நின்றதைக் கண்டு திடுக்கிட்டார் மகளே! என்ன நேர்ந்தது? உன் கண்களில் நீர்மல்கியிருப்பதேன்? என்று வினவினார். ஆண்டாள் குனிந்த, தலை நிமிராமல் வாய் பேசாதிருந்தாள். அருகே நின்ற தோழி சுவாமி தங்கள் மகள் ஒரு அற்புதமான கனவு கண்டிருக்கிறாள். அம்மாயவனான கண்ணனுக்கும் இக்கோதைக்கும் திருமணம் நடந்தாகத் தான் கண்ட கனவினை என்னிடம் எடுத்துச் சொன் னாள். அக்கனவு நனவாக வேண்டுமே என்ற கவலையில்தான் வாடிவதங்கி வாய்மூடி மௌனமாய் இருக்கிறாள் என்று தெரிவித்தாள்.

அது கேட்ட பெரியாழ்வார் பெண்ணே கோதாய்! வருந் தாதே, உனக்கு நானும் ஒரு நல்ல சேதியைச் சொல்லத்தான் இங்கு வந்தேன். எம்பெருமான் உன்னை மிகவும் நேசிக்கிறான். விரைவில் உன்னை அடைய அவன் விரும்புகிறான். உன் விருப்பம் நிறைவேறும். நல்ல நேரம் வந்து விட்டது என்றார்.

மேலும் உன் அருமைத் திருவரங்கன் என் கனவிலும் தோன்றினான். தோன்றி என்ன சொன்னான் தெரியுமா? ''ஆழ்வாரே வருந்தாதீர், உமதருமைப் புதல்வியை நான் திருமணம் செய்து கொள்கிறேன். அக்கிளி மொழியாளை உடனே திருவரங்கத்துக்கு அழைத்து வருக'' என்று அருளினன்

என்றார். அது கேட்டுத் தெளிந்த ஆண்டாளை ஆழ்வார் தம் மனைக்குள் அழைத்துவந்து ஆறுதல் வார்த்தைகள் பலவும் கூறினார்.

அவ்வமயம் மதுரையிலிருந்து அரசாங்க அதிகாரிகளும் வேதவிற்பன்னர்களும் பரிவாரங்கள்புடை சூழவந்து ஆழ்வாரைத் தண்டன் சமர்ப்பித்து "சுவாமி! அடியோங்கள் அரசரது ஆணை பெற்று இங்கு வந்துள்ளோம். தங்களது அருமை மகள் கோதையைத் திருமணம் புரிந்து கொள்ள விரும்பிய அரங்க நகரெம்பெருமான் அரசரது கனவில் தோன்றி தங்களையும் தங்கள் குடும்பத்தாரையும் ஆண்டாளையும் தக்க சிறப்புக்களுடன் திருவரங்கத்துக்கு, அழைத்து வரும்படி பணித்துள்ளார். கோதை அணிந்து கொள்ள வேண்டிய பட்டுப் பீதாம்பரங்களுடன் பல்வகை அணி கலன்களையும் அரசர் அனுப்பி வைத்திருக்கிறார். ஆண்டாளை அழைத்துச் செல்ல முத்துப் பல்லக்கும் மற்றையோர்க்கேற்ற வாகனங்களும் தயாராக வந்துள்ளன. இப்போதே புறப்பட வேண்டும் "என்று பணிவுடன் பகர்ந்தனர். அரங்கனின் பெருங் கருணையை எண்ணி வியந்த ஆழ்வார் கண்கள் பனித்தன. ஆண்டாளும் பூரிப்படைய நின்றாள். அதே சமயத்தில் திருவரங்கத்துக் கோயில் பரிவாரங்கள் புடை சூழ ஆலய அதிகாரிகளும் அங்கு வந்து சேர்ந்து தங்களுக்குப் பெருமான் பணித்த கைங்கரியத்தைக் கூறினார். உடனே புறப்படும்படி துரிதப்படுத்தினர்.

திருவரங்கப் பெருமானிடம் தீராத காதல் கொண்ட தன் மகள் ஆண்டாளின் நிலை கண்ட பெரியாழ்வார், இப்பெண்ணுக்குத் திருமணம் நடைபெறுமா? அரங்கனோ அர்ச்சாவதாரத் திருமேனியனாய் அனைவரும் வணங்கும் தெய்வாம்சம் நிறைந்து காட்சியளிக்கின்றான். இவளோ மானுடப் பிறவியளான மங்கை நல்லாள். கண்ணனோ-கண்ணனுடைய லீலைகளோ எல்லாம் துவாபர யுகத்திலே பல்லாயிரமாண்டுகளுக்கு முன்னே நிகழ்ந்தவை. பிற்காலத்திலே பிறந்த இவளுக்கு அவனோடு ஓர் உறவும் கலவியும் எவ்வாறு கிட்டும் என்றெண்ணிக் கண் கலங்கினார்.

பெரியாழ்வாரது பெருமையையும் பரம பக்தியையும் தற்போது அவருக்குண்டான மனக்கலக்கத்தையும் நன்கு அறிந்த அரங்கநகரப்பன் அவரைத் தனக்கு மாமனாராக்கி உலகுக்குக் காட்டத் திருவுள்ளம் கொண்டான். அவரது கனவில் தோன்றி 'ஆழ்வீர் வருந்தற்க! உமது செல்வத் திருமகளை நம்முடைய திருவரங்கத்துக்கு அழைத்து வாரும்; ஆண்டாளை நாம் ஏற்றுக் கொள்வோம்!' என்று அருளி மறைந்தான். கனவில் கண்டதை

நினைந்து கவலை நீங்கப் பெற்ற ஆழ்வார், அரங்கனின் அருட் பெருக்கினை எண்ணியெண்ணி வியந்து போற்றினார். திருவரங் கம் புறப்பட ஏற்பாடுகளைச் செய்யலானார்.

ஆழ்வார்க்குக் கனவில் தோன்றிய அரங்கன், தன் கோயில் பரிசனங்களாகிய அர்ச்சகர்க்கும் மற்ற அதிகாரிகளுக்கும் கனவில் காட்சி நல்கி ''நீங்கள் குடைகள் சாமரங்கள் கவரிக் கற்றைகள் விருதுகள் வாத்தியங்கள் முதலான சிறப்பு மரியாதையுடன் ஸ்ரீவில்லிபுத்தூர் நோக்கிச் சென்று எதிரில் வரும் பட்டர்பிரா னான பெரியாழ்வாரையும் அவருடன் வரும் கோதையையும் எதிர்கொண்டழைத்து வருவீர்களாக'' எனப் பணித்தான்.

பாண்டிய நாட்டிறைவனாகிய வல்லபதேவன் கனவிலும் தோன்றி, ''அரசே! நீர் நாளையே உமது பரிவாரங்களுடன் ஸ்ரீவில்லிபுத்தூர் சென்று பெரியாழ்வாருடன் அவரது திருமக ளாராம் ஆண்டாளை முத்துச்சிவிகையில் ஏற்றி அமர்த்தி எல்லா மரியாதைகளுடனும் சிறப்பாகத் திருவரங்கத்துக்கு அழைத்து வந்து நம் திருமுற்றத்தில் சேர்க்க வேண்டும்'' என்று நியமித் தருளினான்.

அரங்கனின் அருளாணைகளைச் சிரமேற்கொண்டு செயல்பட முனைந்த அதே நாட்களில், ஆண்டாளும் தனக்குத் திருமணம் நிச்சயமாகி எல்லா வைபோகங்களுடனும் அரங்கனுக்கு வாழ்க் கைப் படுவதாகக் கனவு கண்டாள். அவ்விதம் தான் கண்ட கனவைத் தோழிக்கு உணர்த்தும் முகமாகவே பிறந்தது ''வாரண மாயிரம்'' என்ற நாச்சியார் திருமொழிப்பதிகம். அப்பதிகங் களிலமைந்த நயங்களைச் சிறிது காண்போம்.

## வாரணமாயிரம்

தோழீ! நான் கண்ட கனவின் திறத்தைக் கேட்பாயாக. ஆயிரம் யானைகள் புடைசூழ, என் காதலன் தனியொரு யானை யின் மீதேறியமர்ந்து, ஊர்வலமாக வீதிவலம் வருகின்றான். ஊர் மக்கள் யாவரும் தம்தம் வீட்டு வாயிலில் பூர்ண கும்பங் களை (நீர் நிரம்பிய குடங்களை) வைத்தும், ஆங்காங்கே தோர ணங்கட்டியும், மற்றும் பல சிறப்பு அலங்காரங்களையும் செய்து வரவேற்கின்றனர். நாளையே எனக்கும் கண்ணனுக்கும் திருமணம் நடக்கப் போகின்றது. அந்தக் கலியாணப் பந்தலில் பாளைகளோடு கூடிய பாக்கு மரங்களைக் கொண்டு வந்து கட்டி, அலங்காரம் செய்துள்ளனர். அப்பந்தலில் கோவிந்தனாகிய என் காதலன் மிடுக்கான நடையோடு கம்பீரமாக வருவதை யான்

கனவில் கண்டேன். அது மட்டுமா தோழி! இந்திராதி தேவர்கள் எல்லாரும் திரண்டு வந்து எனக்கும் அக்கண்ணனுக்கும் மணம் பேசி முடிக்கவும், அந்தரி என்ற துர்க்கைப் பெண், புதிய திரு மணப் புடவையை எனக்கு உடுத்தி மகிழவும் நான் கனவு கண் டேன். அஃதன்றியும், நான்கு திசைகளிலிருந்தும் புனித நதி களின் நீர் கொண்டு வரப்பட்டுத் தெளிக்கப்பட்டபின் பலவகை மாலைகளை அணிந்துள்ள அக்கண்ணனோடு என்னை இணைத் துக் காப்புக் கட்டுவதையும் கனவில் கண்டேன் என்கிறாள் ஆண்டாள். இனி, பாசுரம் காணலாம்.

> இந்திரனுள்ளிட்ட தேவர் குழாமெல்லாம்
> வந்திருந்தென்னை மகள் பேசி மந்திரித்து
> மந்திரக் கோடியுடுத்தி மணமாலை
> அந்தரி சூட்டக் கனாக் கண்டேன் தோழீ நான்!
> நால்திசைத் தீர்த்தம் கொணர்ந்து நனி நல்கி
> பார்ப்பனச் சிட்டர்கள் பல்லாரெடுத் தேத்தி
> பூப்புனை கண்ணிப் புனிதனோடு என் தன்னை
> காப்பு நான் கட்டக் கனாக் கண்டேன் தோழீ நான்.

மேலும் அவள் கனவு தொடர்கிறது.

அழகிய இளம் பெண்கள் ஒளி பொருந்திய தீபங்களையும், பொன்மயமான கலசங்களையும் கைகளில் ஏந்திக் கொண்டு எதிர் கொண்டழைக்க, அவர்களின் நடுவே அழகிய மணிகள் பதித்த பாதுகைகள் அணிந்து கொண்டு பூமி அதிரும்படி பெருநடை யிட்டு என் காதலன் வருவதைக் கண்டேன்.

அப்படி நிமிர்ந்து நடந்து வந்த காதலன் மத்தளம் கொட்ட வும், வரிகளையுடைய சங்குகள் ஒலிக்கவும் முத்துச் சரங்கள் தொங்கவிடப்பட்ட பந்தலில் நுழைந்து வந்து, என் கைகளைப் பற்றினான் என்கிறாள் ஆண்டாள். இவ்விதமாகத் தனக்கும் கோவிந்தனுக்கும் வதுவை மணம் நடந்ததைக் கனவில் கண்ட தாகத் தோழியிடம் கூறி மகிழ்ந்தாள் கோதை.

### பழைய மரபுகள்

ஆண்டாளின் வாரணமாயிரப் பதிகத்தால் அக்காலத்திலுங் கூட மணமகன் யானை மீது ஊர்வலமாக வருதல், புனித நீர் தெளித்துத் தூய்மை செய்தல், காப்புக்கட்டுதல், அம்மி மிதித்தல், தீ வலம் வருதல், பொரியிடுதல் முதலிய சடங்குகள் வழக்கத்தில் இருந்தன என்பதை அறியலாம். இக்காலத்திலும் திருமாலடியார் களான வைணவர்கள் இல்லத்துத் திருமணங்களில் சீர் பாடல்

என்றொரு சடங்கு நடைபெறுகிறது. அவ்வமயம் வாரணமாயிரம் என்று தொடங்கும் பதிகத்தை (பத்துப் பாட்டுக்களையும்) இனிமையாகப் பாடுவர். மணமக்கள் எதிரெதிரே அமர்ந்து மஞ்சள் பூசிய தேங்காய்களை உருட்டி விட்டு விளையாடுவர். பாசுரங்களின் முடிவில் ''சீர் பாடிக்களிமின் களிப்போமே'' என்று பாடி இருபக்கத்து உறவினர்களின் பெயர்களைச் சொல்லி அறிமுகப்படுத்துவதும் காணப்படுகிறது (இம்மரபு இன்றும் பின் பற்றப்படுகிறது).

பட்டர் பிரானாகிய பெரியாழ்வார், திருமாலடியார்களான கோயில் பரிவாரங்களும், அரச பரிவாரங்களாகிய அதிகாரிகளும் ஒருசேர உரைத்த செய்திகளைச் செவிமடுத்துப் பெருவியப் பெய்தினார். என்னே! எம்பெருமான் திருவுள்ளம் என்று ஆனந்தக் கூத்தாடினார்.

தான் கண்ட கனவு வெகு விரைவில் நனவாகும் நேரம் வந்து விட்டதை உணர்ந்த ஆண்டாள், தோழிமார்களுடன் கூடி ஆடிப் பாடி மகிழ்ந்து ஆனந்தக் கண்ணீர் உகுத்துப் பின் பயணத்துக்குத் தயாரானார்.

மதுரை மன்னரது ஆணைப்படி ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து திருவரங்கப் பெருநகரம் வரை ஆங்காங்கு வாழை, கமுகு முதலியவை நாட்டப் பெற்ற பந்தல்கள் அலங்கரிக்கப்பட்டன. வள்ளுவர்கள் யானை மீதேறி முரசறைந்து நாடும் நகரமும் நன்கறியும்படி ஆண்டாளுக்கும் அரங்கனுக்கும் திருமணம் நடக்கப் போவதைப் பறைசாற்றி, மக்கள் யாவரும் திருமண நிகழ்ச்சி களைக் காணத் திரண்டு வரும்படி கூறினர். பூப்பந்தல்களில் புது மணல் பரப்பியும், பொற்குடங்களில் பூரணகும்பங்கள் வைத்தும், பொற்பாலிகைகளில் தானிய முளைகளை எழுப்பியும் ஆங்காங்கே மங்கல விளக்குகள் ஏற்றியும் பொலிவுறச் செய்தனர்.

புனித நதிகளின் நீர் பொற்குடங்களில் ஏந்திவரப்பட்டன. பார்ப்பனச் சிட்டர்கள் பலர் திரண்டு மறையோத, பல்லாண்டு பாடிய வண்ணம் ஆண்டாளுக்கு மஞ்சனமாட்டினர். பூ வேலைப் பாடமைந்த பொன்னாடை அணிவித்தனர். சுட்டி, தோள்வளை, செவிப்பூ, பாடகம் எனப்பட்ட பல்வகை ஆபரணங்களால் அலங் கரித்தனர். அவளுடைய மேகம் போல் கருத்த கூந்தலைச் சாய்வான கொண்டையாக அமைத்துப் பூச்சூட்டிக் களித்தனர். அவளுடைய தாமரை போன்ற பாதங்களை மேலும் அழகுபெறச் செம்பஞ்சுக் குழம்பு பூசி மெருகேற்றினர் கண்ணனுக்கு அஞ்சன மிட்டு அலங்கரித்து பிறைநுதல் விளங்க, திருமண் காப்பும்

ஸ்ரீசூரணமும் திலகமாக இடப்பட்டன. ஆண்டாளின் அந்தக் கோலத்தைக் கண்டோர் அரங்கனுக்கு ஏற்றவள் ஆண்டாளே என்று கொண்டாடினர். வைத்த கண் வாங்காமல் திருமணக் கோலந்தாங்கி நின்ற ஆண்டாளை வாழ்த்தி வணங்கினர்.

ஒப்பனைகள் முடிந்தபின் பெரியாழ்வாரின் அனுமதி பெற்று ஆண்டாளை முத்துச் சரங்களால் அலங்கரிக்கப்பட்ட பொற் பல்லக்கில் அமரச் செய்து வாத்தியங்கள் முழங்க புறப்படலாயினர். கோதையும் அரங்கத்தம்மான் அருளையும் ஒரு கணம் நினைந்து விட்டு சித்தரையும் தாயையும் வணங்கி விடை கொண்டாள்.

**புறப்பாடு வைபவம்**

பல்லியங்கள் முழங்கின. மறைவல்லார் வாழ்த்தொலியும், மாந்தரின் ஆரவாரமும், அரசாணையர் கூறிய கட்டியமும் விண்ணதிரச் சேர்ந்து சென்றன. ரத கஜதுரக பதாதி எனப்பட்ட நால்வகைச் சேனைகள் முன்னும் பின்னும் அணிவகுத்துச் செல்ல, மிக்க விமரிசையுடன் ஸ்ரீவில்லிபுத்தூரை விட்டுப் புறப்பட்ட ஸ்ரீ ஆண்டாளின் குழாத்தினர் திருவரங்க நகர் நோக்கி விரைந்தனர்.

மானிடப் பெண்ணாகிய கோதைக்கும் மாமாயம் வல்ல அழகிய மணவாளனாம் அரங்கனுக்கு நடக்கவிருக்கும் கடிமண விழாவினைக் காண அந்தரத்தமரர் கூட்டமும், இந்திராதி தேவர் குழாங்களும், அருந்தவ முனிவரும், சித்தரும், சாரணரும், அரம்பையரும் கூடி நெருக்குவராயிற்று திருவரங்கப் பெருநகரம். இந்த இப்பிறவியில் இப்பேர்ப்பட்டதொரு திருக்கலியாணக் காட்சியினைக் காண, எத்தகைய பேறு செய்தோமோ என்ற பேச் சொலியே எங்கும் நிறைந்து நின்றது.

இங்கு நடக்கவிருக்கும் கோதையின் திருமணத்திற்கே உரிய தோர் தனிப் பெருந்தன்மையைக் கூறவேவேண்டும். மிதிலைச் செல்வியான சீதையை மணந்த ராமன் ஒரு மனிதனாகவே காட்சியளித்தான். அதேபோல உருக்குமிணிப்பிராட்டியை மணந்த கண்ணனும் மனித வடிவில்தான் வந்து நின்றான். ஆனால் மானிடப் பெண்ணாகிய கோதையை மணக்கவிருந்த அழகிய மணவாளனான ரங்கநாதன் அர்ச்சாவதார ரூபி. (விக்கிரக வடிவினன்) ஒரு கடவுள் திருவுருவத்துக்கும், ஒரு மானிடப் பெண்ணுக்கும் நடந்த திருமணம் போல ஒரு உண்மை வரலாறோ அல்லது கற்பனைக் கதையோ கூட உலக இலக்கியங் களில் காணவே முடியாது. அப்படிப்பட்ட ஒரு தனிப்பட்ட ஏற்றம் பெற்றது ஆண்டாள் கலியாணம். இந்தத் தனியான தொரு ஏற்றத்தினை ஆண்டாள் திருவாய் மலர்ந்தருளிய திருப்

பாவை, நாச்சியார் திருமொழி திவ்வியப் பிரபந்த பாசுரங் களிலே காண முடிகிறது.

ஸ்ரீவில்லிபுத்தூரிலிருந்து புறப்பட்ட ஆண்டாள், பெரியாழ் வாருடனும் மற்ற பரிவாரங்களுடனும் திருவரங்கப் பெருநகரில் புகுந்தனள். உயர்ந்து நெடியதான ஏழு திருமதில்களால் சூழப் பட்ட மாடவீதிகளில் வலமாக வந்து பெரிய பெருமாளாம் திருவரங்கன் திருமாமணி முற்றத்தில் பல்லக்கு இறக்கப்பட்டது. அதனுள்ளிருந்த கோதை திரைச்சீலைகளை விலக்கிக் கொண்டு கீழிறங்கி ஒரு மணப்பெண்ணுக்கே உரியதான நாணம் தோன்ற தலை கவிழ்ந்து மென்னடையாக நடந்து மகாமண்டபம், அர்த்த மண்டபம் முதலான பல மண்டபங்களையும் கடந்து, தந்தையும் ஆசார்யனுமாகிய விட்டுசித்தருக்கு தண்டன் சமர்ப்பித்து அவரது ஆசியும் அனுமதியும் பெற்று, கருவறைக்குள் புகுந்து அரவரசப் பெருஞ்சோதி அனந்தன் என்னும் ஆதிசேடனாம் உயர் வெள்ளை அணையை மிதித்தேறி அத்திருவரங்கப் பெருமானின் அமுதம் போன்ற அழகினைக் கண்களால் பருகிக்களித்து, அவனது திருவடி வாரத்தில் அமர்ந்து திருவடிகளை மெல்ல வருடிய (தடவிய) வண்ணமே, அனைவரும் கண்டு வியப்புற அந்தர் பாவம் பெற்று, (மறைந்து) திவ்விய வடிவோடு அரங்கநகரப்பனுடன் கலந்தனள்.

## பெரியாழ்வார் வருத்தம்

உட்புகுந்த ஆண்டாள் கட்புலனுக்குத் தோன்றாதவாறு மறைந்ததை யாவரும் கண்டு அதிசயமுற்றனர். பட்டர்பிரானா கிய பெரியாழ்வாரும் எம்பெருமானே இதுவோ நினது திருவுள்ளம் என எண்ணியவாறு, உனது திருவடிகளுக்கே குற்றேவல் புரிய விரும்பிய ஆண்டாளுக்கு அது கிடைத்தது பொருத்தமே. ஆனாலும் என்னால் அவள் பிரிவினைத் தரித்திருக்க முடிய வில்லையே என நினைந்து வருந்தினார். அப்போது திருவரங்கன் ''ஆழ்வீர்! வருந்தற்க, திருமகளும் மண்மகளும் நமக்கு அந்தரங்க கைங்கர்யங்கள் புரிபவர்கள். நிலமகளான உமது மகள் கோதை யும் நம் அருகே இருந்து கைங்கர்யம் செய்வதைக் கண்ணால் காண்பீராக'' என்று சொல்ல, ஆழ்வார் உள்ளிட்ட யாவரும் கண்களைத் துடைத்துக் கொண்டு பெருமாளைச் சேவிக்க, அங்கே திருமகளுக்கும் மண்மகளுக்கும் நடுவிலே ஆண்டாளும் நின்று அரங்கன் செய்ய திருவடித்தாமரைகளுக்குத் தொண்டு பூண்டு நிற்பதைக் கண்டு ஆனந்தக்கண்ணீர் பெருக்கிய வண்ணம் ஆண்டாள் வாழ்க! அரங்கன் வாழ்க! ஆண்டாளும் அரங்கனும் வாழ்க! வாழ்க! என்று பெரு முழக்கமிட்டுப் பல்லாண்டு பாடி

நின்றனர். எல்லையில்லாக் களிப்பெய்திய அவர்கள் அரங்கன் செய்த அற்புதத்தைப் பலவாறு பேசிய வண்ணம் மகிழ்ச்சி மீதூரச் சென்றனர்

இவ்விதம் அரங்கனுக்கு ஆட்பட்டு என்றென்றும் அடிமை செய்வதே ஆண்டாள் திருக்கலியாணம் என்று மரபு வழிச் சான்றோர்கள் கூறி வருகின்றனர். மேலும் பெரியாழ்வாரது வேண்டுகோளுக்கு இணங்க ஸ்ரீரங்கநாதனே ஸ்ரீவில்லிபுத்தூரிலே திருமணக் கோலத்தோடு காட்சி அளித்ததாகவும் பெரியோர் பகர்வர் 'நாச்சியார் திருமாளிகை' என வைணவர்களால் போற்றப்படும் ஸ்ரீவில்லிபுத்தூர் கோவில் கருவறையில் ஆண்டாள், ரங்கமன்னார், கருடாழ்வார் என்ற மூவரும் ஒரு சேர நின்று காட்சியளிக்கின்றனர். இந்த அரிய காட்சியை. 'ஓம்' என்ற பிரணவரூபமாக (அ+உ+ம) என்று பக்தர்கள் பரவித் துதிப்பர். இவ்வளவு சிறப்பாக ஆண்டாள் திருக்கலியாண வைபவம் பற்றி வைணவ சம்பிரதாய நூல்கள் தெரிவிக்கின்றன.

இனி ஆண்டாளின் பாசுர நயங்களை நாச்சியார் திருமொழி என்ற அவள் நூலின் வழி காண்போம்.

# நாச்சியார் திருமொழி நயங்கள்

கண்ணபிரானைப் பெறுகைக்காக மார்கழி முழுவதும் நோன்பு நோற்ற ஆண்டாள் அவன் தனக்குக் கலவியின்பம் தருவானென்றே எதிர் நோக்கியிருந்தாள் என்னத்தட்டில்லை. ஆனால் அப்பேறு அவளுக்குக் கிட்டவில்லை. அதனால் மிகவும் வருந்திய ஆண்டாள் தலைவனைப் பிரிந்த நிலையில் மீண்டும் அவனைக் கூடுவதற்குப் பெண்கள் மடலூர்வதுபோல், பிரிந்தவர்களைக் கூட்டுகையையே இயல்பாகவுடைய காமனாகிய மன்மதன் காலிலே விழுந்து வணங்கி வேண்டிக் கொள்வதாக இப்பிரபந்தம் தொடங்குகிறது.

முற்காலத்தே கன்னியர் தம் பன்னிரண்டாம் வயதில் காம நோன்பு நோற்று வந்த செய்தியை "யாண்டீராறதில் எழில் காம னோன்பொடு" என்ற பன்னிருபாட்டியல் (182) விதியாலும் அறியலாம். அம்முறையில் ஆண்டாளும் மணம் செய்தற்குரிய தம் இளம் பருவத்தே இந்நோன்பை மேற்கொண்டனள் என்பது பொருந்தும். அன்றியும் சுரமஞ்சரி என்ற நங்கை சீவகனை விரும்பி மணக்க, இக்காம நோன்பை மேற்கொண்டதாக சிந்தாமணி 2057 செய்யுள் கூறுகின்றது. பெருங்கதையிலும் (3, 5, 27—33) பதுமாபதி என்னும் பெண்மணி உதயணனை அடைய விரும்பிக் காமனைக் குறித்து நோன்பு நோற்ற வரலாறு காணப்படுகின்றது. இம்முறையில் கோதையாராகிய ஆண்டாளும் காம நோன்பை மேற்கொண்டாள்.

மிக உயர்ந்த ஆசாரசீலரான பெரியாழ்வாருடைய திருமகளாய்ப் பிறந்து வளர்ந்த ஆண்டாள் மறந்தும் புறந்தொழா திருக்க வேண்டியிருக்க, தேவதாந்தரமாகிய (வேறு தெய்வமாகிய) மன்மதன் காலில் விழுந்து வணங்கலாமா என்ற கேள்வி பிறக்கிறது. இதற்கு விடையை ஸ்ரீ பெரியவாச்சான் பிள்ளை என்கின்ற உரையாசிரியர் மிகவும் அழகாகக் கூறியுள்ளார். மன்மதனைப் பரம்பொருளாகக் கருதி ஆண்டாள் அவனை வணங்கவில்லை. தான் விரும்புகின்ற கண்ணனை அடைவதற்கு, இவன் உதவி

செய்வான் என்று நம்பியே சரணடைந்தாள். இம்மன்மதனாகிய காமன் முன்பொருகால் பிரிந்து தவமியற்றி வந்த சிவபெருமானையும் பார்வதி தேவியையும் ஒருங்கே சேர்த்து வைத்த கதையைப் பெரியாழ்வார் சொல்லக் கேட்டிருந்தவளாகையாலே, கண்ணனோடு கலவி கிடைக்காமல் ஆற்றாமையால் வருந்தும் தன்னையும் அக்கண்ணனோடு கூட்டுவிப்பன் என்று நம்பியே அக்காமன் காலில் விழுந்து வேண்டினாள்' என்பதாகக் கூறியுள்ளார்.

மேலும் காமபரவசரானவர்க்கு ஒரு போதும் இது குறையாகாது. கலக்கத்தினால் விளைவதாகிய இச் செயலில் ஒருவிதக் குறையுமில்லை. காளிதாசன் இயற்றிய மேக சந்தேசத்தில் தலைவியைப் பிரிந்த நிலையில் காமத்தால் பீடிக்கப்பட்ட யக்ஷன் மேகத்தைத் தூது விடுவதும், மற்றும் தலைவனைப் பிரிந்த நிலையில் தலைவியானவள் அன்னம் வண்டு கிளி ஆகியவைகளைத் தூதாக விடுவதும், அவைகளை வணங்குவதும் பொருந்துவதாகவே கருதப்படுகின்றன. மடலெடுத்தல் நோன்பு நோற்றல் முதலான செயல்களை அப்பரம் பொருளின் முகமலர்த்திக்காகச் செய்யப்படும் கைங்கர்யமாதலால், குற்றமன்று என்று பெரியோர் பணித்தனர். 'ஸ்வரூப விருத்தமன்று' என்று உரையாசிரியர் கூறியுள்ளார்.

இதனால் ''வழியல்லா வழியே முயற்சி செய்தாகிலும் கண்ணபிரானோடு கலக்கப் பெறவேணும்'' என்ற அளவற்ற ஆசை ஆண்டாளுக்கு இருந்ததென்பது அறியக் கிடக்கின்றது.

## மன்மத வழிபாடு

நாச்சியார் திருமொழி 'தையொருதிங்களும்' என்று தொடங்கும் முதல் பாடலில் ஆண்டாளின் சில செயல்முறைகள் கூறப்பட்டுள்ளன. மன்மதனை வழிபடும் ஆண்டாள் அவன் வரவேண்டிய இடங்களையும், வீதிகளையும் புது மணல் பரப்பி அலங்கரித்தாள். மண்டல பூசைக்காக மண்டலாகாரமான மேடையை அமைத்தாள். காமனை மாத்திரமன்றி அவன் தம்பி சாமனையும் வணங்குவதாகவே பாசுரம் பகர்கின்றது. மன்மதன் தனது சுகுமாரமான (மிக மென்மையான) கால்களால் நடந்தால் பெருமணல்கள் கால்களில் உறுத்துமாகையால் நொய்மணலால் ஆராய்ந்து அலங்கரித்தாள் என்பதனை உணர்த்த 'ஐயநுண் மணல்' என்று கூறப்பட்டுள்ளது. மேலும் கிழக்கு வெளுப்பதற்கு முன்பாகவே எழுந்து நீர்த்துறைகளில் நீராடி, முள்ளும் எறும்புகளுமில்லாத சுள்ளிகளை (சமித்துக்களை) எடுத்து நெருப்பிலிட்டு நோன்பு நோற்றாள். கடல் வண்ணனாகிற அக்கண்ணனின்

பெயரை, அம்புகளில் எழுதி அவனை ஆசைப்பட்டாள். மூக் காலங்களிலும் ஊமத்தை மலர்களையும் முருக்க மலர்களையும் கொண்டு அருச்சித்து வழிபாடியற்றினாள் வித்தகனும் அவ்வேங்கட வாணனுமான கண்ணனோடு தன்னைக் கூட்டு விக்கும்படியும், மற்றொரு பாசுரத்தால் வேண்டிக் கொள்கிறாள். இந்தப் பதிகத்தில் மன்மத பூசை பற்றிச் சற்று விரிவாகவே செய்திகள் காணப்படுகின்றன.

கண்ணபிரானைக் காண வேண்டும் என்ற ஆவலுடைய ஆண்டாள், அவனைக் கண்டபிறகு காமதேவனை மறந்து விடக்கூடுமாதலால் அங்ஙனம் மறதி நேரிடாமைக்காக அந்த மன்மதனைப் பரிவாரங்களுடன் கூடியவனாகச் சுவரில் தீட்டி வைக்கிறாள். மீன் கொடிகளையும், குதிரைகளையும், சாமரம் வீசும் பெண்களையும், கரும்பு வில்லையும் அம்மன்மதனுக்கு உரியனவாக அவ்வோவியத்தில் எழுதுவித்தாள். இளமைப் பிராயம் தொடங்கி அக்கண்ணனையே எப்போதும் விரும்பிக் கிளர்ந்தெழுந்த தன் தடமுலைகளை அக்கண்ணனே அனுபவிக்கத் தக்கவன் என்று உறுதி செய்து கொண்டு, அவனோடு தன்னைக் கூட்டுவிக்கும்படி மற்றொரு பாசுரத்திலே வேண்டுகிறாள்.

இக்கருத்தை விளக்கும் பாடல் வருமாறு:

சுவரில் புராண நின் பேரெழுதிச்
சுறவநற் கொடிக்களும் துரங்கங்களும்
கவரிப் பிணாக்களும் கருப்புவில்லும்
காட்டித்தந்தேன் கண்டாய் காமதேவா
அவரைப் பிராயம் தொடங்கி
என்று மாதரித்தெழுந்த என்தடமுலைகள்
துவரைப் பிரானுக்கே சங்கற்பித்துத்
தொழுது வைத்தேன் ஒல்லை விதிக்கிற்றியே.

மேலும் நெல்லும், கரும்பும், வெல்லமும், பச்சரிசியும், அவலும் ஆகிய பொருட்களை சீராக்கிச் சமைத்து அவனுக்குப் படைக் கிறாள். தூமலர் தூவித் தொழுகிறாள். அப்பாற்கடல் வண்ணனுக்குப் பழுதின்றிப் பணிசெய்து வாழ விரும்புகிறாள்.

இறுதியாக இத்திருமொழியில் ஆண்டாளுடைய உறுதியான கொள்கை ஒன்றும் வெளியிடப் பட்டுள்ளது. "மானிடவர்க் கென்று பேச்சுப்படில் வாழகில்லேன்" என்ற முழக்கமே அது. 'வானிடை வாழும் அவ்வானவர்' என்று தொடங்கும் அப் பாடலில் ஆண்டாளின் மனநிலைக்கு ஏற்புடைத்தான அருமை

யான உவமானம் கூறப்பட்டுள்ளது. அதாவது இந்நிலவுலகில் அந்தணர்கள் அனுட்டிக்கும் யாகங்களில் இந்திரன் முதலிய தேவர்கட்காக வகுக்கும் புரோடாசம் என்ற திரவியம் ஒன்றுண்டு. இதனை அவியுணவு என்பர். தேவர்களுக்கே உரியதாகிய அந்த அவியுணவை மிகவும் அற்ப ஜந்துவாகிய ஒரு காட்டு நரி கிட்டி வந்து, மூக்கால் மோந்தும், காலால் இடந்தும் வீணாக்குவதுபோல், கண்ணபிரானுக்காகவே கிளர்ந்தெழுந்த என் கொங்கைகளை மானிடர்க்கு உரியனவாகப் பேசும் பேச்சொன்று இப்பூமண்டலத்தில் கிளம்புமேயானால், என்னுயிர் உடனே மாய்ந்துவிடும் என்கிறாள். இதனால் மானிடவர்க்கு ஆண்டாளைத் திருமணம் செய்வித்து மகிழலாம் என்ற எண்ணம் யார் மனதில் தோன்றினாலும் ஆண்டாள் உயிர்வாழ மாட்டாள் என்பதும், கண்ணபிரான் ஒருவனையே தன் பதியாகப் பெற விரும்பினாள் என்பதும் தெற்றெனத் தோன்றுகின்றன.

'வானிடை வாழும் அவ்வானவர்க்கு
மறையவர் வேள்வியில் வகுத்த அவி
கானிடைத் திரிவதோர் நரி புகுந்து
கடப்பதும் மோப்பதும் செய்வதொப்ப
ஊனிடையாழி சங்குத் தமர்க்கென்று
உன்னித் தெழுந்தவென் தடமுலைகள்
மானிடவர்க் கென்று பேச்சுப்படில்
வாழகில்லேன் கண்டாய் மன்மதனே?

என்ற பாசுரத்தில் ஆண்டாளுடைய உள்ளக்கிடக்கை இவ்வாறு வெளிப்படுத்தப் பட்டுள்ளது.

''அங்கைத் தலத்திடையாழி கொண்டானவன் முகத்தன்றி விழியேனென்றி, செங்கச்சுக் கொண்டு கண்ணாடையார்த்துச் சிறு மானிட வரைக் காணில் நாணும் கொங்கைத் தலமிவை நோக்கிக் காணிர், கோவிந்தனுக் கல்லால் வாயில் போகா'' என்றெல்லாம் மேலும் அவள் கூறியுள்ள பாசுரங்களாலும் அத் தேவதேவனான கண்ணன்பால் இவ்வாண்டாளுக்குண்டான காதலும், அது தவறுமாகில் உயிர்வாழ மாட்டாமையும் விளக்கப்பட்டதாயிற்று. வைணவ சம்பிரதாயத்தில் ஒரு முக்கிய கொள்கை அடிக்கடி பேசப்படுவது உண்டு. பக்தர்கள் பரம் பொருளை விரும்பி அடையப் பெருமுயற்சி செய்வர். ஆனால் அப்பரமன் தன்னை விரும்பி வழிபடும் பக்தர்களைத் தானாகவே வந்து காப்பாற்றுவான் என்பதேயது. இங்கு ஆயர்ப்பாடிப் பெண்கள் மன்மதனை வடிபட்டுப் தன்னையடைய முயல் கிறார்கள் என்பதனையுணர்ந்த கண்ணபிரான் ''இவர்களுடன்

கூடுவதற்கு நாம் வருந்த வேண்டியதிருக்க, நம்மைப் பெறு வதற்கு இவர்கள் வருந்துவானேன்; அன்றியும் இவர்கள் நம்மைப் பெறுகைக்கு நம் காலில் வந்து விழாமல் வேறொரு தேவதை யான மன்மதன் காலில் விழுந்து வணங்குவதை நாம் பார்த்துக் கொண்டிருக்கலாமா?'' என்று சிந்தித்தான். தவிர முன்பொரு சமயம் திருவாய்ப்பாடி மக்கள் மழைபெய்ய வேண்டி இந்திரனுக்கு விழா எடுத்துப் பெருஞ்சோறு படைத்த பொழுது, இக்கண்ணன் நாம் பிறந்து வளரும் இவ்வூரில் நாமிருக்கும் போது வேறு ஒரு தெய்வத்துக்குப் பூசையும் விழாவும் செய்கிறார்களே எனச் சினந்து இந்திரனுக்காகப் படைக்கப்பட்ட அச்சோற்றை கோவர்த்தன மலைக்கு இடுவித்துத் தானே அம் மலையாக இருந்து, அச்சோறு முழுவதையும் உண்டான் என்ற வரலாறும் யாவரும் அறிந்ததே. அதனால் இவர்கள் நம்மை நேராகப் பற்றாமல் நாம் இவ்வூரில் இருக்கும் போதே வேறு தெய்வமான மன்மதன் காலில் விழுந்து வேண்டுகிறார்களே என்றதைப் பொறுக்கமாட்டாமல் அப்பெண் களின் அறியாமைக்கு இரங்கி அவர்கள் தெருவில் சிறிய மணல் வீடுகட்டி விளையாடும் பொழுது தானாகவே அங்குவந்து நின்றான்.

## சிற்றில் சிதையேல்

ஆயர்ப்பாடிப் பெண்கள் தாம் விளையாடுமிடத்திற்கு கண்ணன் வந்த போதிலும் அவனைக் கண்டும் காணாததுபோலத் தலையைத் திருப்பிக் கொண்டு தங்கள் விளையாட்டில் லயித்து இருந்தனர். இப்படித் தன்னை அநாதரித்து நிற்கும் பெண்களைச் சோதிப்பதற்கு அக்கண்ணன் அப்பெண்கள் கட்டி விளையாடும் மணல் வீடுகளைக் காலால் அழித்து விடுவேன் என்று அச்சுறுத்தி னான். அப்போது பெண்கள் கண்ணா! கண்ணா! நாங்கள் நெடுநேரம் முயன்று கட்டிய இவ்வழகிய மணல் வீடுகளைச் சிதைத்து விடாதேயப்பா! என்று வேண்டிக் கொண்டார்கள். கண்ணனோ பிடிவாதமாய் அழிக்கத்தான் போகிறேன் என்று அடம்பிடிக்கிறான். தங்களை நெருங்கி நின்று பேசும் கண்ணனது திருமுகச் சோதியில் ஈடுபட்டு மெய்மறந்த பெண்கள், சிந்தை யழிந்தார்கள். அவனோடு சரசமாய்ப் பேசினார்கள். மனச் சமாதான மடைந்த பெண்கள் பின்னர் பிரிந்து சென்றார்கள் என்பதை ஒரு பத்துப் பாடல்களில் ஆண்டாள் நயம்படப் பாடித் தந்திருக்கிறாள். இனி, 'சிற்றில் சிதையேல்' என்ற அப்பதிகத் துள்ள நயங்களையும் காண்போம்.

திருவாய்ப்பாடித் தெருவில் ஆயர் சிறுமியர் சிறிய சிறிய மணல் வீடுகளைக் கட்டி விளையாடுகிறார்கள். அவர்கள் தம் முதுகு நோவ நீண்ட நேரம் முயன்று இழைத்தவைகளாம் அச் சிற்றில்லங்கள். அறிவொன்றுமில்லாத ஆயர்குலச் சிறுமியர் சாதனை புரிந்து கட்டிய அவ்வீடுகளில் வாழ்வதாகப் பாவித்து மகிழ்ந்து ஆடுகிறார்கள். கண்ணனோ சர்வ வல்லமை படைத் தவன். அரிய பெரிய செயல்களையும் நினைத்த மாத்திரத்தி லேயே செய்து முடிக்க வல்லவன். சக்தியற்ற இந்த அபலைப் பெண்கள் எங்கே? எல்லா வல்லமையும் பெற்ற இறைவனான அக்கண்ணன் எங்கே? எளிய சிறுமியர் அழகாகக் கட்டிய மணல் வீடுகளைக் கண்ணன் தன் திருக்கண்களால் சற்றே நோக்கிக் கண்டால் சிறுமியர் மகிழ்வர். அதை விட்டுவிட்டு அவற்றை அழித்தால் அப்பெண்களின் மனம் எவ்வளவு புண்படும்! அத னால் அப்பெண்கள் கண்ணனிடம் தங்கள் சிற்றிலைச் சிதைக்க வேண்டாமென்று மன்றாடுகின்றனர். இக்கருத்தினைக் கூறும் பாடலில் 'ஆலிலை மேல் துயின்ற எம்மாதியாய்' என்று பெண் கள் கண்ணனை விளிக்கிறார்கள். இதில் ஒரு நயம் காணப்படு கிறது.

மகாப் பிரளய காலத்தில் இவ்வுலகு முழுவதுமே பெரு வெள் ளத்தில் மூழ்கியது. சகல சீவராசிகளும் தத்தம் நிலையிழந்து தவித்தன; அழிந்தொழிய முற்பட்டன. அவ்விதமாக இப் பாரெல்லாம் நெடுங்கடலேயான காலத்தில் உலகத்தையெல்லாம் திருவயிற்றிலே வைத்து நோக்கிய பாலகனாய் ஆலிலைமேல் பள்ளிகொண்டு உலகத்தை அழியாமல் காப்பாற்றிய பேரருளாள னான நீ மிகவும் எளியரான எங்கள் திறத்தில் அருள் பாலிக்கா மல் இப்படி அழிக்கலாமா? நாங்கள் செய்த தீவினைதான் என்ன? என்று சிறுமியர் கேட்பதாக பாசுரம் அமைந்துள்ளது. ஊழிக் காலத்தில் உலகமெல்லாம் நீருள் மூழ்கியபோது அவ்வுலகத்தைக் காத்த கண்ணனின் இக்கருணைச் செயலை ''உலகமுண்ட பெருவாயா, உலப்பில் கீர்த்தி அம்மானே'' என்று நம்மாழ்வா ரும், ''பனிப்பரவைத்திரை ததும்பப் பாரெல்லாம் நெடுங்கடலே யான காலம்'' என்று பிறரும் நினைத்துப் போற்றியுள்ள பாடல் கள் நினைவு கூரத் தக்கனவாம்.

மேலும் இப்பதிகத்தில் ஆயர் சிறுமியர் மிகவும் பாடுபட்டுக் கட்டிய மணல் வீடுகளைப் பற்றி அடிக்கடி கூறுகிறார்கள். வளையல்களை அணிந்த கைகளினால் வண்டலிலுள்ள நுண் மணலைக் கொண்டு வந்து கட்டப்பட்ட வீடுகளாம். ''வெள்ளை நுண்மணல்'', 'வெள்ளை நுண்மணல்'' என்றெல்லாம் ஆண்டாள்

இசைத்துள்ளாள். இதைத்தவிர அவ்வீடுகளைக் கட்டப் பயன் படுத்தப்பட்ட பொருள்களைக் கூட விடாமல் பாட்டில் கூறியுள்ளாள். வட்ட வடிவமான வாயினையுடைய சிறிய பானையையும் சிறுசுளகாகிய முற்றிலையும் (முறம்) பயன்படுத்திக் கொண்டு வந்த சிறுமணலைக் கொண்டு இழைக்கப்பட்ட வீடுகள் என்கிறாள்.

இவ்விதமாக அப்பெண்கள் வேண்டியும் அதைப் பொருட் படுத்தாமல் கண்ணன் அவர்களது சிற்றில்களைச் சிதைத்ததனால் வருந்திய அச்சிறுமியர், மறுநாள் தெருவில் விளையாட, குறிப் பிட்ட ஒரு வீட்டைத் தேர்ந்தெடுத்து அவ்வீட்டுக் கதவுகளையெல் லாம் நன்கு சாத்தித் தாளிட்டு விட்டு, உள் முற்றத்திலே, இனி, கண்ணன் இங்கு வரமுடியாது. வரமாட்டான் என்றெண்ணி சிறிதும் அச்சமின்றி விளையாடினார்களாம். அப்படியிருந்துங்கூட அம்மாயக் கண்ணன் அவர்களறியாமலேயே அம் முற்றத்தே வந்து அப்பெண்களின் திரளிலே—நடுவே நிற்கின்றான். இவன் எப்படி இங்கு வந்தான் என்று வியந்து பெண்கள் ஒருவரையொருவர் வினைவுகிறார்கள். ஐயோ! இவன் கையில் அகப்பட்டோமே என்று வெட்கிக் கவிழ்தலையிட்டு நின்றார்களாம். அப்போது அக் கண்ணன் தனித்தனியே ஒவ்வோர் ஆய்ச்சியிடத்தும் சென்று 'பெண்ணே இங்கு எப்படி வந்தாய்? உன் கால்கள் நோக வில்லையா? நானும் நீயும் கலந்து பேசிக் களித்து வந்திருக்கலாமே' என்றெல்லாம் நெருங்கிப் பேசி அப்பெண்களின் முகத்தைக் கையால் தொட்டு நிமிர்த்தி கனிமொழிகளைக் கூறிப் புன்முறுவல் பூத்து நின்றான் நாணமுற்ற பெண்கள் சற்றே நாணம் நீங்கப் பெற்று அவனுடன் பேசத் தொடங்கினார்கள். கண்ணா! உனக்கு மாடு மேய்க்கப் போவதற்கு நேரமாகவில்லையா? என்பது தோன்ற கோபாலனான அவனைக் கோவிந்தா என்று விளித்துப் பேசினார் கள் ஆகா! இப்பெண்கள் நம்மோடு பேசிவிட்டார்களே என்ற தைரியத்தால் மேலும் நெருங்கி அவர்களணிந்திருந்த மேலாடை களைப் பற்றி இழுத்தான். அவர்களை வெற்றுடம்பாக்க நினைத் தான். அப்போது அப்பெண்கள் "எம்மைப் பற்றி மெய்ப்பிணக் கிட்டக்கால் இந்தப் பக்கம் நின்றவர் என் சொல்லார்" என்று சொன்னார்கள். அதாவது கண்ணா! நீ எங்களைத் தொடுவது மிகவும் இன்பமாகவே உள்ளது. உனது (ஸ்பரிசம்) தொடு வுணரின்பம் எங்களுக்குப் புதுமையாக உள்ளது. ஆனாலும் அக்கம் பக்கம் உள்ளவர்கள் கண்டால் என்ன நினைப்பார்கள் என்றே அஞ்சுகின்றோம் என்றார்களாம். இதனை "சம்ச்லேஷம் ப்ரவ்ருத்தமான படி" என்பர் பெரிவாச்சான் பிள்ளை (புணர்ச்சி தொடங்கினபடி என்று பொருள்).

ஆழ்வார்கள் ஆண்களாக இருந்தபடியால் நாயிகா பாவனையை ஏறிட்டுக் கொண்டு பெண்ணுடை உடுத்து ''மின்னிடை மடவார்கள்'' (திருவாய் 6.2) போன்ற திருவாய் மொழிகளில் ''என்னுடைய பந்தும் கழலும் தந்து போகு நம்பீ!'' ''ஒரு நான்று தடி பிணங்கே'' என்றாற் போலச் சொல்லுவார்கள். இவற்றில் ஆண் தன்மை தெரிந்து விடுகின்றது. இங்கு, பெண் பிள்ளை தனக்கு அதுக்கு மேலே மென்மை பிறந்து வார்த்தை சொல்லும வீறுபாடு என்னே! என்று நம்பிள்ளை ஈடுபட்டு உருகுவாராம்! ஆண்டாள் இயற்கையாகவே பெண்ணாகையாலே ஆழ்வார்களைப் போல பெண்பாவனையை ஏற்றுக் கொள்ளாமல் இயற்கையாகப் பேசுவது மிக்க சுவையுடையதாகிறது என்று பொருள்.

இப்படிக் கண்ணன் இப்பெண்களின் சிறுவீடுகளை மாத்திரம் சிதைக்கவில்லை. இவர்கள் சிந்தனையையும் சிதைத்து ஆட்கொண்டு விட்டான் என்பது இப்பதிகத்தால் உணர்த்தப் படுகிறது.

முற்றத்தூடு புகுந்து நின்முகம் காட்டிப் புன் முறுவல் செய்து
சிற்றிலோடெங்கள் சிந்தையும் சிதைக்கக் கடவையோ கோவிந்தா
முற்றம் மண்ணிடந்தாவி விண்ணுற நீண்டளந்து கொண்டாய்—எம்மைப்
பற்றி மெய்ப்பிணக்கிட்டக்கால் இந்தப் பக்கம் நின்றவர் என் சொல்லார்.

என்ற பாட்டில் எத்தனை நயம் அமைந்துள்ளது.

## பெண்கள் குளிக்கும் துறையில் கண்ணன்

இடைக்குலப் பெண்களுக்கு அடிக்கடி கண்ணனால் இன்பத் தொல்லைகள் உண்டானபடியால் இடைக்குலப் பெரியவர்கள் அப்பெண்களைக் கண்ணனிடமிருந்து பிரித்து நிலவறைகளில் அடைத்து வைத்து விட்டார்கள். பிரிவாற்றாமையால் பெண்களைப் போலவே கண்ணனும் வருந்தினான். மழையின்றி நாடும் வளங் குன்றியது. பசும்புற்கள் தழைக்காமையால் ஆவினங்களுக்கு மேய்ச்சல் குறைபட்டது. இதற்கான காரணங்களை ஆயர்குலப் பெரியோர்கள் கலந்தாலோசித்து, சன்னிப்பெண்கள் நோன்பு நோற்றால் மழைபொழியும் என்று கருதி நிலவறையில் அடைக்கப்பட்டிருந்த பெண்களை விடுவித்து நோன்பு நோற்கப் பணித்தனர்.

பெண்கள் பொழுது புலரும் முன்பே யமுனையாற்றில் குடைந்து நீராடும் பொருட்டுப் புறப்பட்டனர். அவர்கள் முன்பு கண்ணனோடு நீராடிக் களித்த பொய்கைப் பகுதிக்குச் செல்லாமல் வேறொரு துறையைத் தேர்ந்தெடுத்துச் சென்றனர். தாங்கள் திரளாகச் சென்றால் அக்கண்ணன் சுவடறிந்து வந்து விடுவான் என்றெண்ணி தனித்தனியாகவே சென்றனர். அப்படிப் போகும் போது கூட வழியறிய முடியாதபடி அடிச்சுவடுகளை அழித்து விட்டுச் சென்றார்கள். கண்ணன் அறிந்துவிடக் கூடாது என்று திட்டமிட்டுச் சென்றார்கள். இவர்களது திட்டத்தை அறியாதவனா அவன்! மாயனல்லவோ அவன்!

பெண்கள் செல்கின்ற நீர்துறையை அறிந்துவிட்டான். இருள் போன்ற கருநிறம் படைத்த கண்ணன் இருளிலே மறைந்து சென்று அப்பெண்கள் வரும்முன்பே அப்பொய்கைக் கரையில் மறைந்து நின்றான். அவனது வருகையை அப்பெண்கள் அறிந்திலர். இடைக்குலப் பெண்களாகையால் அவர்கள் தங்கள் வழக்கப்படி அணிந்திருந்த ஆபரணங்களையும் உடுத்தியிருந்த பட்டாடைகளையும் களைந்து கரையில் வைத்துவிட்டு உவகைமிக நீரிலே திளைத்து மூழ்கி விளையாடினர். இதுவே தக்க தருணம் என நினைத்த கண்ணன் அவர்கள் கரையிலே விட்டுச் சென்ற ஆடை ஆபரணங்களையெல்லாம் வாரிச் சுருட்டிக் கொண்டு அருகே யிருந்ததோர் குருத்த மரத்தின் மீதேறி மறைந்து நின்றான்.

நீராடி முடித்தபின் கரையேறிவந்த ஆய்ப்பெண்கள் தாம் வைத்துச் சென்ற ஆடைகளைக் காணாது திகைத்து செய்வதறியாது நின்றனர். தமது ஆடைகளைக் கவர்ந்து சென்றது யாரென்றறிய நாற்புறமும் நோக்கினர். குருத்த மரத்தின் இலைகள் சலசலத்த ஓசைகேட்டு நிமிர்ந்த பெண்கள் கண்ணனைக் கண்டனர். ஆஹா! இக்கள்வன் எப்படியோ நாம் இங்கு வந்துள்ள சுவடறிந்து வந்துவிட்டானே! நாமும் இவனை மடிபிடித்து நமதாடைகளைப் பெறவேணும் என நினைத்து அக்கண்ணனை ஏத்திப் புகழ்ந்து வாழ்த்தியும், தாழ்த்தியும், சீறியும், வெறுத்தும் பேசி யாசித்தனர். தங்களது ஆற்றாமையும், அடைந்த அவமானத்தையும், வெளிப்படக் கூறி முடிவில் அவனால் வழங்கப்பெற்ற தமதாடைகளைப் பெற்று கரை யேறினார்கள்.

இவ்விதம் ஆய்க்குலப் பெண்கள் அடைந்த ஆற்றாமைத் துயரை ஆண்டாள் ''கோழியழைப்பதன் முன்னம் குடைந்து நீராடுவான் போந்தோம்'' என்ற பதிகத்திலே மிக அழகாகத்

தெரிவித்துப் பாடியிருக்கிறாள். இப்பதிகத்துக்கு உரையாசிரியர், இருதிறத்தார் உரையாடலாக நயம்பட உரை வகுத்துள்ளார்.

கண்ணனறியா வண்ணம் பெண்கள் பொய்கைக்கு நீராட வந்ததும், பெண்களறியா வண்ணம் கண்ணன் அங்கு வந்து ஆடைகளைக் கவர்ந்து குருந்த மரமேறி ஒளிந்து நின்று வருந்தியதுமாகிய செய்கைகளை வருணிக்கும் ஆண்டாள் பாசுரங்களில் பல உண்மைகள் காட்டப் பட்டுள்ளன. இவர்களை யும், நம்மையும் கூட்டி வைப்பது இவர்களது தொழுகையாம். இவர்களை அவ்வாறு செய்விப்போம் என எண்ணினான் இறைவன்.

பொதுவாக ஆறு அல்லது பொய்கையில் நீராடும் பொழுது, இருபாலரில் யாராகவிருந்தாலும் ஆடையின்றி குளித்தல் கூடாது, ''உடுத்தல்லால் நீராடார்'' என்பது சாத்திர விதி—அதை மீறினார்கள் பெண்கள். ஆதலால் அவர்கள் தங்கள் ஆடை களைத் தரும்படி தன்னை வேண்டி நின்ற பெண்களிடம் கண்ணன், ''நீங்கள் விதிக்குப் புறம்பாக வெற்றுடம்போடு நீராடினீர்கள்; எனக்குத் தெரியாமல் இப்பொய்கைக்கு வந்துள்ளீர்கள்; இது பெருந்தவறாகும். இதற்குப் பிராயச்சித்த மாக (கழுவாயாக) தலைக்குமேல் கைகுவித்து வணங்கினால்தான் ஆடைகளைத் தருவேன்'' என்றானாம்.

இடுப்பளவு நீரில் நின்ற அப்பெண்கள் ஒரு கையைத்தூக்கி வணங்கியது கண்ட கண்ணன், இரு கரங்களையும் தலைக்கு மேல் குவித்துத் தொழுவதே முழுவணக்கமாகும் என்று கூறினானாம். அப்பொழுதுதான் உங்களுக்குப் புடவைகிடைக்கப் பெறும் என்றானாம். துகிலிழந்து தண்ணீரில் நின்றவாறு தவித்த பெண்கள் இருவரிருவராய்ச் சேர்ந்து ஒருவள் ஒருகையால் மற்றொருத்தியின் கையைப் பிடித்து உயரத் தூக்கி ''தோழியும் நானும் தொழுதோம்'' என்று சொல்லி வணங்கினாராம். அப்பொழுது கண்ணன், பெண்காள்! உங்கள் ஒவ்வொரு வருக்கும் இரண்டு கைகளிருக்க, ஒருத்தி மற்றொருத்தியின் கையைப் பிடித்துயர்த்தித் தொழுவானேன்? என்று கேட்டானாம். உடனே பெண்கள் நாணத்தால் தலைகவிழ்ந்து நின்று ''ஏழைமை ஆற்றவும் பட்டோம், இனி என்றும் பொய்கைக்கு வாரோம்'' என்று கூறினார்கள். கண்ணா! உன்னால் பட்ட துன்பங்கள் போதும்; இனி என்றுமே பொய்கைக்கு வரமாட்டோம் என்று கூறுவதாகப் பாசுரம் அமைந்துள்ளது. ''தோழியும் நானும் தொழுதோம் துகிலைப் பணித்தருளாயே'' என்று கேட்டு ஆடைகளைப் பெற்றனர். இனி ஆண்டாளுடைய

'கூடிடு கூடலே' என்று முடியும் கூடலிழைத்தல் பதிகத்தின் சொல்லாட்சியும், பொருளாட்சியும் அமைந்துள்ள பாங்கினைப் பார்ப்போம்.

## கூடிடு கூடலே

ஆண்டாளுக்குக் கண்ணனோடு கூடுதலும், பிரிதலுமாகிய இரண்டும் அடிக்கடி நிகழ்கின்றன. கலவியுண்டானால் அது மீண்டும் பிரிவிலேதான் முடியும் என்பது உலகியற்கை. இப்படிப் பிரிந்தவர் மறுபடியும் கூட முயல்வதும் இயற்கை. இந்நிலையில் பிரிவாற்றாமையால் வருந்திய ஆண்டாள் அக்கண்ணனோடு கூட ஆசைப்படுகின்றாள் அதற்காகச் சில செயல்களில் ஈடுபடுகிறாள். குறி பார்க்கிறாள்.

வட்டமாகக் கோடிட்டு அதற்குள்ளே சுழி சுழியாகச் சுழித்து இரண்டிரண்டாகக் கூட்டிப் பார்க்கும்போது இரட்டைக் கணக்காக முடிவுற்றால் கூடுகை விளையும்; ஒற்றைக் கணக்காக முடிவுற்றால் கூடாமை என்று முடிவு செய்து கொண்டு குறிபார்ப்பதே கூடலிழைத்தல் என்பதாகும். இதையே 'சாருதாவலோகநம்' என வடநூலார் கூறுவர். கூடல், கூடலிழைத்தல், கூடல் வளைத்தல், கூடற்குறி என்றெல்லாம் பல பெயர்களில் இச்செயல் கூறப்பட்டுள்ளது. திருமழிசையாழ்வார், "அழைப்பன் திருவேங்கடத்தானைக் காண, இழைப்பன் திருக்கூடல்" என்று கூறியுள்ளது இங்கு நோக்கத் தக்கது. இனி கோதையின் கூடல் பதிகப் பாசுரமொன்றின் நயத்தினை நுகர்வோம்.

## ஊடலும் உணர்த்தலும்

திருவாய்ப்பாடிப் பெண்கள் அழகாலும், உருவாலும் சிறந்தவர்கள். அவர்கள் அடிக்கடி கண்ணனோடு கூடிக் களிப்பதுண்டு. ஊடிப்பிரிவதுமுண்டு. ஊடல் என்பது தலைவன் தலைவியரிடையே விளையும் சிறு பிணக்கு. இது அன்பால் விளைவது. தலைவன் தனக்கே உரியவனாய்த் தன்னையொழிய வேறொரு பெண்ணைச் சிந்தையாலும் நினையாதவனாய் இருக்க வேண்டும் என்று கருதுவது உயர்ந்த பண்பாடுகளை உடைய தலைவியின் இயல்பாகும். சில நேரங்களில் தன் தலைவனது செய்கைகளில், சொற்களில் தலைவிக்கு ஐயப்பாடு தோன்றிவிடும். அப்போது அவள் தனது தலைவனை நோக்கி, "நீ அங்கு நின்றாய், இங்கு பார்த்தாய், உன் உடலில் பூமணம் வீசுகிறது, கண்கள் சிவந்துள்ளன, முடி நெகிழ்ந்துள்ளது, ஆடை சுருக்குண்டிருந்தது. என்றெல்லாம் ஏசியும், பேசியும், சீறியும், சினந்தும் தலைவன் தன்னை அண்டவிடாமல் தடுப்பாள்.

தலைவன் அவள் ஐயத்தைப் போக்கிச் சினந்தணிய பலவாறு கூறிச் சமாதானம் செய்விப்பான். இதனை ஊடல் நிலை என்று இலக்கியம் பகரும். பிரணய கலகம் என்பர் வடநூலார்.

ஊடலை அடுத்து நிகழ்வது உணர்தல். உணர்தலாவது ஊடல் கொண்டு சினந்து சீறும் தலைமகளைச் சமாதானம் செய்ய தலைவன் கூறுவன. பெண்ணே, முத்தே, பூம்பாவாய், நீ என்னைச் சந்தேகிக்கலாமா? உன்னைக் காணவென்றே நான் குளித்து அலங்கரித்துக் கொண்டு பூச்சூடி வந்தேன் என்றெல்லாம் சொல்லிச் சமாதானப்படுத்துதலாகும். இதனையடுத்து புணர்தல் நிகழுமாம்

> ''ஊடல் உணர்தல் புணர்தலிவை மூன்றும்
> காமத்தாற் பெற்ற பயன்''

என்ற இம்மூன்றையும் பிரயோசனமாகச் சொன்னார்கள் தமிழர் என்பது திருவாய்மொழி உரையாகிய ஈட்டில் காணப்படும் குறிப்பு. திருக்குறளில் புணர்ச்சி மகிழ்தல்' என்ற அதிகாரத்தில் ஒன்பதாவது குறளும் இங்கு ஒப்புநோக்கத் தக்கது. இக்குறளுக்குத் தலைமகன் தன்மீது தவறில்லாமையைச் சொல்லி நாயகியினுடைய ஊடலை நீக்குதல் என்று பொருளுரைக்கப்பட்டது.

## நிறை புகழாய்ச்சியர்

கோவலர்தம் குலக்கொழுந்தான கண்ணனை ஆய்ப்பாடிப் பெண்கள் அனைவரும் ஆசைப்படுகிறார்கள். அவனும் தன்னுடைய அதியற்புத மகிமையால் அத்தனைப் பெண்களுக்கும் தன்னையளிக்கிறான் (காட்சி நல்கி ஆட்கொள்கிறான்). இருந்தாலும் பெண்களுக்குள்ளேபோட்டியும் பொறாமையும் உண்டாகி விடுகிறது. கண்ணனோ, அப்பெண்களில் ஒவ்வொருத்திக்கும் நேரம், இடம் இவற்றைத் தனித்தனியே குறிப்பிட்டு அவர்களோடு பேசவும் பழகவும் சொல்கிறான். அப்பெண்களும் அவனால் குறிப்பிடப்பட்ட ஆற்றுமணல் குன்றுகளிலும், பூம்பொய்கைக் கரைகளிலும், மாதவிப் பூம்பந்தல் நிழலிலும், சோலைகளிலும் பனியையும் பொருட்படுத்தாது காத்திருந்து கண்ணன் வரக் காணாமையால் மிகவும் சோர்ந்து மனம் தளர்ந்து வீடு திரும்புவர். இப்படிப் பலமுறை பரிபவப்பட்ட பெண்கள் இனி என் வீட்டுக்குக் கண்ணன் வரட்டும் என்ன பாடுபடுத்துகிறேன் பார்! என்று கோபித்துள்ளனர். கண்ணனோ பெண்களுக்கு நாளும் இடமும் குறித்துச் சொன்னதையெல்லாம் மறந்து தன் மனதுக்கு இனியாளான ஒருத்தியோடு கூடிக்களித்துப் போது போக்குவான். பிறகு தனக்கு நினைவெழுந்தபோது சாவகாசமாக

ஒரு நாள் அக்கண்ணன் மிக்க அன்புடையவன் போல நடித்துப் பெண்களின் மனதைக் கவரும் வகையில் ஆடிப்பாடிக் கொண்டு அவ்வாய்ப்பாடிப் பெண்களின் இல்லங்களுக்குச் செல்வான் அப்போது அப்பெண்கள் கண்ணனைப் பார்த்தும் பாராதது போல் சினந்து தம் முகத்தை வேறு திசை நோக்கித் திரும்பி நின்று வாய்பேசாது அலைக்கழிப்பர். இவனோ கண்ணீர் பெருகி நின்றும், காலில் விழுந்து கும்பிட்டும், ஊனுறக்கமின்றி அவர்கள் வீட்டு இடை கழித் திண்ணையில் விழுந்து கிடப்பான். இப்படிக் கிடப்பவனைக் கண்டு அவ்வீட்டுப் பெண்ணின் மனம் இரங்கும். பின்பு கண்ணனை உள்ளே அழைத்துச் சென்று உபசாரம் பலவும் செய்வாள். இவள் கண்ணனை பட்டினி போட்டவள்.

இன்னொரு வீட்டுப்பெண் மற்றவளையும் மிஞ்சியவளாய் தன் வீட்டு இடைகழியில் பட்டினியாகப் படுத்திருக்கும் கண்ணனை, சில நாட்கள் சென்றபோதும் மனமிரங்காதவளாய் முகங்கொடாமலிருந்து பின்னர் மனமிரங்கி வரவேற்று உபசரிப்பாளாம். மற்றொருத்தி கண்ணனைப் பலநாட்கள் பட்டினியாகவே கிடக்கும்படி விட்டு வைப்பாளாம். கண்ணனை யார் அதிக நாள் பட்டினி போட்டது என்று, அப்பெண்களுக்கிடையில் போட்டியே தோன்றியது போலும்! இவ்வாறாகக் கண்ணன் பலநாள் பட்டினி கிடந்தாலும் அப்பெண்களை விரும்பியதற்குக் காரணம் அவ்வாய்ச்சிகளின் கள்ளங்கபடமற்ற பிரேமையுடன் கூடிய கிருஷ்ண பக்தியே ஆகும். அவ்வாயர்குலப் பெண்களின் ஆத்ம குணம் பற்றிய தனிச் சிறப்பே இதற்குக் காரணம் என்பர் பெரிவாச்சான்பிள்ளை.

இப்படிக் கண்ணனைப் பலநாட்கள் பட்டினி போட்ட ஆய்ப்பாடிப் பெண்களை ''நீடு நின்ற நிறைபுகழ் ஆய்ச்சியர்'' என்று ஆண்டாள் குறிப்பிட்டுள்ளார். ''ஆய்ச்சியருக்கு'' நிறை புகழாவது, கிருஷ்ணனை இன்னாள் நாலு பட்டினி கொண்டாள், இன்னாள் பத்து பட்டினி கொண்டாள். என்னும் புகழ்காணும் என்று எம்பார் பணிப்பர் என்ற வியாக்கியான வரி கருதத்தக்கது. உண்ணாநோன்பிருந்து காரியம் சாதிப்பது என்ற வழக்கம் அக் காலத்திலும் இருந்தது போலும்.

## கூவாய் பூங்குயிலே

ஆண்டாள் கூடலிழைத்துக் கண்ணனோடு கூடுவேனா மாட்டேனா என்று கேட்ட பொழுது, அக்கூடல் குறி அசேதனமாகையாலே (அறிவில்லாமையாலே) பேசாமலிருந்து விட்டது.

இனி சேதனமாய்க் கூவி கருத்தைச் சொல்லவல்ல குயிலைத் தூது விடுவதாக நாச்சியார் திருமொழியில் பத்துப் பாசுரங்கள் காணப் படுகின்றன.

பெரியாழ்வார் பயிராக்கிய நந்தவனத்தில் புன்னை, செருந்தி குருக்கத்தி, கோங்கு முதலிய பலமரங்கள் செழித்து வளர்ந் திருந்தன. அம்மரங்களின் அடர்ந்த இலைப்பரப்பிலும், கிளை களிலும் குயில்கள் கூவிக்கொண்டு இனிதாக அமர்ந்திருப்பதைக் கண்டு ஆண்டாள், அக்குயிலை வேண்டுகிறாள். "ஏ குயிலே! நான் கண்ணனைப் பிரிந்து படாதபாடுபட்டுத் தவிக்கும் போது நீயும் என்னுடன் வருந்துவதோ, அல்லது வருத்தத்தைப் போக்கு வதோ செய்யாமல் புன்னையும், குருக்கத்தியுமான படுக்கையிலே ஆனந்தமாகப் படுத்து இன்பமாகக் கூவி மகிழ்ந்து வாழ்கிறாயே. இது நியாயமா? "மென்மலர்ப்பள்ளி வெம்பள்ளியாலோ" என யான் வாடி வதங்க நீ மட்டும் களிப்புடன் வாழ்வது முறையோ என்று அக்குயில் இன்னபடி செய்ய வேண்டும் என்பதை "மன்னு பெரும் புகழ் மாதவன்" என்ற பாசுரத்தில் கூறியுள்ளாள். இப் பதிகத்தில் ஆண்டாள் தன் விரக வேதனையைத் தெரிவித்திருப்ப தோடு தன் காதலனின் இயல்புகள், குணாதிசயங்கள் முதலிய வற்றையும் பட்டியல் போட்டுக் குறிப்பிட்டுள்ளாள். தன்னால் விரும்பப்படும் நாயகனாகிய கண்ணன் மிக உயர்ந்தவன் என்கிறாள்.

உலகில் அனைவராலும் பழிக்கப்பட்டவனாகவும், பிச்சைக் காரனாகவும், கண்கொண்டு காணமுடியாத படி விகாரமான உருவத்தை உடையவனுமான கீழ்ப்பட்டவன் ஒருவனை நான் விரும்பவில்லை. நான் விரும்புகின்ற நாயகனோ நாற்றிசைகளிலும் பரவிய நற்கீர்த்தியை நிரம்ப உடையவன். திருமாமகள் கொழுநன்; கண்டார் கண்களைக் கவரும் படியான நீலமணி நிறத்தன். அனைவரையும் காப்பாற்ற வல்லவன், அசகாயசூரன். இப்படிப் பலபடியாலும் சிறந்த ஒப்புயர்வற்ற ஒருவனையே யான் ஆசைப் படுகிறேனேயன்றி சாதாரண மனிதனொருவனை நான் ஆசைப் படவில்லை. அப்படிப்பட்ட நான் அவனுடன் கலவி கிடைக்காமல் சங்கிழந்து அழகு குலைந்து அழியலாமா குயிலே! நீயே கூறு வாயாக என்றாள்.

குயிலுக்கு தன் காதலனது அடையாளங்களைக் கூறுவது போல இரண்டாவது பாடல் அமைந்துள்ளது 'வெள்ளை விளி சங்கு இடங்கையிற் கொண்ட விமலன்' என்றாள். கருத்த நீருண்ட

மேக மேனியனான அக்கண்ணனுடைய அழகை எடுத்துக்காட்ட அவன் கையில் வெண்ணிறமுடைய சங்கு மிளிர்கிறதாம். தூய மணமுடையவன் அவன். தன் அடியார்களைக் காப்பதற்கென்றே ஐந்து ஆயுதங்களைக் கையிலேந்திய வண்ணமிருக்கிறான். ஆனாலும் ஏனோ எனக்குக் காட்சியளிக்கக் காலந்தாழ்த்து கின்றான். மீனுக்குத் தண்ணீர் வார்ப்பாரைப் போல நித்ய சூரிகளுக்குக் காட்சி தந்து என்னை ஏமாற்றுபவனாய் உள்ளான். முடியப்போகும் உயிரை மறுபடியும் உயிர்ப்பித்து வருந்துகிறான் அந்தோ யான் என் செய்வேன். செண்பக மலரில் பொருந்திக் களித்து வாழும் குயிலே என் வேங்கடவன் வரக் கூவாய் என்று பணிக்கிறாள்

மற்றொரு பாட்டில் ஏ, குயிலே! என் துன்பம் பேயெழுந்த வாரியான துன்பமன்று. உடலைமட்டும் வருத்திநிற்பதொன்றன்று; எலும்பையும் உருக்கவல்லதும் பொறுக்க வொண்ணாததுமான பெருந்துன்பம் இது. ஒரு நொடிப் பொழுதும் உறங்க முடியவில்லை ஒரு நாளல்ல இருநாளல்ல பல நாட்களாக இப்படிப் படாதபாடு படுகின்றேன் என்று கூறுகிறாள். அதோடு பிரிவுத்துன்பத்தை இப்போது நீ உணராவிட்டாலும் முன்பு நீயும் பிரிந்து இத் துன்பத்தை அனுபவித்துணர்ந்திருப்பாயே! துன்பக் கடலில் துவளும் நான் அவ்வைகுந்தநாகிய தோணி கிடைக்காமல் கரை யேற முடியாமல் தவிக்கிறேன். பொன் போன்ற மேனியனும், கருடக் கொடியை உடையவனுமான என் நாயகனை வரக் கூவு என்று குயிலை வேண்டுகிறாள். இப்பாடலில் 'கண்ணன் என்பதோர் தோணி பெறாது' என்று ஆண்டாள் சொல்லாமல் 'வைகுந்தன் என்பதோர் தோணி பெறாது' என்று சொல்வதற்கு முக்கிய காரணம் ஒன்று உண்டு. கண்ணன் உகந்தருளிய தலங் களுக்கே போய் அவனது அர்ச்சாவதார திருமேனிகளைத் தீண்டி அணைத்தல், பேசி மகிழ்தல் முதலிய இன்பங்களைப் பெற முயன்றும் ஆண்டாளால் அவ்வாறு பெற முடியவில்லையாம். பிறகு தான் அக்கண்ணன் பிறந்து வாழ்ந்த காலமான விபவாவதார மான நிலைக்குச் சென்றாளாம். (விபவம்-அவதாரம்) விபாவதார காலநிலையோ அக்காலத்தே வாழ்ந்தார்க் கன்றிப் பிற்காலத் தவர்க்குக் கிட்டக் கூடியதல்ல, அனுபவிக்கக் கூடியதல்ல. எனவே இதுவும் பயன்பட்டிலது. ஆகையால் தான் வைகுந்தனது இருப்பிட மான பரமபதத்தினை நினைத்து, இப்பொழுது கூவியழைக்கின்றா ளென்பர். அப்படியும் அவன் வரக்காணாமையால் ஏ, குயிலே! என்னிலையையெல்லாம் உடனிருக்கும் நீ யறிவாயாதலின் அவனை என்னிடம் வருமாறு கூவுவாயாக என்கிறாள்.

ஆண்டாள் ஊணுறக்கமின்றி வாடிவதங்கி நிற்கிறாள். பரம பதநாதனான அம்மாயவன் அங்கிருந்து திருவாய்ப்பாடிக்கு வந்ததற்கும், இப்பொழுது அர்ச்சாவதாரமாக விக்ரக வடிவில் ஸ்ரீவில்லிபுத்தூரில் காட்சியளிப்பதற்கும் என்ன காரணம்? ஆண்டாளைப் போன்றவர்கட்கு முகம் காட்டிக் காப்பதற்கன்றோ இங்கு வந்துள்ளான்! அப்படியிருந்தும் அவனுடன் கலவி கிடைக்கா விட்டாலும், காட்சிகூட கிடைக்கவில்லையே என்ற கவலை பிறந்தது என்கிறாள். இங்கே ஒரு ஐயத்தைத் தோற்றுவித்தார் நம்பிள்ளை என்பவர். அதாவது, வெகு தொலைவில் இருக்கும் வைகுந்தம் ஆண்டாளுக்கு அரிதாய் இருக்கலாம். ஆனால் அவள் பிறந்து வளர்ந்து வசித்து வரும் ஊரிலுள்ள எம்பெருமானைக் காண அவளுக்கு என்ன தடை என்பதே அது. இதற்கு நஞ்சீயர் என்ற ஆசாரியச்சிரேட்டர் கூறிய விடை மிகவும் நயமிக்க தொன்று. அதாவது ''ஆண்டாள் ஸ்ரீவில்லிபுத்தூரிலே பிறந்து வளர்ந்து வருபவளாயினும், அவ்வூர்க் கோயிலிலே சென்று அப்பெருமானைச் சேவிப்பது அவளுக்கு அவ்வளவு எளிதான செயலல்ல. நாமெல்லாம் கோயிலுக்குப் போய் வந்தால் எந்த விதமான சித்தவிகாரமும் இன்றிக் கல்போல் போய் கல்போலவே திரும்பி வந்துவிடுவோம். குறியழியவே மாட்டோம். ஆண்டாளுடைய தன்மை அபபடிப்பட்ட தன்று. அவள் உள்ளே புகுந்தவாறே, அந்த எம்பெருமானுடைய சில குணத்தை அநுசந்தித்து அதிலே ஆழங்கால் பட்டு மயங்கி பரதாழ்வானைப் போலே மோகித்துக் கிடப்பளாய்த்து.

இத்தன்மையினை உணர்ந்திருந்த உறவினர் இவளைக் கோயிலுக்கே போக வொட்டார்கள். இவளால் அவ்வூர் பெருமானையும் கண்டு மகிழ முடியாமற் போனதனால் தான் ''வில்லிபுத்தூர் உறைவான் தன் பொன்னடி காண்பதோ ராசையினால், என்பொரு கயல் கண்ணிணை துஞ்சா'' என்று இவள் பாடினாள்'' என்றாராம்.

இத்தகைய அநுபவம் நம்மாழ்வார் பாசுரத்திலும் காணப்படுகிறது. நம்மாழ்வாராகிற பராங்குச நாயகிக்கு உற்ற நோயைப்பற்றிக் கூறும்போது, 'அநியாயமாய் இவளைக் கோவிலுக்கு அழைத்துப் போய் பெருமானைச் சேவிக்கச் செய்து அதனால் சித்தவிகாரத்தை உண்டாக்கி அவன் வலையில் அகப்படுத்தி இழந்தீர்களே' என்று.

"குழையும் வாண்முகத் தேழையைத் துலைவில்லி
மங்கலம்—கொண்டு புக்கு;
இழைகொள் சோதிச் செந்தாமரைக் கட்பிரானிருந்தமை
காட்டினீர்"

என்று கூறப்பட்டுள்ளது. அதுபோல நாலுபேர் (ஊரார்) வசை கூறும்படி நேர்வதைக் காட்டிலும், இவளைக் கோவில் வழி செல்ல விடாமல் காத்து வைப்பதே இவளுக்குச் செய்யும் நன்மை என்று நினைத்துத் தாய் தந்தையர் இவளை அகத்தினுள்ளேயே அடக்கிவைத்திருப்பார்கள். அதனாலேதான் ஆண்டாள் "வில்லிபுத்தூருறைவான்றன் பொன்னடி காண்பதோ ராசையினால் என் பொருகயல் கண்ணிணை துஞ்சா" என்று கூறுவது பொருத்தமேயாகும்.

மேலும் பரமபத நாதனுடைய பொன்னடிகளைச் சேவிக்கப் பெறாமை பற்றி, இவளுக்கு வருத்தமில்லை. அது வெகு தொலைவில் உள்ள இடம். மீனுக்குத் தண்ணீர் வார்ப்பது போலில்லாமல் விடாய்த்தவர் கட்கெல்லாம் தண்ணீர் வார்ப்பது போல், காண ஆசைப்பட்டவர்கட்கெல்லாம் காட்சி தருவதற்கென்றே வந்தருளின இடத்தில் காண முடியாத போது அலமாப்பு அதிகமாகிறது. அதன் வெளிப்பாடே இப்பாசுரம் என்பர். அன்றியும் இப்பாட்டில் 'உலகளந்தான் வரக் கூவாய்' என்பது கருத்துப் பொதிந்த ஒன்றாகும். 'அம்மான் ஆழிப்பிரான்' என்று எங்கோ மிக உயர்ந்தவனாக விளங்கும் அப்பரமன், ஒரு எளிய குயில் கூப்பிட்டு ஒரு மானுடப் பெண்ணுக்காக ஓடி வருவானா என்ற ஐயம் எழலாம். ஆனாலும் அவன் காடுமேடு என்று பாராமலும், இன்னார் இனியார் என்று பாராமலும், எல்லாவுலகங்களையும் அளந்த உத்தமனாகையாலே எல்லாருடைய இருப்பிடத்திற்கும் செல்லக் கூடியவன் என்றே தெரிகிறது.

அப்படிப்பட்ட உலகளந்த உத்தமனை வரக் கூவாய் என்று பணிப்பது பொருத்தமே. இந்தப் பேருதவியைச் செய்யும் குயிலுக்கு இள்ளடிசிலோடு பாலமுது படைத்துத் தருவதாகவும் ஆண்டாள் கூறியுள்ளாள். இதற்கும் மேலாகத் தான் அன்புடன் சீராட்டி வளர்த்த பைங்கிளியை அக்குயிலோடு தோழமைப் படுத்துவதாகவும் வாக்களிக்கிறாள்.

குகனுடைய உள்ளன்பு மிக்க உபசாரத்தில் ஆழங்கால் பட்ட இராமபிரான் அங்குகனுக்கு இலக்குவனைத் தம்பியாக்கி—தோழமையைக் கைம்மாறாகக் கொடுத்த பரிசு போல் ஆண்டாளும் தான் மிக்க அன்புடன் பாராட்டி வளர்த்த பைங் கிளியை அக்குயிலோடு தோழமையாக்கிக் கொடுப்பதைப் பெரிய கைம்மாறாகக் கூறுவது மிக்க பொருத்தமுடையது. இந்தக் குயில் விடு தூதில் பல சமத்காரமான பேச்சுக்களும் காணப்படுகின்றன. வண்டுகளின் ரீங்காரமான இன்னிசை நிரம்பிய சோலையிலே அவ்விசையினைக் கேட்டுக் கொண்டு அதுவே பொழுதுபோக்காக நீ திரிந்தாயாகிலும் ஓ, குயிலே உன்னை நான் விட மாட்டேன். எனது கூக்குரலையும் உன் காதில் விழும்படி கூறுவேன். நான் சொல்வதை ஏனோ தானோ என்று கேளாதே, வண்டுகளின் இசையிலிருந்து நீ காதை மீட்டுக் கொண்டு என் வாய்ச் சொல் லையே குறிப்பாகக் கேள், என்கிறாள். இப்போது என் காதல னான அக்கண்ணனைப் பிரிந்து யான் படும் நோய்சொல்லுந் தர மன்று. எம்பெருமானுடைய வடிவழகில் தோற்றுப்போய் எழுந் திருக்கவும் முடியாமல் படுத்த படுக்கையாய் கிடக்கிறேன். அம் மணிவண்ணன் வாசுதேவனாகிற வலையிலே நான் அகப்பட்டுக் கொண்டேன், என்றெல்லாம் சொன்னாள்.

ஆண்டாளின் சொற்களைக் கேட்ட குயிலானது, இந்தச் சேதி யைச் சொல்லவா என்னை அழைத்தாய்? நன்று, நன்று என்று இவளை அலட்சியம் செய்து விட்டு, மறுபடியும் வண்டுகளின் இசையைக் கேட்கச் சோலைப் பக்கம் செல்ல ஆயத்தமாயிற்று. ஆண்டாளும் இச்சோலையில் நீ சுகமாகத் தங்கியிருக்க விரும்பி னால்என் பேச்சைக் கேட்டேயாக வேண்டும். ஒருக்கால் யான் என் காதலனை அடைய முடியாமற் போனால், என் உயிர் போனாலும் போய்விடக் கூடும். அப்போது நான் உன்னை இச்சோலையினின்றும் விரட்டி விடுவேன். நீ சுகமாக இச்சோலையிலேயே வாழ விரும்பினாயாகில் நான் சொல்லும் இரண்டு காரியங்களில் ஏதேனும் ஒன்றை நீ செய்தே தீர வேண்டும் என்று எச்சரித்து 'வலங்கை ஆழி இடங்கைச் சங்கமேந்தி' நிற்பவனான எம்பெருமானை இங்கே வரும்படி கூவுதல் ஒன்று; கழன்று விழுந்த என் கை வளையல் களைக் கொண்டு வந்து தருதல் மற்றொன்று. இவ்விரண்டனுள் ஏதேனும் ஒன்றைச் செய்தே தீர வேண்டும்' என்றாள். இப்படிக் கேட்பதில் ஒரு சமத்காரம் அமைந்துள்ளது. கண்ணன் இவ ளைப் பிரிந்ததனால் இவளது உடல் இளைத்துப் போய் கை வளையல்கள் கழன்று விழுகின்றன. இவளது கை வளைகள் கழலாமல் தங்க வேண்டுமானால் உடல் பூரிப்படைய கண்ணன்

இவளை அணைக்க வேணும். அதற்காக, அவன் இவளருகே வர வேணும். இப்படி இரண்டு காரியங்களும் ஒன்றாயிருக்க, அவன் வருதல் அல்லது கைவளை தருதல் என்று வேறுபடுத்தினாற் போல் கேட்டது சமத்காரம். இது மாம்பழமாவது, மாங்கனி யாவது வேண்டும் என்பது போலுள்ளது. இதை ஒரு சமத்கார மானப் பேச்சாகப் பெரியோர் கருதினர்.

கற்புக்கரசியென்றும், பதிவிரதாசிரோன்மணியென்றும் போற்றப்படும் சாவித்திரியானவள் தன் கணவனான சத்தியவானுடைய உயிரைக் கவர்ந்து செல்கின்ற யமதருமனை வணங்கி, அவனுயிரை மீண்டும் தரும்படி பலவாறு வேண்டியும், அவன் அதற்கு இசையாமற் போகவே, சமத்காரமாகப் பலவும் பேசி யமதருமனையே வியப்பில் ஆழ்த்தி, பேச்சினிடையே தனக்குப் பல குழந்தைகள் பிறக்க வேண்டுமென்று ஆசி கோரி அவனருள் பெற்றனள். இங்கே கணவனுடைய உயிரை மீட்டும் பெற கோரிக்கை விடுத்த போது சாவித்திரி அதைப் பெற முடியாமல் போயிற்று. தன்னை கற்புக்கரசி என்று யமதருமனே தான் சொல்லியதை மாற்ற முடியாமல் சாவித்திரியின் மனம் மகிழ சத்தியவானது உயிரை வழங்கிச் சென்றான் என்பது வரலாறு. சாவித்திரியின் சாதுரியத்தைக் கண்ட யமதருமனே வியந்து வாக்குக் கொடுத்ததை மாற்ற முடியாமல் அவளது வேண்டுகோளை நிறைவேற்ற நேர்ந்தது.

அதேபோல இங்கும் ''சங்கொடு சக்கரத்தான் வரக் கூவுதலும், பொன்வளை பொருந்தத் தருதலும்'' ஒன்றாகவே இருந்து ஒரே பயனை விளைவிப்பதாயினும் சாதுரியமும் சமத் காரமும் தோன்றப் பேசும் நயம் ஆண்டாளின் பாசுரத்தில் அமைந்திருப்பதைச் சுவைக்க முடிகிறது. பாசுரத்தின் முழு வடிவத்தையும் கண்டு மகிழலாமே!

''பைங்கிளி வண்ணன் சிரீதரன் என்பதோர்
பாசத் தகப் பட்டிருந்தேன்,
பொங்கொளி வண்டிரைக்கும் பொழில் வாழ்குயிலே,
குறிக் கொண்டிது நீ கேள்,
சங்கொடு சக்கரத்தன் வரக் கூவுதல்
பொன்வளை கொண்டு தருதல்,
இங்குள்ள காவினில் வாழக் கருதினில் இரண்டத்து
ஒன்றேல் திண்ணம் வேண்டும்''

என்பதே ஆண்டாளின் அச்சொல்லோவியம்.

## சங்கே! திருப்பவளச் செவ்வாய் தித்திக்குமோ?

குயிலைக் கண்ணனிடம் தூதுவிட்ட கோதை, அக் கண்ணனைக் கனவிலே கண்டாள். அப்போது அவனுடைய பவளம் போல் சிவந்த உதடுகளோடு தன் உதடுகளையும் பொருத்தி, அவனது வாய்ச் சுவையைப் பருக ஆசை கொண்டாள். துயிலுணர்ந்து கண் விழித்தபோது, நனவில் அவனது அதரங்களின் சுவையை அவளால் உணர முடியவில்லை. சற்றே சிந்தித்தாள். கண்ணனின் கையிலே களித்திருக்கும் சங்கின் நினைவுதான் அகக்கண்ணில் காட்சியளித்தது. ஆகா! இந்தச் சங்கின் பாக்கியமே பாக்கியம்! என்னைப் போலில்லாமல் எப்போதும் கண்ணனின் வாயமுதத்தைப் பருகிக் களிக்கும் வெண்சங்கின் பேறு எனக்குக் கிட்டவில்லையே. இச்சங்கு என்ன பாக்கியம் செய்தது; என்ன பாக்கியம் செய்தது என்று பாராட்டினாள். இப்படி ஒருபுறம் பாராட்டும், மற்றொரு புறம் அச்சங்கின் மீது பொறாமையும் வளர்ந்தது. அச்சங்கையே கேட்டறியலாமே என்ற எண்ணம் தோன்றியதும் அதனோடு பேசத் தொடங்கி விட்டாள். ''ஓ பாஞ்ச சன்னியம் என்று பெயர் பெற்ற சங்கே! கண்ணபிரானது திருப்பவள வாயிலூறும் அமுதப் பெருக்கை நீ இடைவிடாது அனுபவிக்கிறாயே; அத்திருவாயின் பரிமளமும் அமுதத்தின் சுவையும் எபபடித் தித்தித்திருக்கின்றது என்று எனக்குச் சொல் அதை என் காதால் கேட்டாலது இன்புறுகின்றேன்'' என்று கேட்பதாக ஒரு அழகான பாசுரம் அமைந்துள்ளது.

''கருப்பூரம் நாறுமோ கமலப்பூ நாறுமோ
திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித்திருக்குமோ
மருப்பொசித்த மாதவன்தன் வாய்ச் சுவையும் நாற்றமும்
விருப்புற்றுக் கேட்கின்றேன் சொல் ஆழிவெண்சங்கே''

என்பதே சுவைமிக்க அப்பாசுரம்.

கண்ணனது திருப்பவளவாய் **கருப்பூர** வாசனையைப் பெற்றுள்ளதா? அல்லது தாமரையின் நறுமணத்தைப் போன்றதா? அவனது வாயூறல் தித்திப்பாக இருக்கின்றதா? இதை எனக்கு விளங்கும்படிச் சொல்வாயாக என்று கேட்கிறாள். இந்தப் பாடலில் 'வெண் சங்கே' என்ற சொல்லமைப்பு மிக அழகு பெற

அமைந்துள்ளது. 'ஆழி வெண் சங்கே சொல்' என்ற தொடரில் ஆண்டாளின் மன உணர்வு தெள்ளென தெளிவாகின்றது. அது மாத்திரமன்று.

கண்ணன் வாயமுதத்தை இடைவிடாது பருகிக் களித்து அவன் கையிலேயே படுத்துறங்கும் பாக்கியத்தைப் பெற்றிருக்கும் உன் உடம்பு ஏன் வெளுத்துள்ளது? அவன் கரத்தைத் தொடப் பெற்ற (ஸ்பர்சத்தைப் பெற்ற) பாக்கியசாலியான உன் உடம்பே வெளுக்குமானால், அவனைப் பிரிந்திருக்கும் என்போல்வாருடைய உடம்பு வெளுக்கக் காரணம் கேட்க வேண்டுமா? என்பது நயம். மேலும் பல கேள்விகளை அச்சங்கிடம் கேட்கிறாள் ஆண்டாள். ஓ, சங்கே! நீயோ உப்புக் கடலிலே பிறந்தாய். அசுரனான பஞ்சசனன் உடலுக்குள்ளே வளர்ந்தாய். இப்படிப் பட்ட மட்டமான இடங்களிலே பிறந்து வளர்ந்த உனக்கு, அந்தப் பரந்தாமனுடைய திருக்கையிலே நிரந்தரமாக வாசம் செய்யும் வாய்ப்பு எப்படிக் கிட்டியது? அவனுடைய பவளவாயின் இன்னமுதத்தை நுகர்ந்து அதனால் வலிமை மிகப் பெற்று எதிரிகள் கலங்கும்படி ஒலிக்கும் (கோஷிக்கும்) பேறு பெற்றாயா? நீ பெற்ற பேறு அற்புதமிக்கதொன்று. பரிமளத்தோடு திருத்துழாய்ப் பாத்தியிலே பிறந்து, வேதம் வல்லவரான பெரியாழ்வாராலே வளர்க்கப் பெற்றும் எனக்கு அப்பேறு கிடைக்கவில்லையே என்று பொருமுகிறாள். ஆண்டாளின் ஆற்றாமை இவ்வாறு பேச வைக்கிறது.

இந்நிலவுலகில் புண்ய தீர்த்தங்கள் (நதிகள்) பலவுண்டு. அவற்றில் நீராடித் தூய்மை பெற விரும்பும் பல்லாயிரக் கணக்கான பக்தர்கள் நெடுந்தூரம் பயணஞ்செய்து அந்தப் புனிதநீர்த் துறைகளில் நீராடி வருகிறார்கள். நெருக்குண்டும், தள்ளுண்டும் படாதபாடுபட்டு, தீர்த்த யாத்திரையை முடித்து நற்பேறடைந்ததாய் அமைதியடைகின்றார்கள், ஆனால் ஏ, சங்கே! நீ அப்படியெல்லாம் சிறிதளவும் வருத்தமேதும் படாமலே எம்பெருமானுடைய திருக்கைத் தலத்திலேயே எப்போதும் குடியிருந்து அவனுடைய வாயமுதமாகிற மிக மிகப் புனிதமான தீர்த்தத்திலே மூழ்கிக் களிக்கிறாயே! நீ பெற்றுள்ள பாக்கியத்தின் மேன்மை யாரே பெற வல்லார் என்று கொண்டாடிப் பேசுவதாகச் சில பாசுரங்கள் பகர்கின்றன. இவ்விதமாகச் சில பாசுரங்களிலிருந்தாலும் பாஞ்சசன்னியத்தை பழித்துப் பேசுவது போலச் சில பாடல்களும் உள்ளன. அவற்றையும் பார்ப்போம்.

திருவாய்ப்பாடிப் பெண்கள் எல்லோருக்குமே பாஞ்ச சன்னியத்தின் மீது பொறாமை மிகுதியும் ஏற்பட்டிருந்தது. அதற்குக் காரணமும் இருக்கவே செய்தது. அக்காரணம் என்ன வென்றால், எப்பொழுதும் கண்ணனுடைய வாயமுதத்தைப் பருகி, அவன் கையில் கிடந்துறங்கி அவனை விட்டும் பிரியாமல் இந்தச் சங்கு இருக்கின்றது. பெண்களாகிய நமக்கெல்லாம் அவன் வாய்த்தேறல் அமுதம் பருக, வாய்ப்புக் கிடைக்காமல் செய்கிறது என்பதேயாம். பெண்களை வயிறெரிய விட்டு, ''நீ ஒருவன் மட்டும் மகிழ்வது நியாயமல்ல'' என்றும், ''இப்பாவி இப்படி அநியாயம் செய்கிறானே'' என்றும் முறையிடாத பெண்களே அவ்வூரிலில்லை. இந்தக் கருத்தை 'உண்பது சொல்லில்' என்ற பாசுரத்தில் காணலாம். இதில் சங்கை 'பாஞ்ச சன்னியமே என்று விளித்தது ஒரு கருத்தோடு கூடியது. ''பாஞ்ச சன்னி யமே நீ நல்ல குடியிற் பிறந்து வளர்ந்திருப்பாயாகில் எங்களை யெல்லாம் உன்னுடன் அழைத்து இறையனுபவத்தை எங்களுக்கும் பகிர்ந்து கொடுத்து மகிழ்ந்திருப்பாய். அப்படியில்லாமல் உப்புக் குழியிலே (உவர்க் கடலிலே) பிறந்து, அசுரன் வயிற்றிலே வளர்ந்ததனால் பிறருக்குத் துன்பந் தருவதிலேயே குறியாயிருக் கின்றாய்'' என்ற கருத்து தொனிக்க விளிக்கப் பட்டுள்ளது. கண்ணனை அடைய விரும்பும் பல பெண்களும் உண்டு மகிழ வேண்டிய வாயமுதத்தை (அவன் தேவிமார் பலருக்கும் பொதுவானதொன்றை) நீ மட்டும் உண்டு ரசித்தால் (சுவைத் தால்) பெண்கள் உன்னோடு பெரும்பூசல் விளையார்களோ? மன்று கேட்பதாகப் பாடல்கள் காணப்படுகின்றன.

## மேக விடு தூது

ஆண்டாள் பாஞ்ச சன்னியத்தோடு பலவாறு பேசியும், அச்சங்கு வாய் திறந்து மாற்றமேதுந் தந்திலது. இவளுக்கோ பிரிவாற்றாமை மிகுந்திருந்தது, காலமும் கார் காலமாய் வாட்டுகிறது. மேகங்கள் மின்னி முழங்கிக் கொண்டிருந்தன. கண்ணன் முன்பு பிரிந்து சென்றபோது 'மறுபடியும் கார்காலத்தில் உன்னை வந்து கூடுவேன்' என்று சொன்ன சொல் நினைவுக்கு வந்தது. அவன் தான் சொன்னபடியே அந்த மேகங்களோடு வந்திருப்பானோ என நினைத்தாள். அம்மேகங்களோ மறுமாற்றம் ஏதும் சொல்லாமல் வாய்மூடி மௌனிகளாய் நின்றன. கண்ணனும் காட்சி தரவில்லை. ஆகையால் மேகங் களை நோக்கிப் பேச முற்பட்டாள். மேகங்களாவது தன் ஆற்றாமை தீரும்படி தூது சென்று வருமா என்று யோசித்தாள்.

மேகங்களே நீங்களாவது என் நிலைமையைக் கண்டு இரங்கி, எம்பிரானிடம் தூது சென்று எனது ஆற்றாமையைத் தெரிவிக்க வேணும் என்று யாசிக்கிறாள். மேகங்களைத் தூது விடுவதாக அமைந்ததுதான் ''விண்ணீல மேலாப்பு'' என்று தொடங்கும் பதிகம். இத்திருமொழியில் திருவேங்கட மலையின் இயற்கை எழிலும் அம்மலை மீது படிந்தும் அசைந்தும் செல்கின்ற மேகங்களின் அழகும் நிறமும் வருணிக்கப் பட்டுள்ளன.

ஆண்டாள் ஆகாயத்தை நோக்கினாள். ஆகாயத்தளவு உயர்ந்து நிமிர்ந்துள்ள வேங்கட மலைத் தொடரைக் காண்கின்றாள். அம்மலை முழுதும் படிந்து ஆகாயத்தை மறைத்து நிற்கும் மேகங்களின் அழகு, அம்மேகங்களின் கரிய நிறம்எல்லாம் அவளுக்குக் கண்ணனையே நினைவூட்டின. அக்கரு மேகங்களிடையே அவன் மறைந்திருக்கிறானோ என்றாராய்ந்தாள். அவனைக் காணவில்லை. ஆற்றாமை மீதூர அலற்றுகிறாள்; கண்ணீர் விட்டழுகிறாள். இப்படி நான் அழுது கொண்டிருக்கும் போது என்னை வந்தடையாமல் ஆறுதல் மொழியும் சொல்லாமல் என்னைப் பரிபவப் படுத்துவது அவன் பெருமைக்கு ஏற்குமா? நீங்களே சொல்லுங்கள் என்கிறாள். திருவேங்கடவனும் தானும் ஒரு படுக்கையில் கிடந்த போது, ஆகாசத்தில் பரந்து விரிந்திருந்த காளமேகங்களின் பரப்பானது விண்ணீல மேலாப்பு (நீலநிறமான மேற்கட்டு) விரித்தாற் போல விளங்கிற்றாம். இந்தக் கருத்தை விளக்கும் பாடல்:-

''விண்ணீல மேலாப்பு விரித்தாற் போல் மேகங்கள்
தெண்ணீர்பாய் வேங்கடத்து என் திருமாலும் போந்தானே
கண்ணீர்கள் முலைக்குவட்டில் துளிசோரச் சோர்வேனை
பெண்ணீர்மையீடழிக்குமிது தமக்கோர் பெருமையே''

மற்றொரு பாசுரத்தில் மேகங்களைப் புகழ்ந்து பாடுகிறாள். விலையுயர்ந்த முத்துக்களையும் பொன்னையும் ஒருவரும் வேண்டாமல் இருக்கும் போதே வள்ளன்மையால் நீங்கள் பொழிகின்றீர்களே! அப்பேர்ப்பட்ட இரக்க குணமுடைய நீங்கள், உங்கள் காலில் விழுந்து வணங்குகிற எனக்காக எனது விரக வேதனையை அத்திரு வேங்கடத்துப் பெருமானிடம் எடுத்தியம்பலாகாதோ என்கிறாள்.

இப்படி அவள் கேட்ட பின்பும் அம்மேகங்கள் வாய் திறந்து ஒரு வார்த்தையும் சொல்லவில்லை. அப்போது ஆண்டாள், 'காமத் தீ என் புறவுடம்பு முழுவதையும் எரித்து விட்டு என்னுள்ளேயும் புகுந்து எரிக்க முற்பட்டு விட்டதே;

தென்றற் காற்றும் அக்காமத் தீயை மிகுவித்து துன்புறுத்து கின்றதே; அந்தோ! இனியான் என் செய்வேன்' என்று செய்வ தறியாது திகைப்பதாகக் கூறுகிறாள்.

''மாமுத்த நிதி சொரியும் மாமுகில்காள் வேங்கடத்துச்
சாமத்தின் நிறங் கொண்ட தாளாளன் வார்த்தை யென்னே
காமத் தீயுள் புகுந்து கதுவப்பட்டிடைக் கங்குல்
ஏமத்தோர் தென்றலுக்கு இங்கிலக்காய் நான் இருப்பேனே''

என்பது அப்பாசுரம். இதற்கடுத்த பாசுரத்தில் எம்பெருமானைப் பிரிந்த துக்கத்தினால் சரீர சோபை (உடலொளி) மாறி, நிற மிழந்து வளை கழன்று, மனந்தளர்ந்து உறக்க மொழிந்து, பல வாறாய்ச் சீர் குலைந்து தடுமாறி நிற்கும் எனது இருப்பை என் சொல்வேன் என்கிறாள், ''உலங்குண்ட விளங்கனி போல் உள் மெலிய'' என்றாள். உலங்குண்ட விளங்கனியாவது, விளாம் பழங்களுக்கு ஏற்படும் ஒருவித நோயால் பழத்தின் மேலோடு அப்படியே இருக்க, அதன் உட்பகுதி முழுதும் தினப்பட்டு காலி யாகி விடுவது. இதனை யானைத் தீ என்றும் கூறுவர். பார்வைக்கு நல்ல பழம் போலத் தோற்றமளிக்கும். ஆனால் உள்ளே ஏதுமிராது. அது போல ஆண்டாள் தன் உடல், கூடு போல் புறத்தே தோன்றி அகம் முழுவதும் எரிக்கப்பட்டு விட்டதாகக் கூறுகிறாள். உலங்கு— பெரிய நுளும்பு (ஒருவித பெருங் கொசுக்கள்) விளாம்பழத்தின் மீது அவை மொய்த்து உள்ளிருக்கும் கனி ரசத்தை உறிஞ்சி விடுமாம்; எனவே ஓடுதான் மிஞ்சும். அது போல தன் நெஞ்சம் பறிபோய் வெற்றுடம்பாய் இருக்கும் தன் நிலையைக் கண்ணனிடம் சொல்லும்படி வேண்டுகிறாள் ஆண்டாள்.

இந்த வரிசையில் ஆண்டாளுடைய மற்றொரு பாசுரம் அவள் நிலையை நன்கு படம் பிடித்துக் காட்டுகிறது. அக் கண்ணபிரான் தன்னை வந்து அணைவான் என்று நம்பித் தன் கொங்கைகளை நன்கு அலங்கரித்திருந்தாளாம். குங்குமப் பூக் கொண்டு பூசியிருந்தாள். அந்த அலங்காரம் அழியும்படி ஒரு நாளாகிலும் அவன் வந்து என்னை அணைப்பானாகில் என் ஆவி உடலில் தங்கும் (உயிர் நிற்கும்) இல்லையேல் ஆவி நீங்கும்; மாய்ந்தொழிவேன் என்கிறாள். இப்பாசுரத்திற்குப் பெரிய வாச்சான் பிள்ளை என்னும் உரையாசிரியர் கூறும் விளக்கம் மிகவும் நயமுடையது. அழகுமிக்க அவரது உரையைக் கேண்மின்.

''இவளுடைய பாரிப்புக் கெல்லாம் ஒரு நாள் அணைந்தால் போதுமோ? ஊழியெல்லாம் அணைந்து கிடந்தாலும் திருப்தி (மன நிறைவு) பெறமாட்டாத தன்மையன்றோ இவளது; என்னில் 'என் ஆவி தங்கும்' என்ற சொல் நலத்தை நோக்க வேணும் என்கிறார். அதாவது ஒரு நாள் அணைத்தல் போகத்துக்குப் போதாம். பிராண ரக்ஷணத்துக்கு மட்டும் (உயிரைக் காக்க மட்டும்) போதும் என்கிறாள் என்பது கருத்து. உயிர் தரிக்க ஒரு நாளைக்கு அணைப்பது;போகம் சிறக்க பலநாள் அணைப்பது என்பது உட்பொருள். மேலும் அவனைப் பிரிந்து வருந்தும் தன் நிலையை விளக்க ஆண்டாள் கூறும் உவமையும் சிறப்புடையதொன்று. ''மழைக் காலத்தில் எருக்கஞ் செடியில் பழுத்த இலைகள் உதிர்வது போல்—இற்று விழுவது போல் ஒசிந்து தளர்ந்து தளர்ந்து விழும்படியான நிலையில் இருக்கின்றேன்'' என்கிறாள். இப்படியே என்னைத் தொடர்ந்து வதைத்தானாகில் இவனை இவ்வுலகில் எவருமே மதியார். ஒரு கொள் கொம்பிலே சேர்த்துப் படர விட வேண்டிய கொடியைத் தரையிலே விட்டு வைப்பது, அதைக் கொலை செய்வதற்கு (அழிப்பதற்கு) ஒப்பாகும் அது போல பருவம் வாய்ந்து பரிதவிக்கும் என்னைத் தன்மேல் படர விடாமல் தரையில் வீசி வதைப்பானாகில் இவனும் கொடியவனன்றோ! அப்படிப் பெண் என்றும் பாராமல் வாட்டி வதைக்கும் ஒருவனை உலகத்தார் போற்றுவார்களா? தூற்றுவார்களா? வணங்குவார்களா? அல்லது மதிக்கத்தான் செய்வார்களா? என்று மிகவும் சினத்துடன் (ஆக்ரோஷத்துடன்) கேட்கும் பாசுரமும் உள்ளது.

''ஓர் பெண் கொடியை வதை செய்தான் என்னும் சொல் வையகத்தார் மதியாரே'' என்பன அப்பாசுரப் பகுதி. இவ்விதம் திருவேங்கடவன் உறையும் திருமலை மீது படிந்து செல்லும் மேகங்களை நோக்கி ஆண்டாள் மேகவிடு தூதாகப் பாடிய பாசுரங்கள், பல நயங்கள் பொதியப் பெற்று கற்போர் உள்ளத்தை கவருந்தன்மையனவென்பதில் தட்டில்லை.

## அழகர் மலை அழகன்

கண்ணெதிரே வந்து தோன்றின கார்முகில்களை நோக்கிப் பேசிய ஆண்டாள், ''நீங்கள் எம்பெருமானிடம் சென்று எனது நிலைமையை உணர்த்தி என்னையும் அவனையும் கூட்ட வேணும்'' என்று பலவாறு வேண்டினாள். இவள் வேண்டுகோளை அம்மேகங்கள் நிறைவேற்றவில்லை. அவை தாம் வந்த வேலையைக் கவனிக்கச் சென்றன. அதாவது மழையைப்

பொழிந்து பூமியை வளப்படுத்திச் சென்றன, கார் காலத்தில் மலரக் கூடிய புஷ்பங்களாகிய மலர்களெல்லாம் மலரத் தொடங்கின. சில நன்றாக மலர்வனவும், சில பாதியளவு மலர் வனவும், சில மலரத் தொடங்குவனவும் ஆகிய நிலையில் இருந்தன. மழைக் காலத்தில் களித்துத் திரியும் சில சீவராசி களும் வந்து தோன்றி உலாவின. ஆக இப்படிப்பட்ட பொருள் களெல்லாம் ஆண்டாளுடைய பிரிவுத் துன்பத்தை மிகுதியும் புலப்படுத்த உதவினவே அன்றி தணிப்பதற்கு ஏதும் செய்வ தாயில்லை.

இதனால் ஆற்றாமை மீதூர்ந்து உயிரோடு தப்பிப் பிழைக்க முடியாத நிலைமையை அடைந்தாள் ஆண்டாள். இந்நிலையில் பாடிய பாசுரங்களாக இருபது பாடல்கள் நாச்சியார் திருமொழியில் உள்ளன. அவற்றுள் 'சிந்துரச் செம்பொடி' என்று தொடங்கும் பதிகத்துப் பாசுரங்களின் நயத்தினை நுகர்வோம்.

மழைக் காலத்தில் பட்டாம் பூச்சிகள் பல விசேடமாகப் பறந்து திரிவதைக் காண்கிறோம். அவை காதலனுடைய செவ்வாயை (உதடுகளை) நினைவூட்டு வனமாக இருப்பதால் தலைவிக்குக் காம உணர்ச்சி மிகுதலியல்பு. ஆண்டாள் தான் விரும்பும் மாலிருஞ்சோலை மணாளனை அவனுறையும் மலை யெங்கும் ஒரே பட்டாம் பூச்சிகள் மொய்த்திருந்த நிலையில் நினைத்துக் கொண்டாள். தலைவனைப் பிரிந்து வாடும் தலைவியின் கண்முன்னே இந்தச் சிவந்த நிறமுடைய பூச்சிகள் வந்து தோன்றினால் அவளால் தரித்திருக்க முடியுமா? இச் செந்நிறப் பூச்சிகள் அவனது செங்களி வாயையன்றோ நினை வூட்டுகின்றன! எம்பெருமானது வடிவைப் போன்ற நீலநிறமான திருமாலிருஞ் சோலை மலையைக் கண்டாகிலும், ஒருவாறு உயிர் வாழலாம் என்று பார்த்தால் அந்த ஆசை நிறைவேறாத படி பாழும் பட்டுப்பூச்சிகள் அம்மலையைச் சூழ்ந்து கொண்டு மறைக்கின்றனவே என்கிறாள். அவனே சுந்தரத் தோளுடை யான். அவனையடைய ஆசைப்படும் ஆண்டாளுக்கு அவன் கலவி கிடைக்கவில்லை. மாறாக அப்பெருமான் தானே நேரில் வராமல் தனது வடிவுக்கு ஒப்பான மேகங்களைப் படரவிட்டும், தமது அதரங்களின் நிறத்தினையுடைய இந்திர கோபமென்னும் பட்டாம் பூச்சிகளைப் பறக்க விட்டும் தம் நினைவை அவளிடத் தில் மிகுதியுமுண்டாகச் செய்து அலைக்கழிக்கிறானாம். அவன் செய்யும் இந்தச் சூழ்ச்சியிலிருந்து நான் தப்பிப் பிழைப் பேனோ என்று புலம்புகிறாள். பாசுரத்தையே இப்போது பார்ப்போமே.

''சிந்துரச் செம்பொடிப்போல் திருமாலிருஞ் சோலை யெங்கும்
இந்திர கோபங்களேயெழுந்தும் பரந்திட்டனவால்
மந்திரம் நாட்டியன்று மதுரக் கொழுஞ்சாறு கொண்ட
சுந்தரத் தோளுடையான் சுழலையில் நின்றுய்துங் கொலோ''

மற்றொரு பாசுரத்தில் யானைகளெல்லாம் பொருது விளையாடும் மாலிருஞ்சோலை மலைத் தாழ்வரையில், முல்லைக் கொடிகள் அரும்பி வெளுத்துக் காணப்படுகின்றன. இவை அம்மாயவன் புன்சிரிப்பைக் காட்டுகின்றனவாம். படா என்னும் கொடிகளின் மலர்களோ நன்கு பூத்து மலர்ந்துள்ளன. இவை அவனது பெருஞ்சிரிப்பை நினைவூட்டுகின்றன. அக்கண்ணனின் திருத்தோள் மாலையைப் பெற விரும்பியதாலன்றோ நான் இவ்வாறு அலலக் கழிக்கப் படுகின்றேன். இந்நிலையை நான் யாரிடஞ் சொல்லி ஆறுவேன் என்கிறாள்.

இனி இப்பதிகத்திலேயே, கருவிளைப் பூக்களும் காயாம் பூக்களும் மிகுதியாய்ப் பூத்திருக்கும் அம்மலை, கண்ணனின் கரிய திருமேனியை நினைவூட்டுவதால் தான் வருந்தும் நிலையை எடுத்துக் கூறி, அக்கள்வன் எனது வரிவளையும் கொண்டானே என்று புலம்புவதாகவும் பாசுரம் அமைந்துள்ளது. இப்பூக்கள் மட்டு மல்ல, அம்மலையின் பரந்த சோலைகளில் வாழும் குயில்களும், மயில்களும் களாப்பழங்களும் கூட இவளுக்கு அவன் நிறத்தைக் காட்டி வருத்துகின்றனவாம். இவைகளை ஐம்பெரும் பாதகர்கள் என்று ஆண்டாள் வசை பாடுகிறாள். என்னுயிரை வாங்கு கின்ற அவனுடைய நிறத்தை நீங்கள் எதற்காக ஏறிட்டுக் கொண்டிருக்கிறீர்கள்? என்னைத் துன்புறுத்த வேணும் என்பதுதானே உங்கள் நோக்கம். அதற்காகவே நீங்களும் அவனது நிறத்தைப் பெற்றுள்ளீர்கள், என்று கேட்பதாகப் பாசுரம் உள்ளது. ''எம்பெருமானுடைய நிறம் உங்களுக்கு என் செய்வதே'' என்கிறாள். மேலும் திருமாலிருஞ்சோலை மலைப் பொழில்களில் மலர்ந்துள்ள பூக்களில் தங்குகின்ற வண்டுகளும், நீர் நிறைந்த சுனைகளும் அழகருடைய திருவுருவை நினைவூட்டி நலிவிக்கின்றனவாம். அச் சுனைகளில் மலர்ந்துள்ள செந்தாமரை மலர்கள் அம்மணிவண்ண னுடைய முகத்தை நினைவூட்டுகின்றனவாம். இத்தொல்லைகளி னின்றும் மீள, நீங்களே எனக்கு ஓர் வழி காட்ட வேண்டுமென்று அம்மலர்களையும் வண்டுகளையும் கேட்கிறாள் கோதை.

''மலர் மேல் தங்கிய வண்டினங்காள், தொகு பூஞ்சுனைகாள்
சுனையில் தங்கு செந்தாமரைகாள் எனக்கோர் சரண்
சாற்றுமினே''

என்பனவே அவ்வரிகள்.

## நாறு நறும்பொழில் மாலிருஞ்சோலை

நறுமணங் கமழ்கின்ற சோலைகளால் சூழப்பட்ட திருமாலிருஞ்சோலை மலை மேல் எழுந்தருளியிருக்கும் அழகர் பிரானுக்கு ஆண்டாள் அக்காரவடிசில் சமர்ப்பிக்கிறாள். நூறு தடாவெண்ணெயும், நூறுதடா நிறைந்த ஆக்காரவடிசிலும் நிவேதனமாக படைக்கிறாள். ''வாய் நேர்ந்து பராவி வைத்தேன்'' என்று அருளிச் செய்திருப்பதனால் மனத்தால் நினைத்து வாயினால் சொல்லிப் படைத்தாள் என்று தெரிவதால் மானசீக பூசை என்றும், வாசிக கைங்கர்யம் என்றும் பெரியோர் கூறுவர்.

தனக்கு, சிரத்தையுடன் அர்ப்பணிக்கப்படும் பொருள் எள்ளளவு—தினையளவாயினும் அதை மிகப்பெரிய அளவினதாகக் கருதி ஏற்பவன் எம்பெருமான். இதை அறியாதவளா ஆண்டாள். அவள் ஏன் இத்தனை பெரிய அளவில் படைக்க முன்வருகிறாள் என்ற கேள்வியை நம் முன்னோர்கள் தாமே கேட்டுக் கொண்டு அதற்குரிய அழகான விடையை நம்போல்வார்க்குத் தெரிவித்துள்ளனர். ஆண்டாள் தன் மனதால் ஆய்ப்பாடிச் சிறுமியாக மாறித்தானே கண்ணனைக் காதலிக்கிறாள். அவ்வாய்ப்பாடியில் ஆநிரை மிக்கிருப்பதால் வெண்ணெயும் ஏராளம் இருக்கும். மாலிருஞ்சோலையில் எம்பெருமானுக்குப் படைக்கும் நூறுதடா வெண்ணெய் ஆய்ப்பாடியின் ஒரு குடத்துக்குச் சமமே என்றுரைத்தனர்.

இதையே சமத்காரமாக, அன்பினால் தனக்கு அர்ப்பணிக்கப்படும் பொருளை ஒன்றை நூறாகக் கொள்ளும் எம்பிரான், ஆண்டாள் வாய் நேர்ந்து பரவியதாகச் சொல்லும் வெண்ணெயை நூறுதடா நிரம்பியதாகக் கொள்வான் எனக் கூறலுமாகும். ஆண்டாளின் விசாலமான மனம், எம்பெருமானுக்குப் பெரிய படையலாக இருந்தது. ஆண்டாளின் இப்பிரார்த்தனை பிற்காலத்தில் உண்மையாகவே ராமானுசரால் நிறைவேற்றப் பட்டதும் பிரசித்தம்.

ஆண்டாள் பிறந்து வளர்ந்த ஊரிலே பாடித் திரிகின்ற பறவைகள் கூட எம்பெருமான் மேல் சிந்தனையைச் செலுத்தியவையாகவே இருக்குமாம். சில கருங்குருவிகள் விடியற்காலையி

லேயே எழுந்திருந்து கூட்டங் கூட்டமாகக் கூடி, எம்பெருமானுடைய வரவுக்குக் கட்டியங் கூறுவன போலப் பண்ணிசைக்குமாம். அவன் தொடர்பான வார்த்தைகளையே சொல்லுமாம். அப்பறவைகளின் ஒலிகளைக் கேட்ட ஆண்டாள் இப்பறவைகளின் ஒலி உண்மையாகி அவன் என்முன்னே வருவானோ? அல்லது இவ்வொலிகள் பொய்யாகி வராமற் போவானோ என்று கலங்கியதாக ஒரு பாசுரமும் உள்ளது.

பனிபடர்ந்த காலை வேளையில் பனியையும் குளிரையும் பொருட்படுத்தாமல் கரிய நிறத்தினையுடைய குருவிகள் கீசுகீசு என்று எங்கும் ஒலிக்கும் ஒலிகளிலே இறைவன் நாமத்தைக் கேட்கிறாள் ஆண்டாள். அதன் வரவை அக்குருவிகள் கூவி அறிவிப்பவனாக அவளுக்குத் தோன்றுகிறது. அவன் வேறு யாருமல்ல. சோலை மலைப் பெருமான்தான். துவாரகாநாதன் தான் என்று நிச்சயம் செய்து கொள்ளுகிறாள். அவன் யாரையும் கைவிடாமல் காப்பவன் என்பதை 'ஆலினிலைப் பெருமான்' என்ற சொல்லாலே கோதை கூறியிருக்கிறாள். ஆம்! பிரளய காலத்திலே எல்லா உலகங்களையும் அழிந்து போகாமல், தன் சிறு வயிற்றிலே அடக்கிக் கொண்டு ஓராலந்தளிரிலே படுத்திருந்து, காப்பாற்றிய வல்லமை பொருந்தியவனல்லவா அவன்! இவ்விதம் நயம் பொருந்திய பாசுரங்கள் பலவும் ஆண்டாளின் சொல்லோவியத்திலே காணக் கிடைக்கின்றன. இனி முழுப் பாடலையும் காணலாம்.

> ''காலையெழுந்திருந்து கரிய குருவிக் கணங்கள்
> மாலின் வரவு சொல்லி மருள் பாடுதல் மெய்ம்மை
> கொலோ
> சோலை மலைப் பெருமான் துவராபதியெம்பெருமான்
> ஆலினிலைப் பெருமான் அவன் வார்த்தை உரைக்
> கின்றதே''

இனி இப்பதிகத்தின் மற்றொரு பாட்டு ஆழ்ந்து சிந்தித்தற்குரியது.

திருமாலுக்கு உவந்ததல்லாத கொன்றை மலர்போல, நான் திருமாலிருஞ் சோலையில் தொங்கிக் கொண்டிருக்கின்றேன் என்கிறாள். இதனைச் சற்று விரித்துப் பார்ப்போம். கொன்றை மலர்களால் சிவபெருமானையோ இதர தெய்வங்களையோ பூசிப்பது மரபு. இச்சோலை மலையோ, திருமாலாகிய அழகருக்கேயுரிய மலை. இங்கு மலரும் கொன்றைப் பூவினுக்கு ஒரு வித பயனுமில்லை. அவை அங்கேயே தரையில் விழுந்து வீணா

வது போலவே, இம்மலையப்பனை நம்பி வாழும் என்னுடைய பிறப்பும் வாழ்வும் வீணாகுமோ என்று ஐயுற்றுப் பாடியிருக்கிறாள்.

அக் கண்ணன் செவ்வாயில் பொருந்திய சங்கு எழுப்பும் ஒலியும், அவன் தோளில் தொங்கும் சார்ங்கம் என்ற வில்லின் நாணொலியும் கேட்டு யான் உயிர் வாழ்வது எப்போதோ என்கிறாள்.

''கோங்கலரும் பொழில் மாலிருஞ் சோலையில்
கொன்றைகள் மேல்
தூங்கு பொன் மாலைகளோடு உடனாய் நின்று தூங்குகின்றேன்.
பூங்கொள் திருமுகத்து மடுத்தூதிய சங்கொலியும்
சார்ங்க வில் நாணொலியும் தலைப்பெய்வது எஞ்ஞான்று
கோலோ''

இப்பாடலில் சங்கொலியையும், நாணொலியையும் கேட்பது எந்நாளோ என்று ஆண்டாள் கூறியிருப்பதற்குக் காரணம், சங்கொலியாலே, ருக்மணிப் பிராட்டியும் வில்லொலியாலே சீதாப்பிராட்டியும் வாழ்ச்சி பெற்றாற் போல யான் வாழ்ச்சி பெறுவேன் என நினைத்து, ஏக்கத்தில் கூறியதாகவும் பொருள் கொள்ளலாம்.

''கன்னவிலும் காட்டகத்தோர் வல்லிக் கடிமலரின்
நன்னறு வாசம் மற்றாரானும் எய்தாமே
மன்னும் வறுநிலத்து வாளாங்கு உகுத்தது போல்
என்னுடைய பெண்மையும் என்னலனும் என்முலையும்
மன்னுமலர் மங்கை மைந்தன் கணபுரத்துப்
பொன் மலைபோல் நின்றவன்றன் பொன்னகலம்
தோயாவேல் என்னிவைதான் வாளா எனக்கே
பொறையாகி முன்னிருந்து மூவாமைக்
காப்பதோர் மன்னுமருந்து அறிவீரில்லையே''

என்று திருமங்கையாழ்வார் பெரிய திருமடலிலே கூறியுள்ளதை ஒப்பு நோக்கி மகிழலாம். பெண் பாவனையிலே ஆழ்வார் பாடினார். ஆண்டாளோ பெண்ணாகவே இருந்து பிரிவாற்றாது பாடுகின்றாள்.

## கார்க்கோடல் பூக்காள்

பூக்களில் பலவகையுண்டு. அவற்றுள் கோடல் பூக்கள் என்பது ஒருவகை. அதையே காந்தள் என்றும் கூறுவதுண்டு.

கார்காலத்திலே இவை மிகுதியாகப் பூக்கும். காதலனைப் பிரிந்த தலைவிக்கு இம்மலர் மிகுந்த வேதனையை உண்டுபண்ணும் இயல்புடையது. இப்பூக்களில் கரிய நிறமுள்ள ஒரு வகையும் உள்ளது. அவை எம்பெருமான் திருமேனியை நினைவூட்டி ஆண்டாளை மிகவும் வருத்தினமையால் இம்மலர்களை இறைவன் படைத்தது நம்மைக் கொலை செய்வதற்காகவே போலும் என்றறுதியிட்டு அம்மலர்களை நோக்கிக் கூறுவதாகக் ''கார்க் கோடல் பூக்காள்'' என்ற பதிகப் பாசுரங்கள் அமைந்துள்ளன. என்னை வருத்தும்படி உங்களைப் படைத்த அப்பரமன் எங்கிருக் கிறான்? என்று அப்பூக்களை நோக்கி வினவுகிறாள்.

''கார்க்கோடல் பூக்காள் கார்க்கடல் வண்ணன் எம்மேல் உம்மைப்
போர்க்கோலம் செய்து போர விடுத்தவ னெங்குற்றான்
ஆர்க்கோ இனி நாம் பூசலிடுவது அணிதுழாய்த்
தார்க்கோடும் நெஞ்சம் தன்னைப் படைக்க வல்லேன் அந்தோ!''

'உம்மைப் போர்க்கோலஞ் செய்து போரவிடுத்தவன்' என் பதற்கு, இந்திரசித்தைக் கொல்வதற்கு இராமபிரான் இளைய பெருமாளை (இலக்குவனை) ஆயத்தஞ் செய்து அனுப்பியது போலத் தன்னை முடிப்பதற்காக இம்மலர்களை நிறமூட்டியனுப் பினான் என்றிருக்கிறாள் போலும் என்பர்.

தலைவன் விட்டுப் பிரிந்த நிலையில் இயற்கையில் காணப் படும் காட்சிகள் தலைவிக்கு நோயை உண்டுபண்ணுகின்றன. கார்காலத்தில் முல்லை பூக்கும் இயல்பினது. முல்லை பூத்திருப் பதைக் கண்டவாறே ஆண்டாளுக்குக் கண்ணனின் இளமுறுவல் நினைவுக்கு வருகின்றது. ஆற்றாமை மிக்கு அம்முல்லையின் காலில் விழுந்து பாடுகிறாள். வழி பறிக்கவந்த கள்வனைக் கண்டால் 'பிரானே! நாயனே! அப்பனே' என்றெல்லாம் கெஞ்சு வதுபோல் 'முல்லைக் கொடியே! கோடல் பூக்களுக்கும் மேல் தோன்றிப் பூக்களுக்கும் கோவைக் கொடிக்கும் ஒருவாறு தப்பிப் பிழைத்தோம் என்று மகிழ்ந்தேன். நீ உன் மலர்ச்சியைக் காட்டி என் மகிழ்ச்சியைக் கெடுத்தழித்தொழிந்தாயே. இது நியாயமா? உன் காலில் விழுந்து உன்னை வேண்டிக் கொள்கிறேன். என்னை வருந்தச் செய்யாதே என்கிறாள்.

''முல்லைப்பிராட்டி நீ உன் முறுவல்கள் கொண்டு எம்மை
அல்லல் விளைவியேல்''

என்று கெஞ்சுகிறாள். இப்படி எந்தப்பக்கம் நோக்கினும் ஏதாவது ஒரு மலர் அல்லது ஒருபொருள் கண்முன் தோன்றி காதலனை நினைவுபடுத்துகிறதே என்று ஆண்டாள் தன் கண்களை மூடிக் கொண்டாளாம். அப்போதுங்கூட அருகிலுள்ள சோலையில் குயில்கள் பாடுவது கேட்டு அவளது வேதனையை மிகுவித்தனவாம். அதனால்வெகுண்ட கோதை அக்குயில்களை வெறுத்துக் கூறுவதாகவும் ஒரு பாசுரமுள்ளது.

"ஏ குயில்களே! உங்கள் பாட்டைக் கேட்டுச் சுவைக்கும் நிலையிலா நானிருக்கிறேன்? விரகதாபத்தால் வருந்தி நிற்கும் என்முன்னே நீங்கள் கூடிக்களித்துக் களிப்புமிக்க பாடல்களைப் பாடுகிறீர்களே? இது நியாயமா? நீங்கள் பாடியது போதும். நல்வேங்கடநாதனான எம்பெருமான் இங்கே வந்து என்னை வாழ்விக்கும் காலம் வாய்க்குமாகில் அப்போது நீங்கள் இங்கு வந்து ஆசை தீரப் பாடலாம்" என்கிறாள்.

> "பாடும் குயில்காள்! ஈதென்ன பாடல் நல்வேங்கடநாதர்
> நமக்கொரு வாழ்வு தந்தால் வந்து பாடுமின்"

என்பதே அப்பாடலின் இனிய வரிகள்.

இப்படியே இவளை வருத்திய மயில்களிடத்திலும், மேகங்களிடத்திலும், கடலினிடத்திலும், தன் விரகவேதனையை வெளிப்படுத்தி, ஆண்டாள் அலமாப்புறுவது கண்ட தோழியர், இவளை எப்படித் தேற்றுவது என்று ஒருவழியும் தோன்றாமல் அஞ்சிய போது அத்தோழிமார்களை ஆண்டாளே தேற்றுகிறாள். தோழிகாள் நீங்கள் எண்ணுவது உண்மையே "அம்மான் ஆழிப்பிரான்" என்று சொல்லக் கூடிய என் காதலன் கிட்டி அனுபவிக்க முடியாத உயர்வினன்தான். தாழ்ந்த மனிதப் பிறவியான நான் அவனை எவ்வாறு அடைய முடியும் என்ற உங்கள் ஐயமும் நியாயந்தான். ஆயினும் அவனை அடைய ஒரு எளிய வழியை நான் கண்டு விட்டேன். அவர் எனக்காக—என் வேண்டுகோளுக்காக என்முன்னே வராவிட்டாலும் என் தந்தையார் அழைத்தால் வந்தே தீருவார். வராமலிரார். அவர் நாகணை மீதமர்ந்த பரமராயிருந்தாலும், பெரியாழ்வாரிடத்தில் கோற்கிழராயிருப்பர்! (அடங்கி நடப்பவர்) என் தந்தை பூச்சூடவாராய் என்றும், நீராடவாராய் என்றும், அமுதுண்ணவாராய் என்றும் அழைத்தவுடனே பரபரப்புடன் ஓடோடி வருவர். அப்போது எளிதாகவே அவரை நாம் பற்றி விடுவோம்" என்று ஆறுதல் கூறிய பாசுரமும் உண்டு.

"நல்லவென் தோழீ நாகணை மிசை நம்பரர்
செல்வர் பெரியர் சிறு மானிடவர் நாம் செய்வதென்
வில்லி புதுவை விட்டு சித்தர் தங்கள் தேவரை
வல்ல பரிசு வருவிப்பரேல் அது கண்டுமே"

என்பதே அப்பாசுரம்.

## தாமுகக்கும் தம்கையில் சங்கமே போலாவோ

கண்ணன் கலவி கிடைக்காத ஆண்டாள் உடல் மெலிந்தாள். கையில் வளைகள் நில்லாதொழிந்தன. மனம் நொந்து பரித விக்கும் ஆண்டாளின் நிலை கண்டு இரங்கிய அவ்வூர்ப் பெண்டி ரெல்லாரும் வந்து சூழ்ந்து கொண்டனர். அவர்களையெல்லாம் விளித்துப் பேசும் பாசுரமொன்றுளது, "ஏந்திழையீர்! என் தலைவனான கண்ணன் தன் கையிலுள்ள சங்கு எப்போதும் தன் கையை விட்டகலாதிருக்க வேண்டும் என்று நினைப்பது போல, என் கையிலுள்ள சங்கு (வளையல்) எப்பொழுதும் என் கையகலாதிருகச் செய்ய வேண்டாமோ? அரவணையில் துயிலும் எனதாருயிர் நாதன் என்னை அணைய வராவிடினும் என் கண்ணே காணும்படி ஒரு முறையேனும் வந்து காட்சிதர லாகாதோ?" என்று வேண்டுகிறாள். அதற்கடுத்த பாசுரத்தில் தன்னால் விருப்பப்படும் திருவரங்கப் பெருமானுடைய அவயவ சோபைகளை வருணித்து மகிழ்கிறாள். திருக்குழலழகும், திருவத ரத்தினழகும், திருக்கண்களினழகும் திருநாபிக்கமலத்தழகும், பொலிய நின்று இந்த ஆண்டாளை அவன் வசீகரித்துத் தன் வயப்படுத்தினன் போலும். தமிழ் மொழிக்கே உரியதான 'ழ'கரம் நிரம்ப இடம்பெற்றுள்ள இப்பாடல் சொல்லழகுக்கு ஓர் எடுத்துக்காட்டாய் இலங்குவதாகும்.

"எழிலுடைய வம்மனைமீர் என்னரங்கத் தின்னமுதர்
குழலழகர் வாயழகர் கண்ணழகர் கொப்பூழில்
எழுகமலப் பூவழகர் எம்மானார் என்னுடைய
கழல் வளையைத் தாமும் கழல் வளையே யாக்கினரே"

இப்பாசுரத்தின் ஈற்றடிகளில் காணும் 'கழல் வளையைக் கழல் வளையே யாக்கினரே' என்ற தொடர் இன்பம் பயப்பது.

இப்பதிகத்தின் மற்றொரு பாட்டிலே திருவரங்கன் இம் மண்ணுலகத்தையும், அவ்விண்ணுலகத்தையும் ஒரு வித குறையு மின்றிக் காப்பவனாய் இருந்தும் (உபய விபூதி ஐச்வர்யத்தை

யுடையவனாயிருந்தும்) என்ன காரணத்தாலோ, தன்னுடைய கைவளைகளைக் கொள்ளை கொண்டு போனான் என்று சாடுகிறாள். இதைக் கேட்ட ஆண்டாளின் தோழிகள் எங்களுடைய வளையல்கள் எல்லாம் எங்கள் கைகளிலேயே இருக்க, உன் கை வளையல்களை மாத்திரம் அவன் கொள்ளை கொண்டதற்குக் காரணம், அவனுக்கு உன்னிடத்தில் உள்ள அன்பின் மிகுதியே யாமன்றோ! இதற்காக வருந்தலாமோ? என்று ஆறுதல் கூறினார்களாம். இப்படிக் கூறிய தோழிகளை நோக்கி ஆண்டாள் சமத்காரமாகப் பதில் சொல்லியிருக்கிறாள். அதாவது இந்த உத்தம புருஷர்தான் முன்பு மகாபலியின் வேள்விச் சாலைக்குத் தாமே நடந்து சென்று பிச்சையேற்று அவனால் நீர்வார்க்கப் பெற்று, உலகைத் தானமாகப் பெற்று மூவடியால் அளந்தான். அப்பிச்சையில் ஒருக்கால் குறையுண்டாகி அக்குறையை என் கையாலே தீர்த்துக் கொள்ள வேண்டுமென்று விரும்பினால், மகாபலியின் யாக பூமிக்கு நடந்தே சென்றதைப் போல இத்தெருவில் என் வீட்டு வாசலில் நடந்து காட்டி, என்னையும் மகிழ்விக்கலாகாதோ எனவுரைத்தாள்.

''என்னுடைய பெய்வளைமேல் இச்சையுடையரேல்
இத்தெருவே போதாரே''

என்று வருவது பாசுரத்திலே.

மேலும் தன்னால் விரும்பப்படும் நாயகனை

"நல்லார்கள் வாழும் நளிரரங்க நாகணையான்"

எனவும்,

''நான்மறையின் சொற்பொருளாய் நின்றார்''

எனவும்,

''தேசுடைய தேவர் திருவரங்கச் செல்வனார்''

எனவும் இவள் புகழ்ந்து கூறியுள்ளதால் ஒரு மானிடனுக்குத் தான் வாழ்க்கைப்பட ஒருப்படேன் என்று தொடக்கத்தில் சொன்ன சொல் உறுதிப்படுத்தப் படுகிறது. இதனால் ஆண்டாளுடைய காதல் பரம்பொருளைப் பற்றிய தெய்வீகக் காதலாகும் என்பது வெள்ளிடைமலையாக உணர்த்தப்பட்டது. இப்படியெல்லாம் எவ்வளவுதான் ஆற்றாமையினால் வருந்திப் பேசினாலும் அந்த உத்தம நாயகனான கண்ணன் இவள் கண் வட்டத்தில் காணக் காட்சி நல்கினானில்லை. அவன் விரும்பும் போது நம்மை

அடையட்டும் என்று இவளால் ஆறியிருக்கவும் முடியவில்லை. ஆவல் மிக்குத்தானே கால்நடையாய் நடந்து அவனை யடைய லாம் என்றாலும் அசக்தியின் மேலீட்டால் அதுவும் முடியவில்லை. இந்நிலையில் தன்னிடத்தில் பரிவுள்ளவர்களை நோக்கி "நீங்கள் என்னை இப்பொழுதே அக்கண்ணபிரான் எழுந்தருளி இருக்கும் இடத்திலே கொண்டுபோய் அவனோடு என்னைச் சேர்த்து விடுங் கள்" என்கிறாள். "மற்றிருந்தீர்கட்கு" எனத் தொடங்கும் ஆண்டாள் திருமொழியின் ஒவ்வொரு பாட்டிலும் அக்கண்ணன் உறையுமிடம் வெளிப்படையாகக் கூறப்பட்டுள்ளது.

காதலனான கண்ணனை இப்போதே அடைய வேண்டும் என்று வருந்திக் கிடக்கும் ஆண்டாளை நோக்கித் தோழியரும் அன்னையரும், "அம்மா! நம்மால் ஆவது ஒன்றுமில்லை. எல்லாம் அவன் விருப்பப்படியே நடக்கும். நீ பொறுத்திரு "என்று ஆறுதல் கூறியபோது ஆண்டாள்" என் அவஸ்தையை நீங்கள் அறிய முடியுமோ! உங்கள் பேச்சு என்காதில் விழவில்லை; செவிடரோடு ஊமையர் வார்த்தை சொல்வது போல் உள்ளதே; ஊமைக்குப் பேசமுடியாது; செவிடர்க்குக் கேட்க முடியாது என்று கூறி நீங்கள் எனக்கு நல்லுரைகள் கூறிய போது என்னை இப்போதே அவனுறையும் மதுரையிலோ அல்லது அம்மதுரைக்குப் பக்கத் திலோ கொண்டு போய்ப் போடுங்கள்" என்றாள்.

அருகேயிருந்த தாய் "பெண்ணே! நீ இப்படி வெட்டு ஒன்று துண்டு இரண்டு என்று பேசலாமா? நான் உன்னைப் பெற்ற தாயல்லவா என்று கேட்க அதற்கு ஆண்டாள், பிறந்தவுடனேயே பெற்ற தாயான தேவகியை உதறித் தள்ளிவிட்டு, வளர்ப்புத் தாயான யசோதையை விரும்பிச் சென்றவனல்லவா என்னால் விரும்பப்படும் கண்ணன்; அவன் செயல் போலவாயிற்று என் செயலும். இதற்கு நீ வருந்துவானேன் என்று பதில் கூறுவது போல இப்பாட்டில் சொற்கள் அமைந்துள்ளன. அன்றியும் முரட்டு மல்லர்களோடு போரிட்டு அவர்களுக்குத் தொடலாம்படி உடம்பு கொடுப்பவன், அதற்கு முன்னை என்னை அணைய லாகாதா? அவன் என்னை அணையலாம்படி மதுரைப் புறத்துக் கொண்டு போய்ச் சேர்த்து விடுங்கள் என்று கூறுகிறாள். பாடலின் முழுவடிவையும் பார்ப்போம்.

"மற்றிருந்தீர்கட் கறியலாகா மாதவன் என்பதோர் அன்பு தன்னை
உற்றிருந்தேனுக்கு உரைப்பதெல்லாம் ஊமையரோடு செவிடர் வார்த்தை

பெற்றிருந்தாளை ஒழியவே போய் பேர்த்தொரு தாயின் வளர்ந்த நம்பி
மற் பொருந்தாமற் களமடைந்த மதுரைப் புறத்து என்னை உய்த்திடுமின்''

ஆண்டாள் மேலும் கூறுவாள், தாய், தகப்பன் சுற்றத்தார் என்று எல்லோரும் இருக்கும்போது அவர்களையெல்லாம் புறக்கணித்து விட்டு ஒரு பெண்பிள்ளை, தான்தோன்றியாகத் தானே புறப்பட்டுப் போனாள் என்று ஊரில் சிலர் பழித்துரைப்பார்கள். அப்பழியானது என்னளவில் மட்டும் நில்லாது நம் குடிக்கே பெருத்த பழியாய்ப் பேசப்படும். அப்படி பழிவிளைவதற்கு முன்பே கண்ணன் உறையும் நந்தகோபர் வீட்டிலே என்னைக் கொண்டு போய் விட்டுவிடுங்கள் என்கிறாள்.

கண்ணபிரானது குழலோசை இவளை மயக்குகிறதாம். அவனது உருவமும் இவளை வசீகரித்து விட்டதாம். இவளால் பொறுத்திருக்க முடியவில்லையாம். ஆதலால் இப்போதே இந்த நள்ளிரவிலேயே என்னைக் கொண்டு போய் அங்கு விட்டு விடுங்கள் என்றுரைப்பதாகப் பாடலமைந்துள்ளது. நாலுபேர் காணும் படியான நேரத்திலே, அங்கே கொண்டு போனால் அக்கண்ணன் அவனது தாய் தந்தையர்க்கு வசப்பட்டு அல்லது பயந்து என்னைப் பாராமல் இருந்தாலும் இருந்து விடுவான். ஆதலால் எவர்க்கும் அஞ்சாமல் அவன் உடனே என்னை அணையும்படி, நடு நிசியிலே கொண்டு போய்ச் சேருங்கள் என்று கூறியிருக்கிறாள் என்பதனை ''நந்தகோபாலன் கடைத்தலைக்கே நள்ளிருள் கண் என்னை உய்த்திடுமின்'' என்ற வரிகள் இயம்புகின்றன.

மற்றொரு பாசுரத்தில் தன் அழகும் அங்கங்களும் அந்த கோவிந்தனுக்கே உரியவை என்று அறுதியிட்டுக் கூறுகிறாள். இப்படிப்பட்ட பதற்றம் உனக்கு ஆகாது; சிறிது அடக்கம் வேண்டும் என்று சொன்ன தாய்மார்களை நோக்கிக் கூறுகிறாள்.

''என் கொங்கைகள் படுகின்ற பாட்டைப் பாருங்கள். கையிலே சங்கு சக்கரங்களை ஏந்தி மிகவும் அழகாகக் காட்சிதரும் அக் கண்ணன் முகத்தை நோக்குவோமே யன்றி மற்றெவரையும் பார்க்க மாட்டோம் என்று, சிவந்த கச்சினால் கட்டிக் கண்களை மறைத்துக் கொண்டு, அற்ப மனிதர்களைக் கண்டால் நாணிக் கிடக்கும் என் கொங்கைகளை, நான் எவ்வாறு சமாதானப் படுத்துவேன் என்கிறாள். கோவிந்தன் வீட்டு வாசலில் புகுந்தா லன்றி இவைகள் தரிக்கமாட்டா, மானிடவர்க்கென்று பேச்சுப்

படில் வாழகில்லேன் என்று சபதம்'' செய்து கொண்டு வாழும் இவைகளுக்கு என்னால் என்ன சமாதானம் சொல்ல முடியும்? ஆகையால் இங்கிருந்து என்னைக் கொண்டுபோய் அவனுறையும் யமுனையாற்றங்கரையில் விடுங்கள் என்கிறாள்.

''இங்குத்தை வாழ்வை யொழியவே போய்
யமுனைக்கரைக்கென்னை உய்த்திடுமின்''

என்பது காண்க.

இனி இப்பதிகத்தில் கண்ணன் உகந்து வசிக்கும் பல இடங்களில் ஒன்றாகப் 'பத்தவிலோசனம்' என்ற இடம் ஒன்று பேசப் படுகின்றது. இது முனிவர்கள் கூடி வேள்விகள் செய்யும் காட்டுப் பகுதியாகும். அம்முனிவர்களின் பத்தினிமார்கள், கண்ணனுக்கும், பலராமனுக்கும் மற்றும் ஆயர்சிறுவர்கட்கும் உண்ணும்படியாக மிகுதியான அன்னம் உள்ளிட்ட பலவகை போக்யப்பொருள்களையும் (பலகார பட்சணங்கள்) கொடுத்து உபசரித்த இடம், 'பத்தவிலோசனம்' என்று பாகவத புராணம் கூறுகிறது. பக்தர்கள் விரும்பிப் பாராயணம் செய்யும் பாகவத புராணத்தில் மேலும் சுவையுள்ள செய்திகள் பல கூறப்படுகின்றன. அவை—

ஒருநாள் கண்ணனும் பலராமனும் பசுக்களுடனும் இடையர்களுடனும் யமுனையாற்றின் கரையிலே சென்று நெடுநேரமளவும் பசுக்களை மேய்த்துக் களைத்து ஆற்றங்கரையில் ஓரிடத்திலே உட்கார்ந்திருந்தனர். அப்போது இடைப்பிள்ளைகள் கிருஷ்ண பலராமர்களைப் பார்த்து, தங்களைப் பசிவாட்டுகிறது என்றும் இப்போதே தங்கள் பசியைப் போக்கியருள வேணும் என்றும் மிகுந்த அன்போடு வேண்டினர். அவர்களுடைய பசித்துன்பத்தை அறிந்த கண்ணபிரான், ''ஓ பிள்ளைகளே! அண்மையில் சில முனிவர்கள் 'ஆங்கீரசம்' என்னும் வேள்வியைச் செய்து கொண்டிருக்கிறார்கள். நீங்கள் அவர்களிடம் போய் என் பெயரையும் என் தமையனார் பலராமன் பெயரையும் சொல்லி, இன்னாரால் நாங்கள் இங்கு அனுப்பப்பட்டிருக்கிறோம் என்று கூறி, பசிக்கு அன்னமிடும்படி கேளுங்கள். உங்கள் பசி தீரும் என்று கட்டளையிட்டு அனுப்பினார். அவர்களும் அங்ஙனமே முனிவர்களிருப்பிடம் சென்று விநயத்துடன் கண்ணபிரான் சொன்னதை விண்ணப்பம் செய்தனர்.

அவ்வந்தணர்கள் ஆயர்களின் பேச்சினைச் செவிசாய்த்துக் கேளாமல் பராமுகமாயிருந்ததால் ஆய்ப்பிள்ளைகள் மீண்டும் கண்ணபிரானிடம் வந்து நடந்ததைக் கூற அது கேட்ட கண்ணன் புன்னகை செய்து பிள்ளைகளே! நீங்கள் மறுபடியும்

அங்கே போய் முனிவர்களின் பத்தினிமார்களிடத்திலே நெருங்கி நானும், பலராமனும் இங்கிருப்பதாகச் சொல்லி உணவுண்ண பிரசாதம் வேண்டும் என்று கேளுங்கள். அப்பெண்டிர் தவறாது தருவர் என்று சொல்லி ரிஷிபத்தினிகளிடம் அவர்களை அனுப்பினான். உடனே அச்சிறுவர்களும் அங்குப் போய் ரிஷிபத்னிகளிடத்தில் ''அம்மனைமீர்! இதோ சற்றுதூரத்தில் கண்ணபிரான் நம்பிமூத்தபிரானோடு (பலராமனோடு) பசுக்களை மேய்த்துக் களைத்து அமர்ந்துள்ளார். அவர்களோடு பசு மேய்க்க வந்த நாங்களும் களைத்துப் போயிருக்கிறோம். ''நாங்கள் எல்லோரும் பசியாற உண்டு மகிழ உணவுதர வேணும்'' என்று வேண்டினர். அப்பெண்டிர் கண்ணன் பெயரைக் கேட்ட அளவிலேயே மிகவும் மகிழ்ந்து உடம்பு புளகித்து மயிர்க் கூச்செறிய, நால்வகைப்பட்ட பலகாரங்கள் பக்ஷியங்கள் சித்ரான்னங்கள் எல்லாவற்றையும் நல்ல நல்ல பாத்திரங்களிலே நிரம்ப எடுத்துக் கொண்டு ஸ்ரீகிருஷ்ணனும் பலராமனும் இளைப்புடன் இருந்த இடத்திற்கு விரைவாகப் புறப்பட; அது கண்ட முனிவர்களும் உற்றார் உறவினர்களில் முதியவர்களும் தடைசெய்தனர். ஆயினும் தடையை மீறிக் கண்ணனிடம் நிலையான அன்பும் பக்தியும் கொண்ட அப்பெண்டிர் விரைந்து சென்று கண்ணனும் பலராமனும் மற்றோரும் களைதீர உண்டு மகிழும்படி தாம் கொணர்ந்த உணவு வகைகளைச் சமர்ப்பித்து உண்ணச் செய்து மிகவும் மகிழ்ந்து அவர்களை வணங்கி விடை பெற்று மீண்டனர். அந்த ரிஷிபத்தினிகள் அன்புடனளித்த இன்னடிசிலைப் பகிர்ந்துண்ட ஆயர்களும் கண்ணனும் பலராமனும் பெருமகிழ்ச்சியடைந்தனர் என்று பாகவதம் தசமஸ்கந்தம் கூறுகிறது.

ஒருநாளல்ல இருநாளல்ல பல நாட்களுக்கு அந்த ரிஷிபத்தினிகள் கண்ணனுக்கும் ஆயர்களுக்கும் நல்விருந்து படைத்தார்களாம். அவர்கள் வரும் வேளையை எதிர்பார்த்துக் கண்ணனும், அவர்களின் வருகையை எதிர்நோக்கிக் காத்துக் கொண்டிருப்பானாம். இதனை ஆண்டாளின் அருளிச் செயல் அழகாக உணர்த்துகின்றது.

''வேண்டடிசில் உண்ணும்போது ஈதென்று பார்த்து நெடு நோக்குக் கொள்ளும் பத்தவிலோசனத்து என்னை உய்த்திடுமின்'' என்பன அவ்வரிகள். (பக்தம் என்ற வட சொல்லுக்கு அன்னம் என்பது பொருள். விலோசனம் என்பதற்கு பார்வை என்பது பொருள். எனவே பக்தவிலோசனம் என்பது சோறு பார்த்திருக்குமிடம் என்றாகிறது) இப்பதிகத்துப் பாசுரங்களில்

கண்ணபிரானுறைவிடமாகப் பாண்டிவடம், துவராபதி, கோவர்த்தனம் முதலிய வரலாறு பொதிந்த பல இடங்கள் கூறப்பட்டுள்ளன.

ஆண்டாள் இவ்விதமாக, கண்ணனிருக்குமிடத்தில் அல்லது கிருஷ்ண சம்பந்தமுள்ள விடத்தில் தன்னைக் கொண்டு சேர்க்கும்படி வேண்ட, தோழிமார்கள் அவளைத் தேற்றி நீ இப்போதிருக்குமிருப்பில் மெலிந்து தளர்ந்து சக்தியற்ற நிலையிலுள்ளனை. உன்னை அங்கெல்லாம் இப்போது கொண்டு செல்ல இயலாது என்று சொன்னார்களாம். அதற்கு ஆண்டாள் என்னை அவனிருக்கும் இடத்தில் கொண்டு சேர்க்க முடியாதென்றால், அவனிடமிருந்து அவனுக்குப் பிடித்தமான, அவன் உபயோகித்து வரும் ஏதேனுமொரு பொருளையாவது கொணர்ந்து என்மேல் வீசி என் வாட்டத்தைத் தணித்து என்னை வாழ்விக்கப் பாருங்கோள் என்று அடுத்த பதிகத்தில் வேண்டுகின்றாள்.

## கண்ணன் என்னும் கருந்தெய்வம்

கண்ணபிரானுடைய காட்சியிலேயே பழகிக் கிடக்கிறாள் ஆண்டாள். அவன் திருப்பெயரையே குழறிய வண்ணம் இருக்கிறாள் அவள். அது கண்ட தாய்மார்கள் அவளுக்கு இதந்தரும் சொற்களைச் சொன்னார்கள். பெண்ணே! நீ அப்படி இருந்தால் அழகாயிருக்கும்; இப்படி நடந்தால் அழகாயிருக்கும் என்றெல்லாம் பாராட்டினார்கள். அவர்களின் சொற்களைக் கேட்ட ஆண்டாள், அன்னைமீர்! நீங்கள் எனக்கொன்றும் புத்தி சொல்ல வேண்டாம். உண்மையிலேயே எனக்கு ஏதேனும் நன்மை செய்ய வேண்டும் என்று நீங்கள் எண்ணினால் பெண்கள் படும் பாட்டை அறியாதவனான கண்ணபிரானுடைய அரையில் (இடுப்பில்) உடுத்தியிருக்கும் பீதாம்பரத்தைக் (ஆடையை) கொணர்ந்து அத்தாலே வீசி என் தாபத்தைத் தணியுங்கள் என்றாள்.

இப்பாசுரத்தில் ''பெண்ணின் வருத்தமறியாத பெருமான்'' என்று கண்ணனுக்கு ஆண்டாள் பட்டம் சூட்டுகிறாள். ''முலையெழுந்தார் நிலை மோவாய் எழுந்தார்க்குத் தெரியாதே''! என்று பட்டர் என்ற ஆசிரியர் வியந்து பொருள் கூறிப் போந்தார். (பருவம் வந்த பெண்களின் நிலை மீசை முளைத்த ஆண்களுக்குப் புரியாதோ? என்பதே பொருள்.) கண்ணன் பீதக வாடைப்பிரான் என்றபடி அரையிலணிந்திருக்கும் ஆடை நேர்த்தி

யானது. தோள் மேலும் உத்தரீயம் என்ற மேலாடை அணிந் திருப்பான். இதில் அரையிலணிந்திருக்கும் ஆடையால் தன் வாட்டம் தணிய வீசும்படி ஆண்டாள் கேட்டதற்கு முகாந்திரம் வேண்டுமே? அஃதென்ன? என்றால் ஆண்டாளுக்குக் கண்ணனின் வியர்வை மணத்திலே தனி விருப்பம் உண்டாம். மேலே அணியும் உ த் த ரீ ய த் தி லே அந்த மணம்மிக்கிருக்காது. ஆதலால்தான் 'அரையிற்பீதக வண்ண ஆடைகொண்டு வீசுமின்' என்று கேட்ட தாகப் பெரியோர் பணிப்பர். இனிப் பாட்டின் முழு வடிவத்தைப் பார்ப்போம்.

> கண்ணனென்னும் கருந்தெய்வம் காட்சி பழகிக் கிடப்பேனை
> புண்ணில் புளிப்பெய்தாற்போல் புறநின்றழகு பேசாதே
> பெண்ணின் வருத்தமறியாத பெருமானரையில் பீதக
> வண்ண வாடை கொண்டு என்னை வாட்டம் தணிய வீசீரே

இதேபோல் ''நீலார் தண்ணந் துழாய் கொண்டு என் நெறி மென் குழல் மேல் சூட்டீரே''! என்று அவன் சூடிக் களைந்த திருத்துழாயைத் தன் கூந்தலிலே சூடிக் கொள்ள ஆசைப் படுகிறாள். பின்னும் அவன் மார்பிலே வெப்பம் தீரப் புரட்டுங்கள் என்கிறாள். அவனையே அணைய ஆசைப்பட்ட ஆண்டாளுக்கு அது கிடைக்காமற் போனாலும் அவன் திருமார்பிலணிந்த மாலையாவது கிட்டவேண்டும் என்ற வேட்கை மீதூர்ந்து இப்படிப் பேசுகிறாள் என்பர்.

மேலும் அக்கண்ணன் சோதிவாய் திறந்து தன்னோடே பேசமாட்டானா என்று ஏங்குகிறாள். அவன் வாய்ச்சொல்லுக்கு ஆசைப்பட்டு சிறுமியர் குரலெடுத்து அழுவதுபோல் கண்ணீர் பெருக்கி ஓவென்று அழுதாள். அதற்கும் அவன் மனமிரங்கிப் பேசவில்லை. பின்பு பெரியவர்கள் தொழுவதுபோல் தொழுது தோத்திரம் செய்தாளாம், அம்மாயக் கண்ணன் காட்சி தர வில்லை. அசரீரியாக வேனும் அஞ்சாதே என்று வாய் திறந்து ஒரு வார்த்தையாவது சொல்வானோ என்றால் அப்படி எதுவும் செய்யவில்லை. இவ்விதம் பல படியாலும் புறக்கணிக்கின்ற அவனை மறந்தாகிலும் ஒருவாறு ஆறியிருக்கலாமென்றால் அதுவும் முடியவில்லை. உருவெளிப் பாட்டிலே—மனத்திலே தோன்றி மாய்க்கிறான். அந்தோ! யான் என் செய்வேன். யான் உயிர் வாழவேண்டுமானால் பசுக்களின் பின்னே மிகவும் அழகாகக் குழலூதிவரும் சோதிவாயின் அமுதப்புனலை யாவது என் முகத்தில் தடவுங்கோள் என்கிறாள். கண்ணன் வேய்ங் குழலை வாயில் வைத்து ஊதும் போது, வாய் கொப்பளித்திருப்

தால் (உப்பியிருப்பது) ஊறும் உமிழ்நீர் குழலின் துளைவழியாக வெளிவரும். அவன் கிடைக்காவிட்டாலும், அவன் (வாயுமிழ்) நீராவது கிடைக்குமா என்று ஆசைப்படுகிறாள்.

''தழையின் பொழில் வாய்நிரைப் பின்னே நெடுமாலூதி வருகின்ற குழலின் துளைவாய் நீர் கொண்டு குளிரமுகத்துத் தடவீரே'' என்ற வரிகளினால் எத்தனை விரக வேதனை ஆண்டாளுக்கு இருந்ததென்பதை அறியலாம்.

இனி விரக வேதனையின் உச்ச கட்டத்தில் ஆண்டாள் பேசிய மற்றொரு பாட்டின் சுவை காண்போம்.

ஆண்டாள் கண்ணனை நினைந்து உள்ளுக்குள்ளேயே கரைந்து நைந்து போகிறாள். ஆனாலும் கண்ணன் முகம் காட்டவில்லை. அவன் எதிரே வந்து காட்சி தராவிடினும் ''நம்மை ஆசைப்பட்ட ஆண்டாள் என்ற பெண் உயிரோடு இருக்கிறாளா? அல்லது இறந்து தான் போய்விட்டாளா? என்று கூட யாரிடமும் கேட்கவில்லை என்று புலம்புகிறாள். அவனுக்கு எள்ளளவாவது என்னைப் பற்றிக் கவலையிருந்தாலல்லவா விசாரிக்கப் போகிறான்; தன் பெருமையும் போகமுமே தனக்குப் பெருஞ் செல்வமாயிருப்பதால் நானொருத்தி இருக்கிறேன் என்பதையே மறந்து விட்டானே என்று கூறுகிறாள். அவனைக் 'கொள்ளை கொள்ளி' என்று ஆண்டாள் பழிக்கிறாள். குறும்பன் என்று சாடுகிறாள். அப்படிப்பட்ட கண்ணனை ஒருக்கால் நான் காணப் பெறுவேனேயானால், ஆட்டின் கழுத்தில் பயனற்றுத் தொங்கும் இரு தாடிக் காம்புகள் போல், கொள்ளும் பயன் ஒன்றுமில்லாத என்னுடைய கொங்கையை வேரோடு பறித்துப் பிடுங்கி, அந்தக் கண்ணனுடைய மார்பிலே எறிந்து விட்டு என் துக்கத்தைப் போக்கிக் கொள்வேன் என்று மிக்க வேதனையோடு பேசியுள்ளாள்.

ஆண்டாளுக்கிருந்த இந்த விரக வேதனையின் உச்ச கட்டம் போல், திருமங்கையாழ்வார் நாயிகா பாவத்தில் (தலைவி நிலையெய்தி) பேசிய பெரிய திருமடல் பாசுரங்களிலும் சில வரிகள் உள்ளன.

''கன்னவிலும் காட்டகத்தோர் வல்லிக் கடி மலரின்,
நன்னறு வாசம் மற்றாறும் எய்தாமே,
மன்னும் வறு நிலத்து வாளாங்கு உகுத்தது போல்,
என்னுடைய பெண்மையும் என்னலனும் என் முலையும்
மன்னு மலர் மங்கை மைந்தன் கண புரத்துப்
பொன் மலை போல் நின்றவன் தன் பொன்னகலம்
தோயாவேல்

என்னிவை தான் வாளா எனக்கே பொறையாகி,
முன்னின்று மூக்கின்று மூவாமைக் காப்பதோர்
மன்னுமருந்தறி வாரில்லையே.''

என்ற வரிகள் ஒப்பு நோக்கத்தக்கன ஆழ்வார் பெண் பாவனை யில் பாடினார். ஆண்டாளோ பெண்ணாகவே இருந்து பாடுகிறாள்.

இப்பாட்டில் 'கிழங்கோடும் அள்ளிப்பறித்திட்டு' என்று ஆண்டாள் கூறியுள்ளது அவள் ஆற்றாமையின் மிகுதியை உணர்த்தும். இங்கே ஒரு நயத்தையும் உரையாசிரியர் அழகாகக் கூறியுள்ளார். ''கொங்கை தன்னைக் கிழங்கோடும் அள்ளிப் பறித்திட்டு எறிந்து என்னழலைத் தீர்வேனே என்றால் போதாதா? அவன் மார்பில் எறிந்து என்று சொல்வானேன் என்றால், இம்முலைகளால் தான் படும் பாட்டைப் பெண்ணின் வருத்தமறியாத பெருமானான அவனும் பட வேண்டும் என்ற கருத்தினால் என்று அறிய வேண்டும். இம்முலைகள் அவன் மார்பில் ஏறி அவனைக் கும்மிக் நமைக்க வேணும் என்று நினைக் கிறாள் ஆண்டாள். என்னைப் போன்று இத்துன்பத்தை அவனும் பட்டானாகில் அதுவே என் அழல் (விரக வேதனை) தீர்ந்தபடி என்கிறாள்.

உள்ளேயுருகி நைவேனை உளளோவிலளோ வென்னாத
கொள்ளை கொள்ளிக் குறும்பனைக் கோவர்த்தனனைக் கண்டக்கால்
கொள்ளும் பயனொன்றில்லாத கொங்கை தன்னைக் கிழங் கோடும்
அள்ளிப் பறித்திட்டு அவன் மார்பில் எறிந்து என்னழலைத் தீர்வேனே.

## என் கண்ணனைக் கண்டீர்களா?

'தையொரு திங்களும்' என்று தொடங்கி, நாச்சியார் திரு மொழியில் இதுவரை 133 பாசுரங்களில் ஆண்டாள் பட்ட துன்பங்கள் எல்லாம் கூறப்பட்டன. கடைசிப் பதிகமான ''பட்டி மேய்ந்தோர் காரேறு'' என்ற இப்பத்துப் பாட்டிலும், கண்ணன் ஆண்டாளுக்குப் பிருந்தாவனத்தில் காட்சி தந்ததாகவும், அந்த அனுபவத்தை ஆண்டாள் அருளிச் செய்ததாகவும் பேசப்படுகிறது ஆனாலும் ஆண்டாள் தான் நேருக்கு நேராகக் கண்ணனைக் காணாமல், அவனைத் தேடிச் செல்வளாய் என் கண்ணனைக் கண்டதுண்டோ என்று எதிர்ப்பட்டாரைக் கேட்பவளாய், ஆம்!

கண்டதுண்டு, கண்டதுண்டு என அவர்கள் விடை அளிப்பார் போல வினா விடைத் தொகுப்பாய்ப் பாசுர அமைப்புக்கள் உள்ளன. ஆனால் வினா எழுப்புவதும், விடை அளிப்பதும் ஆண்டாளொருத்தியேதான். இப்பாசுரத் தொகுப்பில் சில நயங்களைக் காண்போம்.

பரமபதமாகிய ஸ்ரீவைகுண்டத்திலே திருவனந்தாழ்வானா கிற ஆதிசேடன் மடியிலும், சேனை முதலியார் என்கிற பிரதான படைத்தலைவரின் பிரம்பாகிய கோலின் கீழும், பெரிய திருவடி யாகிய கருடாழ்வாரின் சிறகின் கீழும் ஒடுங்கி வசிக்கிறான் ஸ்ரீமந்நாராயணன். அவனே இந்நிலவுலகில் கண்ணனாகத் தோன்றித் தன் விருப்பப்படி விளையாடி நிற்கிறான். அப்படிப் பட்ட கண்ணன் விளையாடிக் களிக்கும் இடத்தை, என் எதிரே வந்து கொண்டிருக்கும் பெரியோர்களே, நீங்கள் கண்டீர்களோ? என்று ஆண்டாள் கேட்க, எதிரே வந்தவர்கள், அக்கண்ணனின் அடையாளங்கள் யாவை என்று கேட்டனர். அதற்கு ஆண்டாள் என் கண்ணன் கண்ட கண்ட இடங்களிலும் திரிவான்; கறுப்பா யிருப்பான், பலராமன் என்ற அண்ணனுக்கு மட்டும் அடங்கி நடப்பான், செருக்குடனிருப்பான் என்றெல்லாம் அடையாளங் களை ஆண்டாள் சொன்னாள்.

எதிரே வந்தவர்கள் ஆண்டாளின் கேள்விக்கு விடையாகக் கூறினார்கள். ஆம்! நாங்கள் கண்ணனைக் கண்டோம்; தனக்கு இட்டமான சில பசுக்களை இங்கும் அங்குமாக மேயவிட்டு, மடக்கி ஓட்டி, விளையாடிக் கொண்டிருக்கும் அம்மாயவனை விருந்தாவனத்தில் கண்டோம் என்றார்கள். இப்படி வினா விடையில் கடைசிப் பதிகம் அமைந்துள்ளது.

மற்றொரு பாட்டிலே திருவாய்ப்பாடியில் வெண்ணெயின் நாற்றம் விளங்க விளையாடித் திரியும் என் கண்ணனைக் கண்டீரோ? என்று ஆண்டாள் வினவ, அதற்கு அவர்கள் மின்னலும் மேகமும் ஒன்றோடொன்று சேர்ந்தாப்போல வனமாலை மார்பில் ஒளி விட்டு விளங்கத் தோழர்களோடு ஓடியாடி விளையாடும் உன் கண்ணனை நாங்கள் விருந்தா வனத்தில் கண்டோம் என்று பதில் கூறுவதாகப் பாட்டுள்ளது.

''கணங்களோடு மின் மேகம் கலந்தாற்போல் வனமாலை

மினுங்க நின்று விளையாட விருந்தாவனத்தே கண்டோமே';

இப்பதிகப் பாடல்கள் சிலவற்றில் கண்ணனின் தீய குறும்புகள், ஆண்டாளால் போற்றப்படும் குணங்களாகவே பேசப்பட்டுள்ளன.

உலகில் பொய்பேசுதல் தீங்கன்றோ? அதேபோலப் பெண் களிடத்தில் இரக்கமின்றித் தீம்பு செய்தாலும் குற்றமன்றோ? ஆனால் ஆண்டாள் மனத்தால் கூட இவைகளைத் தீமை களென்று ஒருபோதும் நினைத்ததில்லை. உன் கண்ணனைக் கண்டதுண்டோ என்று கேட்கிறாயே அவனுக்குரிய அடையாளங் களைச் சொல் என்று எதிர்பட்டார் கேட்க, அதற்கு ஆண்டாள் கள்ளங்கபடமில்லாமல், என் கண்ணன் பொய்கள் பல பேசுவான். அதிலும் பொருந்தாத பொய்களைப் பேசுவதில் கெட்டிக்காரன். அன்றியும் பெண்களைக் கண்டால் உடனே மோகித்துப் போவான். பெரும் பெண்பித்தன் என்று சொல்லி, இப்படிப்பட்ட குணவானைக் கண்டதுண்டோ என்று கேட்பதாகப் பாசுரம். அவர்களும் இந்த பதிலைக் காதில் வாங்கிக் கொள்ளாமல் வினதையின் சிறுவனான கருடனின் சிறகின் கீழ் ஒய்யாரமாக வரும் கண்ணனை விருந்தாவனத்தில் கண்டதாகக் கூறிச் செல்கின்றனர்.

மாலாய் பிறந்த நம்பியை மாலே செய்யும் மணாளனை
ஏலாப் பொய்களுரைப்பானை, இங்கே போதக் கண்டீரே
மேலால் பரந்த வெயில் காப்பான் வினதை சிறுவன் சிறகென்னும்
மேலாப்பின் கீழ் வருவானை விருந்தாவனத்தே கண்டோமே.

மற்றொரு பாட்டில் தயை என்னும் தருமத்தைக் கொஞ்சமும் அறியாதவன்; குறும்பு செய்வதையே தொழிலாகக் கொண்டவன் வில்லைப் போன்ற புருவ அழகுடையவன். ஆனாலும் பெண்களை வஞ்சிப்பவன் என்று சொல்லி இப்படிப்பட்டவனை எங்கேனும் நீங்கள் கண்டதுண்டோ என்று ஆண்டாள் வினவ, அவர்கள் கண்டோம் கண்டோம் என்கிறார்கள். ஆம்! கரிய திருமேனி படைத்த செந்தாமரைக் கண்ணனான அக்கண்ணனை, நாங்கள் பிருந்தாவனத்தில் பார்த்தோம் என்று பதிலிறுத்தார்கள். ஆண்டாள் அருளிய நாச்சியார் திருமொழியின் இறுதிப் பாடல் களில் தன்னால் விரும்பப்படும் கண்ணன், சகல தெய்வங்களுக்கும் தலைவனானவனும், தேவாதிதேவனுமான நாராயணனே என் பதையும் அவனே மோட்சமளிக்க வல்லவன் என்பதையும் பரக்கச் சொல்லிப் பதிகத்தைத் தலைக் கட்டியுள்ளாள். இந்த நாச்சியார் திருமொழியைப் பயில்வார்க்குப் பலனும் கூறப் பட்டுள்ளது. அதாவது கஜேந்திரன் என்னும் யானையரசன் பொய்கையில் முதலையின் வாயிலகப்பட்டு நெடுநாள் துடித்து, பிறகு பெருமானுடைய காட்சியைப் பெற்றுத் துயர் தீர்ந்து

மகிழ்ந்தது போல, ஆண்டாளும் நெடுநாள் பட்ட விரக தாபம் தீர்ந்து மகிழ்ந்தாள் என்பது இத்திருமொழியின் இறுதிப்பாடலால் விளங்குகிறது. "கொம்மை முலைகள் இடர் தீரக்கோவிந்தற்கோர் குற்றேவல், இம்மைப் பிறவி செய்யாதே இனிப் போய்ச் செய்யும் தவம்தானென்?" என்று பரமபதமாகிற வானாட்டு இன்பத்தை வெறுத்து ஒதுக்கிய ஆண்டாளுக்கு இந்நிலவுலகிலேயே வேறு கை புகுந்தது என்று அறிய முடிகிறது. இப்படி நற்பேறு பெற்ற ஆண்டாள் திருவாய் மலர்ந்தருளிய இப்பாசுரங்களைச் சிந்திக்குமவர்கள் எஞ்ஞான்றும் எம்பெருமான் இணையடிக் கீழ்ப்பிரியா திருப்பர்கள் என்று நற்பலன் கூறப்பட்டுள்ளது.

பருந்தாள் களிற்றுக்கருள் செய்த பரமன் தன்னைப் பாரின் மேல்
விருந்தாவனத்தே கண்டமை விட்டுசித்தன் கோதை சொல்
மருந்தாமென்று தம் மனத்தே வைத்துக் கொண்டு வாழ்வார்கள்
பெருந்தாளுடைய பிரானடிக்கீழ்ப் பிரியாதென்றுமிருப்பாரே.

நாச்சியார் திருமொழி நயம் முற்றிற்று. இனி திருப்பாவை நயம் காண்போம்.

# இலக்கிய நோக்கில் திருப்பாவை

'கோதை பிறந்த ஊர் கோவிந்தன் வாழுமூர்' என்று ஸ்ரீவில்லிபுத்தூர் இன்றும் போற்றப் படுகிறது. கோவிந்தனோடு வாழ்வு இல்லையானால் 'வாழகில்லேன்யான்' என்ற துணிவும் முடிவும் கொண்டவள் கோதை. கோதை என்றும், நாச்சியார் என்றும் அழைக்கப்படும் ஆண்டாளால் அருளிச் செய்யப்பட்ட முப்பது பாட்டுக்கள் திருப்பாவை. தமிழிலக்கியத்தில் காணப் படும் பாவை என்னும் செய்யுள் வடிவத்தில் பலர் பாவை நூல்களை எழுதியுள்ளனர். ஆண்டாள் பரம்பொருளான கண்ணபிரான் மீது காதல்' கொண்டு அவனுக்கே எப்பிறவி களிலும் தொண்டாற்ற விரும்பி அருளிய திருப்பாவை போல் மாணிக்கவாசகர் திருவெம்பாவை என்னும் நூலைச் சிவபெருமான் மீது பாடியுள்ளார். சைன சமயத்தில் அருகன் திருவெம்பாவை என்னும் நூல் மகாவீரரைக் குறித்து இயற்றப்பட்டுள்ளது. இப் பாவைப் படைப்புக்களிலெல்லாவற்றுள்ளும் ஆண்டாள் அருளிய திருப்பாவைக்குத் தனி ஏற்றமுண்டு. காரணம் திருப்பாவையின் பாட்டுடைத் தலைவன் கண்ணன். பாட்டுடைத் தலைவி ஆயர் சிறுமியர் பாவனையில் ஆண்டாள். இருவருடைய அழகு குணம் செயல் வாக்கு என்ற பல காரணங்களால் திருப்பாவை என்னும் பாவை நூல் தனி ஏற்றம் பெற்று விளங்குகிறது.

பாவையராகிய பெண்கள் பாவை பிடித்து வைத்துக் கொண்டாடிய பாவை நோன்பை ஒட்டி அவர்களை அனுசரித்து எழுந்ததுதான் ஆண்டாளின் திருப்பாவை (பாவனையில் எழுந்தது). இந்தப் பாவைப் பிரபந்தத்தில் நல்ல மழை பெய்து நாடு செழிக்க வேண்டும், நல்ல கணவனை அடைய வேண்டும் என்ற இரண்டு கருத்துக்கனைக் காண்கிறோம். கண்ணனையே கணவனாக அடைய ஆசைப்படுகிறார்கள் ஆயர் சிறுமிகள்.

நல்ல கணவனை நாடி நற்பேறு பெற விரும்புவது இயற்கை. மார்கழி மாதத்துடன் தட்சிணாயனம் முடிவடைகிறது. தை மாதம் உத்தராயணம் தொடங்குகிறது. எனவே பழமை கழிந்து

புதுமை தோன்றுவதற்கு மார்கழி முடிவும் தைப் பொங்கலும் ஓர் அறிகுறி எனலாம். மார்கழி மாதம் பல்லாற்றானும் ஏற்றம் பெற்ற மாதம். "மாதங்கள் அனைத்திலும் நான் மார்கழி மாதம்" என்று பகவத்கீதையில் கண்ணன் அருளியுள்ளான்.

ஒரு நாளின் பல கூறுகளில் பொழுது விடியும் நேரமாகிய அதிகாலை வேளைக்குத் தனி அழகும் சிறப்பும் உண்டு. இந்தக் காலை வேளையைப் பிரம்ம முகூர்த்தம் என்பர் சான்றோர். புதிய செயல்களை அமைதியாகச் சிந்திக்க ஏற்ற காலம். இந்த மாதத்தில்தான் ஆண்டாள் 'மார்கழி நோன்பு' என்ற தூய விரதத்தை மேற்கொண்டாள். நோன்பு பற்றியும் பற்ற வேண்டியவை, விட வேண்டியவை பற்றியும், பரம் பொருளின் அழகு குணங்கள் பற்றியும், பக்தர்களின் நிலை பற்றியும் இப்பாவை நூலில் ஆழமான பல கருத்துக்கள் கூறப்பட்டுள்ளன.

பகவானுக்கு ஆளாகி உறவு பூண்டு ஒவ்வொருவரும் தமக்கு இசைந்த தொண்டு செய்யுமாறு திருவருள் புரிய வேண்டும் என்று இறைவனிடம் கைங்கர்யப் பிரார்த்தனையைச் செய்து கொள்வது தான் திருப்பாவையின் தேர்ந்த உட்பொருளாகும். இது வைணவ சமயசாரமான தனிப்பெருங் கொள்கை. ஸ்ரீராமானுச தரிசனமாக ஸ்ரீவைணவத்தை உருவாக்கிய மகத்தான சக்திகளில் ஒன்று திருப்பாவை என்று ஊகிப்பது தவறாகாது. இராமானுசர் திருப்பாவையில் விசேடமாக ஈடுபட்டுத் திருப்பாவை சீயர் என்று பேர் பெற்றார்.

## மார்கழித் திங்கள்

ஆண்டாள் கி. பி. 731-ல் திருப்பாவையை இயற்றியதாக ஆராய்ச்சியாளர்கள் கருதுகின்றனர். ஆண்டாள் பாவை நோன்பு நோற்றது ஒருவகை பாவனையால்தான். திருமுக்குளத்தில் இக்காலத்திலும் நீராட்டம் காணலாம். பாசுரங்களைக் கொண்டு கோவியர்கள் நோற்றதையும் அறிகின்றோம். பண்டைத் தமிழர்களின் பாவை நோன்புக் காட்சிகளையும் தெளிவாக அறிய முடியவில்லை. ஆண்டாள் பாவனையால் ஆயர்பாடிச் சிறுமியருள் ஒருவளாகி நோற்ற நோன்புக் காட்சிகளே நம் கண்முன் காண்பதுபோல் இத்திருப்பாவைப் பிரபந்தத்தால் காட்டப்படு கிறது. திருவாய்ப்பாடியில் பாவை நோன்பு நோற்கிறாள் ஆண்டாள். தனியொருத்தியாக இவள் இந்த நோன்பை மேற் கொள்ளவில்லை. பல பெண்களுடன் சேர்ந்து எல்லோரும் கூடி நோன்பை மேற்கொள்கின்றனர்.

ஆயர் சிறுமிகள் 'நாம் நோன்பு நோற்பதற்குத் தக்கபடி, நமக்கு இப்படி ஒரு நல்லகாலம் வாய்த்ததே' என்று முதலில் காலத்தைக் கொண்டாடுகிறார்கள். மார்கழி நீராட்டத்தில் விருப்பமுடைய பெண்களை அழைப்பதாக இப்பாட்டு அமைந்துள்ளது.

திருவாய்ப்பாடியில் பெண்கள் கண்ணனிடம் ஆறாக் காதல் கொண்டு அவன் பின்னே சென்று வாடுகிறார்கள் என்று இடைக் குலப் பெரியவர்கள் அவர்களை நிலவறையில் சிறையிட்டு வைத்திருந்தார்கள். அதனால் மழையின்றி ஆயர்பாடி மக்கள் அல்லலுற்றனர். மழை வேண்டி நோன்பு நோற்க இப்பெண்கள் தேவைப்பட்டார்கள். அவர்களை விடுதலை செய்து நோன்பு நோற்கப் பெரியவர்கள் அனுமதித்தார்கள். அப்போது ஆயர்பாடிச் சிறுமியர் நோன்பு நோற்க முற்பட்டபொழுது, இம்மார்கழித் திங்கள் இயல்பாய் அவர்களுக்கு வாய்த்தது.

இம்மாதம் வாய்த்தாப்போலே மதிநிறைந்த நன்னாள் என்று சுக்கிலபட்ச பௌர்ணமியும், நல்ல நாளாகத் தொடங்கும் நாளமைந்தது. களிப்பின் மிகுதியால் 'மார்கழித் திங்கள் மதி நிறைந்த நன்னாள்' என்று மிகவும் மகிழ்ந்து பாடுகிறார்கள். நீராடப் போதுவீர் என்று 'கண்ணனைக் கண்டு அன்பு நன்னீராடி ஆறுதலும் ஆனந்தமும் பெற வாரீர் என்று தோழிமார்களை அழைக்கிறார்கள். சீர்மல்குமாய்ப்பாடி என்கிறார்கள். பால்வளம் முதலான செல்வங்கள் நிறைந்திருக்கும் ஆய்ப்பாடி மட்டும் அல்ல. கிருட்டின (கிருஷ்ண) பக்தியாகிய செல்வமும் நிறைந்த ஊராம் திருவாய்ப்பாடி. கிருட்டின குணங்கள் எங்கும் பேசப்படும் ஆய்ப் பாடியெனலாம்.

நந்தகோபன் குமரனும் யசோதை இளஞ்சிங்கமுமாகிய கண்ணனை இச்சிறுமியர் அகக்கண்ணால் பார்க்கிறார்கள். கண்ணனது மேனியைக் காணும் போது மழைகண்ட பயிர்போல தழைக்கிறது இவர்கள் முகம். இப்பாட்டில்'ஏரார்ந்த கண்ணி, என்று யசோதை வருணிக்கப் படுகிறாள். ஆம்! அழகு மிகுந்த கண்ணனைப் பார்த்துப் பார்த்துத்தான், யயோதையும் கண்ணழகு வாய்ந்தவளானாளாம். பின்பு கண்ணன் திருமேனியையும் திருமுகத்தையும் கொண்டாடுகிறார்கள். பாவை நோன்பிற்கு உறுப்பாகிய பறையைக் கண்ணனிடம் வேண்டிப் பெற்று நோன்பு நோற்போம் என்கிறார்கள். பறை பறை என்று இவர்கள்

இப்படிச் சொல்லிச் செல்வது வியாஜம்தான் (போலி) உண்மையில் கிருட்டின (கிருஷ்ண) பக்தியாகிய கைங்கர்யமே இவர்களது குறிக்கோள். இக்குறிக்கோளை நிறைவேற்ற வல்லவன் நாராயணனே என்று இவர்கள் நம்புகிறார்கள். எனவே 'நாராயணனே நமக்கே பறை தருவான்' என்று கூறியுள்ளனர்.

**விதியும் விலக்கும்-வையத்து வாழ்வீர்காள்** விரதம் என்று சொன்னாலே நோன்புதானே. நோன்புக்குரிய காலத்தில் தீய செயல்களை விலக்கினால் மாத்திரம் போதாது. நல்லவைகளையும் செய்ய வேண்டும். ஆதலால் விடியற் காலையில் எழுந்து நீராடி பாற்கடலில் துயிலும் பரமனடியைப் பாடுவோம், பரவுவோம் என்று சபதம் செய்கிறார்கள். அதோடு நிற்கவில்லை. ஐயமும் பிச்சையும் ஆம்தனையும் கைகாட்டி என்று, பிறர்க்குதவு தலாகிய நற்செயல்களையும் கடைப்பிடிப்போம் என்கிறார்கள். இனி விதிகளுடன் சில விலக்குகளையும் சிந்திக்கிறார்கள். 'நெய்யுண்ணோம் பாலுண்ணோம்' என்றும் 'மையிட்டு எழு தோம் மலரிட்டு நாமுடியோம்' என்றும் நோன்பு முடியும் வரை நெய்யும் உண்பதில்லை, பாலும் உண்பதில்லை; கண்ணுக்கு மை எழுதியும் கூந்தலுக்குப் பூச்சூடியும் அலங்கரிக்க மாட்டோம் என்றும் தீர்மானிக்கிறார்கள். மற்றும் செய்யாதன செய்யோம், தீக்குறளை சென்றோதோம் என்று மேலும் விரதத்தைக் கடுமை யாக்கிக் கொள்கிறார்கள். தீமை விளைவிக்கும் கோட் சொற்களை (குற்றங்களை) கண்ணன் பால் சென்று கூற மாட்டோம் என்கிறார்கள்.

## உலகளந்த உத்தமன்

இனி மூன்றாவது பாட்டில் வாமனாவதார வைபவமும்-உலகளந்த பெருமானின் மாண்பும் பேசப்பட்டுள்ளது. பெரிய படைகளுடன் செல்லும் அரசனுக்குத் தங்க நிழலும் இடமும் தரக் கூடியதன்றோ மிகப் பெரிய ஆலமரம். ஆனால் அதன் விதை எவ்வளவு சிறியது. அதுபோல மிகப் பெரிய உருவங்கொண்டு ஓங்கி உலகளந்த உத்தமனான நாராயணன் மிகச் சிறிய வடிவனனாக குள்ள வாமனனாகவன்றோ முதலில் தன்னைக் காட்டிக் கொண்டான். அப்படிப்பட்ட நாராயணன் பேர்பாடி, நாம் பாவை நோன்பிற்கு அங்கமாகப் பனி நீராடுவோம் என்று ஆய்ப்பாடிப் பெண்டிரை அழைக்கின்றார்கள். தீங்கின்றி நாடெல்லாம் திங்கள் மும்மாரி பெய்ய, நீங்காத செல்வம் நிறைந்து மகிழப்பாடீர் அவன் நாமம் என்கிறார்கள்.

## வாழ உலகினில் பெய்திடாய்

அடுத்து நான்காவது 'ஆழி மழைக் கண்ணா' என்ற பாட்டில், 'வாழ உலகினில் பெய்திடாய் நாங்களும் மகிழ்ந்து மார்கழி நீராட' என்று மழைக் கடவுளைப் பணிகிறார்கள். இப் பாட்டில் 'ஊழி முதல்வன் உருவம் போல் மெய்கறுத்து என்று மழை கண்ணனுடைய கறுப்பு திருமேனியைப் போன்று கறுத்து அழகுபெற வேண்டும் என்று ஆசைப்படுகிறார்கள்.கண்ணனுடைய அருள்போல் யாவரும் வாழ வளம் பெருக மழை பொழிய வேண்டும் என்றும் கட்டளையிடுகிறார்கள். இவர்கள் மழைக் கடவுளை வேண்டவில்லை. அவனுக்குக் கட்டளையிடுகிறார்கள். காரணம் பகவத் பக்தர்களுக்குத் தெய்வங்கள் பணி செய்யக் காத்திருக்குமாம். ஆதலால் மழைக்கு நியமனம் (கட்டளை) செய்கிறார்கள் என்று உரையாசிரியர்கள் கூறியுள்ளனர்.

## பிழை நீங்கப் பரமனைப் பாடு

எந்த நல்ல காரியத்துக்கும் இடையூறுகள் வருவதுண்டு. ஆதலால் திருவாய்ப்பாடிப் பெண்டிருள் ஒருத்திக்கு ஓர் ஐயம் எழுந்தது. 'நாம் நெடுநாளாகச் செய்திருக்கும் பிழைகள் பாவங்கள் எல்லாம் இன்று நாம் செய்யக் கருதும் இந்த நல்ல காரியத்துக்கு இடையூறு விளைவிக்குமோ' என்று அஞ்சினாள். அதற்கு விடையாக ஆண்டாள் நாம சங்கீர்த்தனமே நாம் செய்ய வேண்டிய செயல். கடவுளைக் காட்டிலும் அவனுடைய திருப் பெயரே நமக்குப் பக்கத்தில் வந்து பெற்ற தாய் போல் உதவும். நாம் மேற்கொண்டுள்ள செயலில் வெற்றி கிட்டுவது மட்டு மல்ல. மாறாக நம்முடைய பாவங்களெல்லாம் அவன் திருநாமத் தைச் சொன்ன மாத்திரத்தில் தீயில் பட்ட பஞ்சு போல் உரு மாய்ந்து அழிந்து விடும் என்கிறாள்.

இனி ஆறாவது பாடல் தொடங்கி பதினைந்தாவது பாட்டு வரை திருப்பள்ளி எழுச்சிப் பாசுரங்கள். அதாவது திருவாய்ப் பாடிப் பெண்டிரில் விடியற்காலையில் முன்னே எழுந்தவர்கள் உறங்கிக் கொண்டிருக்கும் மற்ற வீட்டுப் பெண்களையெல்லாம் அவர்கள் வீட்டு வாசலுக்குச் சென்று முறையாகப் பொழுது விடிந்ததற்குரிய அடையாளங்களை எடுத்துச் சொல்லி எழுப்புவ தாக அமைந்த பாடல்கள்.

இப்பாசுரங்களில் விடிகாலை வேளையில் எழும் பல்வகை ஒலிகளும், இயற்கையெழில்களும் வருணிக்கப்பட்டிருக்கும் அழகு

நெஞ்சைக் கொள்ளை கொள்ளும். மேலும் இப்பத்துப் பாடல் களும் வினாவிடைகளாகவும் காணப்படுகின்றன.

## புள்ளும் சிலம்பினகாண்

ஆற்றின் பெரிய வெள்ளப் பெருக்கில்—இறங்கி நீராட விரும்புபவர்கள் துணையை நாடுவது போல கண்ணனாகிற ஆழமான பொய்கையில் தோய்ந்து அனுபவிக்க ஆசைப்படும் பெண்கள் ஒருவரையொருவர் எழுப்பிக் கொண்டு கூட்டமாகக் கண்ணன் திருமாளிகைக்குச் செல்லுகிறார்கள். கிருட்டின (கிருஷ்ண) குணங்களில் ஈடுபட்ட பெண்களில் சிலர் முந்துற முன்னம் விழித்துக் கொண்டார்கள். அப்படிப்பட்டவர்கள் பொழுது விடிந்தமையையும் அறியாமல் படுத்துறங்கும் மற்றொருத்தியின் வீட்டு வாசலிலே சென்று பொழுது விடிந்ததற்குரிய அடையாளங்களைச் சொல்லி அவளை எழுப்புகிறார்கள். பெண்ணே! பறவைகளெல்லாம் விடிகாலையில் கூவுகின்றனவே; உன்காதில் விழவில்லையோ என்று புள்ளும் சிலம்பினகாண் என் கிறார்கள். பின்பு சங்கு ஊதுகிறார்களே அந்தப் பேரோசையும் உன் காதில் விழவில்லையோ என்று கேட்கிறார்கள். ''வெள்ளை விளி சங்கின் பேரரவம் கேட்டிலையோ?'' என கூறுகிறார்கள். கடைசியில்.' பிள்ளாய் எழுந்திராய்' என்று எழுப்புவதாகப் பாசுரம் முடிவடைகின்றது. இந்த அடையாளங்களையெல்லாம் மறுத்துரைத்தாள் உள்ளே படுத்திருப்பவள். எப்படியோ அவளையும் சமாதானம் செய்து எழுப்பி அழைத்துச் செல்கிறார்கள்

இனி மற்றொருத்தியின் வீட்டு வாசலிலோ நடக்கும் உரையாடலைக் காண்போம். அங்கே கிருட்டின பக்தியின் மயக்கத்தினால் ஒருத்தி மெய்மறந்து கிடக்கிறாள். அங்கே கோபியர் சென்று அவளையும் எழுப்புகிறார்கள். கீச்கீச் (கீசுகீசு) என்று பறவைகள் ஒலிக்கும் ஒலிகள்-அவை தம்முள் கலந்து பேசும் பேச்சுக்கள் உன் காதில் விழவில்லையோ? காலை வேளையில் நாராயணனான அக்கண்ணனைப் பாட எங்களுடன் எழுந்து வா என்று அழைக்கிறார்கள். ஒருவாறு இசைந்து அப்பெண்ணும் எழுந்து வந்து இவர்களுடன் சேர்ந்து கொண்டாள்.

இவ்விதமே கிழக்கு வெளுத்தது, எருமைகள் சிறுவீட்டில் (புழக்கடைத் தோட்டத்தில்) மேயப் புறப்பட்டு விட்டன, என்றும் இக்காட்சியைக் கண்ட பிறகாவது பொழுது விடிந்ததை உணர மாட்டாயா? என்றும், பொழுது விடிந்தமைக்குரிய பல

அடையாளங்களைத் திருவாய்ப் பாடிப் பெண்கள் மனை தோறும்சென்று கூறி எழுப்பிய போதிலும், சில பெண்கள் எழுந்திராமையைக் கண்டும், விடாமல் சற்று நயமான வார்த்தைகளாலும், உறவு முறை கொண்டாடியும் எழுப்புகிறார்கள் அப்பெண்களை இவ்வாறு எழுப்பும் பொழுது 'பாவாய்' என்றும், 'அருங்கலமே' என்றும், 'தங்காய்' என்றும், 'மாமன் மகளே' என்றும், 'அம்மனா,' கோவலர் பொற்கொடியே' என்றும் அழைப்பதும் பொருள் பொதிந்த ஒன்றாகும். இங்கே இப்படிப் பலரையும் எழுப்பிக் கொண்டுதான் கண்ணன் மாளிகைக்குச் செல்ல வேண்டுமா? என்று கேள்வி பிறக்கிறது. அதற்குப் பெரியோர்கள் கூறும் பதில் பின்வருமாறு: உயர்ந்த எந்த ஒரு இனிய பொருளையும் தனியாகத் தான் மட்டும் உண்ணக் கூடாது என்றும், பலருக்கும் பகிர்ந்தளித்து உண்ண வேண்டும் என்றும் ஒரு தரும நெறி உள்ளது. இங்கு உயர்ந்த பரம் பொருளான கண்ணனைச் சிலர் மாத்திரம் கிட்டியனுபவித்துப் பேறு பெற்றால் போதாது. உலகத்தார் அனைவரும் அவனை யடைந்து பெரும் பேற்றை அடைய வேண்டும் என்ற பரந்த மனப்பான்மையால் பனி பாராமல், குளிர் பாராமல் உள்ளே படுத்துறங்குபவர்கள் அனைவரையும் எழுப்பிக் கொள்கிறார்கள் என்பது கருத்து. இதனால் ஆண்டாளுடைய திருவுள்ளம் எல்லாரும் வாழ்ச்சி பெற வேண்டுமென்று எண்ணுகிறது என்பதனைக் காணலாம்.

## எல்லே இளங்கிளியே

''எல்லே இளங்கிளியே' என்ற திருப்பாவையின் பதினைந்தாவது பாடலை மிக முக்கியமாகக் கருதுவர்கள் பக்தர்கள். ஒருவன் தான் குற்றம் செய்யாதிருந்த போதும், பிறர் 'நீ குற்றம் செய்தாய்' என்று கூறுவரேல் மறுத்துக் கூறாமல் அக்குற்றத்தையும் ஏற்றுக் கொள்பவனே உயர்ந்த பாகவதனாவான் என்று நூல்கள் கூறுகின்றன. அந்த வகையில் இப்பாட்டில் இளங்கிளியே என்று உள்ளே படுத்திருப்பவளை வெளியில் இருப்பவர்கள் விளித்து எழுப்புவதும், கிருட்டின பக்தியில் மூழ்கியிருக்கும் உள்ளிருப்பவளுக்கு இவர்கள் கூப்பிடும் இனிய சொல்லும் தடங்கலாய் இருந்ததால் அவள் சில் (சிலுகு சிலுகு) என்று என்னை அழைக்காதீர்கள்; நங்கைமீர் இதோ வருகிறேன் என்று பதில் சொல்வதும், வெளியில் இருப்பவர்கள் பெண்ணே உன் பேச்சுத்திறனை முன்பே நாங்கள் அறிவோம் என்று சொல்ல, அதைக் கேட்டு உள்ளே இருப்பவள், பேச்சில் நீங்களே வல்லவர்கள் என்று பதில்

சொல்லிப் பிறகு சிந்தித்து 'நானே தான் ஆயிடுக' என்று அவர்கள் சொன்னபடி குற்றத்தை ஏற்றுக் கொண்டாள். பின்பு உள்ளே உனக்கென்ன தனி!யனுபவம் விரைந்து எழுந்துவா என்று கூற, அவள் எல்லோரும் வந்து விட்டார்களா? என்று வினவ, வந்து விட்டார்கள்; நீ வேண்டுமானால் எழுந்து வந்து எண்ணிக் கொள் என்று இவர்கள் சொல்ல, முடிவில் உள்ளே படுத்திருந்தவளும் கோபியராகிய இவர்களோடு வந்து சேர்ந்து கொண்டு பங்கயக்கண்ணன் பெருமையைப் பாடலானாள். இப்பாசுரம் நீண்ட ஒரு வாக்கு வாதப் பாசுரமாக அமைந் திருந்தாலும் பாசுரத்தின் உட்பொருள் சிறப்புடைத்து. 'நானே தான் ஆயிடுக' என்று குற்றத்தை ஒத்துக் கொள்ளும் நிலையில் கிளிமொழியாள் பேசுகிறாள் அல்லவா? இதில் வைணவ லட்சணம் குறிக்கப்படுகிறது எனக் கூறுவதுண்டு.

## நேச நிலைக்கதவம் நீக்கு

ஆய்ப்பாடிப் பெண்டிரெல்லாம் திரண்டு நந்தகோபர் திருமாளிகைக்குப் போகிறார்கள். அங்கே கோயில் காப்பானையும் வாயில் காப்பானையும் நோக்கி வாசல் திறக்க வேணும் என்று வேண்டிக் கொள்கிறார்கள்.

காவலரும் இவர்களுடைய தோற்றத்தைக் கண்டு இவர்களால் கண்ணனுக்கு ஆபத்து இல்லை என்று அறிந்து உள்ளே செல்ல அனுமதிக்கிறார்கள். ஆனால் வாயால் பேசி அனுமதிக்கவில்லை, கண்ணால் குறிப்பாக சாடை காட்டி அனுமதிக்கிறார்கள். அதற்கு இந்தக் கண்ணன் மாளிகைக்கதவும் உங்களைக் காட்டிலும் எசமானனான கண்ணனிடத்திலே மிக்க பரிவுடையவை. ஆதலால் நீங்களே திறந்து எங்களை உள்ளே போக விடுங்கள் என்ற கருத்தில் 'நேச நிலைக்கதவம் நீக்கு' என்று வேண்டினார்கள். தூய்மையாக வந்த பெண்களுக்குக் கதவு திறக்கப்படுகிறது என்று சொல்லவும் வேண்டுமோ?

அடுத்து அம்பரமே, தண்ணீரே, சோறே அறம் செய்யும் என்ற பாட்டில் தந்தையும், தாயும், அண்ணனும், தம்பியுமாகிய நால்வர் எழுப்பப் படுகின்றனர். எப்பெருமான் நந்தகோபாலா எழுந்திராய் என்றும் குலவிளக்கே எம்பெருமாட்டி யசோதாய் என்றும், உம்பர் கோமானே என்றும் செல்வா பல தேவா என்றும் இப்பாட்டில் நால்வரும் விளிக்கப்பட்டுள்ளார்கள்.

## வளை ஒலிக்க வந்து திறவாய்

திருப்பாவை பதினெட்டாவது பாசுரம் இராமானுசர் மிகவும் உகந்த பாசுரம். இராமானுசர் துறவியானதால் பல இடங்களில் பிட்சையேற்று அமுது செய்வார். பிட்சைக்கு எழுந்தருளும் போது திருப்பாவைப் பாசுரங்களைச் சொல்லிக் கொண்டு போவது வழக்கம். ஒரு நாள் குருவான பெரிய நம்பி திருமாளிகை வாசலில் திருப்பாவைப் பாடலை ஓதிக்கொண்டு பிட்சைக்கு நின்றார். அப்போது நம்பி திருமாளிகையின் வாசற் கதவு திறக்க வில்லை. உள்ளே நம்பியின் குமாரத்தியான அழகே வடிவான அத்துழாய் என்னும் பெண் இராமானுசர் குரலைக் கேட்டு விரைந்து வந்து கதவைத் திறந்தாள். கைகளில் வளையல்கள் ஒலிக்கக் கதவைத் திறந்த அத்துழாயை இராமானுசர் ஒரு கணம் நோக்கினார். உடனே மூர்ச்சித்து விழுந்து விட்டார். அத்துழாயோ செய்வதறியாது திகைத்து உள்ளே விரைந்தோடிச் சென்று, தந்தையான பெரிய நம்பிகளிடம் 'ஐயோ! நான் இராமானுசருக்காக வாயிற்கதவைத் திறந்தேன், என்னைக் கண்டவுடனே என் காலில் விழுந்து சீயர் (இராமானுசர்) மூர்ச்சித்தார் என்றாள். பெரிய நம்பிகள் கலங்கவில்லை; அவருக்குப் புரிந்து விட்டது. ஓகோ! 'உந்து மதகளிற்றன் பாசுரம் ஓதப் பெற்றிருக்க வேணும்' என்றார். அத்துழாய்க்கு விளங்க வில்லை. அவளுக்கு விளங்கும் படியாக நம்பி கூறினார். பெண்ணே நீ போய்க் கதவைத் திறந்ததும், உன்னை அவர் நப்பின்னைப் பிராட்டியாகவே கருதிவிட்டார். நீ சென்று திறந்த போது அவர் 'செந்தாமரைக்கையால் சீரார் வளையொலிப்ப வந்து திறவாய்' என்ற திருப்பாவை வரிகளை இசைத்துக் கொண்டிருந்தார் போலும். வளைகள் குலுங்க நீ கதவைத் திறந்ததும் நப்பின்னை யாகவே உன்னை அவர் உணர்ந்து மூர்ச்சித்திருப்பர் என்று ஆறுதல் சொன்னார், இத்தருணத்தில் மூர்ச்சை தெளிந்து இராமானுசர் நம்பிகளின் அருகே வந்து வணங்கி நின்றாராம். நப்பின்னைப் பிராட்டியை எழுப்பும் இக்கருத்தமைந்த திருப்பாவைப் பாடலின் முழுவடிவத்தைக் காண்போம்.

> உந்து மதகளிற்றன் ஓடாத தோள் வலியன்
> நந்த கோபாலன் மருமகளே! நப்பின்னாய்!
> கந்தம் கமழும் குழலீ! கடை திறவாய்
> வந்து எங்கும் கோழி அழைத்தனகாண்; மாதவிப்
> பந்தல் மேல் பல்கால் குயில் இனங்கள் கூவினகாண்
> பந்தார் விரலி! உன்மைத்துனன் பேர்பாட,

செந்தாமரைக் கையால் சீரார் வளை ஒலிப்ப
வந்து திறவாய் மகிழ்ந்தேலோ ரெம்பாவாய்.

குத்து விளக்கு என்ற பாடலில் குழலழகும், கண்ணழகும் ஒருங்கே வாய்க்கப்பெற்ற நப்பின்னைப் பிராட்டியிடம், கண்ணனுக்குத் தங்கள் மேல் கருணை வரும்படிப் பரிந்துரைக்க வேண்டிக் கொள்கிறார்கள் (புருடகாரம் செய்து உதவக் கேட்டுக் கொள்கிறார்கள்) பிராட்டியின் சொரூபமும் சுபாவமும் இப்பாட்டில் நினைவுபடுத்தப் படுகின்றன. அடியார்களான பக்தர்களுக்கு ஒரு துன்பம் வந்தால் பிராட்டி பொறுக்க மாட்டாள். உடனே பர்த்தாவான பெருமானிடம் அபசாரப் பட்டு, அறியாமையால் தொல்லைகளைச் செய்த இந்த சீவனைக் காப்பாற்றியே ஆகவேண்டும் என்று வற்புறுத்திப் பரிந்துரை செய்வாள். ஆய்ப்பெண்டிர் பாவனையில், ஆண்டாள் பிராட்டியை முன்னிட்டு கண்ணனைப் பற்றுகிறாள். இவ்விதம் வரிசை முறையில் நந்தகோபாலரையும், யசோதையையும், கண்ணனையும், பலராமரையும் எழுப்பித் தங்கள், மனோரதங் களைத் தெரிவித்தார்கள் **ஆய்ச்சியர்கள்.**

முப்பத்து மூவர் என்ற பாட்டில் தாங்கள் மேற்கொண்டுள்ள நோன்பினுக்கு வேண்டிய கருவிகளை (உபகரணங்களை) யெல்லாம் கொடுத்தருளி "உன் மணாளனையும் எங்களையும் நீராட்டுவிக்க வேண்டும்" என்று வேண்டுகின்றனர். 'உக்கமும் தட்டொளியும் தந்து உன் மணாளனை இப்போதே எம்மை நீராட்டு' என்று பாடல் முடிகின்றது (உக்கம்-விசிறி; ஆலவட்டம். தட்டொளி-கண்ணாடி).

## ஏற்ற கலங்கள் எதிர் பொங்கி மீதளிப்ப

கண்ணபிரான் வீரத்தைச் சொல்லி ஏத்தும் பாசுரமிது. திருவாய்ப்பாடிப் பசுக்களின் முலைக்காம்பை ஒரு கால் தொட்டு விட்டால் போதும், பலகலங்கள் நிறைந்து பால் வழிந்தோடும். எதிர்பொங்கி மீதளிக்கும். அப்படிப்பட்ட ஆநிரைச் செல்வத்தை யுடையவராம் நந்தகோபர். அவர் தம் மகனான கண்ணனை இவ்வாய்ப் பெண்கள் எழுப்புகிறார்கள்—கண்ணா உன் செல்வத்தைப் பார்த்தால் அச்செல்வச் செருக்காலே நீ விடி காலையில் கண் விழித்தெழுந்திருக்க விதி இல்லை. ஆனால் எங்கள் குடியில் வந்து பிறந்து எளிமையைக் காட்ட விரும்பினா யாகில் விரைந்து எழுந்து வந்து எங்களுடைய எண்ணங்களை நிறைவேற்ற வழி உண்டு என்கிறார்கள். மேலும் நாங்கள் வேறு

புகலற்று உன் வாசலில் வந்துள்ளோம் என்பதனை 'வலி தொலைந்துன் வாசற்கண் யாம் வந்தோம் என்பதனால் தெரிவிக்கிறார்கள். பகைவர்கள் உன்னுடையஅம்புக்குத் தோற்று வந்து சரணடைவது போல், நாங்கள் உன்னுடைய அழகுக்கும் எளிமையுமாகிய குணங்களுக்கும் தோற்று வந்தோம் என்பதனை 'யாம் வந்தோம்' என்பதனால் உணர்த்தினார்கள்.

இப்படி ஆயர்பாடிச் சிறுமியர் கண்ணனை அழைத்தபோது அவன் வேகமாக வந்து இவர்களைக் கடாட்சிக்க முற்பட்டான் (அருள் விழைந்தான்) போலும். அவனுடைய அருளொளியை இவர்கள் தாங்க மாட்டாமல் இப்படிப் பூர்ணமாக (முழுமையாக) எங்களை கடாட்சம் செய்து விட்டால் எங்களால் தாங்க முடியாதே! என்கிறார்கள். இதனை 'அங்கண்மாஞாலம்' என்று தொடங்கும் பாடலின் 'செங்கண் சிறிச்சிறிதே எம்மேல் விழியாவோ?' என்ற வரிகள் இயம்புகின்றன.

## சிங்கம் வருவது போல் வா

சிங்கம் கம்பீரமாகப் புறப்பட்டு வருவது போல் யசோதை இளஞ்சிங்கமான கண்ணனும் புறப்பட்டு வரவேண்டும் என்று விரும்புகிறார்கள். அப்படி வந்து சிங்காசனத்தில் ஒரு சிங்கமாக வீற்றிருந்து பலர் முன்னிலையில் நாங்கள் வந்த காரியத்தை விசாரிக்க வேண்டும் என்கிறார்கள் இப்பெண்கள். கண்ணா! படுத்தபடியே ஏன் வந்தீர்கள் என்று எங்களைக் கேட்டால் போதாது. நீ அந்த படுக்கை அறையிலிருந்து கேட்டு, நாங்களும் வந்த காரியத்தைச் சொன்னால் அது படுக்கை அறை வார்த்தை யாகி ஒருக்கால் பலிக்காமல் போனாலும் போகும். அப்படி யில்லாமல் பலரறிய கோப்புடைய சீரிய சிங்காசனத்தில் அமர்ந்து திருமேனி நிமிர்ந்து கம்பீரமாக எங்களைப் பார்த்துக் கேட்டால் நாங்கள் வந்த காரியத்தை சொல்லுவோம் என்ற பொருளில் மாரி மழை முழஞ்சில் என்னும் பாட்டில் வரிகள் அமைந் துள்ளன. இதில் எம்பெருமான் கண்ணனின் நடையழகை இவர்கள் காண ஆசைப்பட்டது விளங்கும்.

## நடையழகும் வடிவழகும்

இப்படிப் பெண்கள் அழைத்தவுடனே கண்ணனும் தன்னுடைய படுக்கையை விட்டு எழுந்து இவர்களைக் காண நாலடி நடந்தான். அப்படி நடந்துவரும் கண்ணனின் நடை யழகையும் வடிவழகையும் கண்ட பெண்கள் தங்கள் எண்ணங்

களையெல்லாம் மறந்தவர்களாய் இப்படி இக்கண்ணனைத் தன் பாத மலர்கள் சிவக்க நடக்கச் செய்தோமே! என்று அஞ்சி அலறி அவன் திருவடிகளுக்குப் பல்லாண்டு பாடுகிறார்கள். உலகமளந்த அந்த மென்மையான திருவடிக்கும், இலங்கை நோக்கி நடந்த அந்த பாத கமலங்களுக்கும், சகடாசுரனை உதைத்தழித்த பொன்னடிகளுக்கும். கன்றுகுணிலா எறிந்த கழல்களுக்கும், குன்றைக் குடையாகப் பிடித்து ஆனிரைகளையும், ஆயர்களையும் காத்த பெருங்குணத்துக்கும் அழகுக்கு அழகு செய்தாப்போலே நின் கையில் பற்றி நிற்கும் வேலுக்கும் ''போற்றி'' என்று, அறுசுவையுணவுபோல ஆறுவிதமான போற்றுதல்களைக் கூறியுள்ள சிறப்பான இப்பாடலை மங்களாசாசனப்பாட்டு (போற்றிப்பாட்டு) என்பர். அவன் வெற்றியையும் வீரத்தையும் இப்படிப் போற்றியபின் பெண்கள் தாங்கள் வந்த காரியத்தை நினைத்துக் கொள்கிறார்கள்.

## ஒருத்தி மகனாய்ப் பிறந்து

செயற்கரும் செயல்களையெல்லாம் மிகவும் எளிதாகச் செய்து முடிக்க வல்லவன் கண்ணன் என்பதனை இப்பாட்டில் கூறி, உன்னை அருத்தித்து வந்தோம் கண்ணா என்கிறார்கள்! வடிவழகையும் நடையழகையும் அனுபவித்துக் களித்த பெண்கள் நாங்கள் வந்த காரியம் ஒன்றுண்டு என்பதனை அவனுக்குத் தெரிவிக்கிறார்கள். நோன்பினுக்குப் பறை என்னும் கருவி வேண்டி வந்தோம் என்கிறார்கள். இந்த 'பறை' என்ற சொல்லில் மறை பொருளாக ஒன்று இருப்பினும் அதை வெளிக்காட்டாமல் 'திருத்தக்க செல்வமும் சேவகமும் யாம் படி' என்று கூறுகிறார்கள். இதன் நோக்கம் கண்ணன் பெருமையையும் செல்வத்தையும், வீரத்தையும் பாடி வேறு ஒரு பொருளை பெறுவதைக் காட்டிலும் அக்கண்ணனைப் பெறுவதே தங்கள் உள்நோக்கமாக உள்ளது என்பதனையும் குறிப்பாகக் காட்டியுள்ளார்கள்.

## மாலே மணிவண்ணா

இப்பாட்டில் தங்கள் பால் அவனுக்கு மோகம் மிகுதியாகத் தோன்ற அவனை 'மாலே' என்று அழைக்கிறார்கள். அவனுடைய செயற்கருஞ்செயல்களையெல்லாம் உள்ளடக்கியும் மாலே என்கிறார்கள். அதற்கும் மேலாகத் தங்களுக்கு மிகவும் எளியனாக இருக்கிறான் என்பதனை மணிவண்ணா என்ற சொல்லால் அழைத்துக் காட்டுகிறார்கள். இதற்கு முன் நாராயணன், பரமன், தேவாதிதேவன் என்றெல்லாம் அழைத்த

வர்கள், இப்பொழுது கண்ணன் கிட்டி வந்தபொழுது அப்பரத்துவம் (மேன்மை) பொலியநின்ற பெயர்களை விலக்கி, எளிமை தோன்றவும், அவன் காதலுணர்வு வெளிப்படவும் மணி வண்ணா என்று அழைப்பதில் நயம் உள்ளது. உடனே உங்களுக்கு என்ன வேண்டும்? என்று கண்ணன் கேட்டவுடனே இவர்கள் 'மார்கழி நீராடுவான் வந்தோம்' என்று கூறினார்கள். மார்கழி நோன்புக்காக வந்தோம் என்ற உடனே அக்கண்ணன், இதென்ன புதிய சொல்லாயிருக்கிறதே? மார்கழி நோன்பா, நான் கேட்டதில்லையே? என்று சொல்ல, இது பண்டைய தமிழர் வழக்கில் உள்ளதுதான். புதிதல்ல என்று சொல்லி ''மேலையார் செய்வனகள்'' என்ற சான்றைக் கோபியர் சுட்டிக் காட்டினார்கள். அந்நோன்புக்குக் கருவிகளாக நல்ல சங்குகள் வேண்டும், பற்றார் நடுங்க ஒலிக்கும் உன்னுடைய பஞ்ச சன்னியம் போன்ற சங்கம் வேண்டும் என்றார்கள். பிறகு பறை, கொடி, விளக்கு விதானம், பாடுவார் என்று இப்படிப் பல பொருட்களைப் பட்டியல் போட்டு இப்பெண்கள் கேட்டார்கள். (இப்பாட்டுக்கு வைணவ மரபில் உட்பொருளை உரையாசிரியரான பெரியவாச்சான் பிள்ளை கூறியுள்ளார்).

கண்ணன், பெண்களே, முதலில் 'பறை' என்ற ஒன்றை மட்டும் கேட்டீர்கள். இப்பொழுது பல பொருட்களைக் கேட்கிறீர்களே; இவற்றை எல்லாம் என்னால் கொடுக்க முடியுமா? என்று கேட்டான். 'அதற்கு இவர்கள்! 'ஆலின் இலையாய் அருள்' என்றார்கள். மகாப்பிரளயமாகிய ஊழிக்காலத்தில் உலகங்களையெல்லாம் தன் வயிற்றினுள் அடக்கி ஒரு சிறிய ஆலந்தளிரில் படுத்து உறங்கவல்ல சாமர்த்தியம் கொண்ட உனக்கு ஆகாதது ஒன்று உண்டோ? நாங்கள் கேட்டதத்தனையும் நீ கொடுப்பாய்; மேலும் பல கொடுப்பாய் என்ற பொருளில் 'ஆலின் இலையாய் அருள்' என்றார்கள்.

## கூடாரை வெல்லும் சீர்கோவிந்தா

இதுவரை பெண்கள் நெய்யுண்ணாமலும், பாலுண்ணாமலும் தங்கள் கண்களுக்கு மைதீட்டி அலங்காரம் செய்து கொள்ளாமலும் மார்கழி நோன்பு நோற்றார்கள். விடியும் முன்பே பனிபாராமல் எழுந்தார்கள். இருள் பாராமல் பலர் வீட்டு வாயிலிலும் சென்று உறங்கும் பெண்களை எழுப்பினார்கள். இப்படிப்பட்ட வருத்தங்கள் எல்லாம் தீர்ந்து தாங்கள் மகிழ, அக்கண்ணனிடம் இன்று ஒன்றை வேண்டுகிறார்கள் இப்பாட்டில். கண்ணனும் நப்பின்னையும் சேர்ந்து

இவர்களை அலங்கரிக்க வேண்டுமாம். நெய்பெய்து அட்டியபால் சோற்றினை அவர்கள் உண்பிக்க, தாங்கள் உண்ணவேண்டுமாம். கூடி இருந்து குளிர வேண்டுமாம். உன்னைக் கூடுவோம் என்பவர்களுக்கு (பக்தர்களுக்கு) நீ தோற்றுப்போவாய்; கூடாதவரான பகைவர்களைக் கொன்று வெற்றி பெறுவாய் என்று அவனைக் கோவிந்தா என்ற உயர்ந்த சொல்லாலே அழைக்கிறார்கள். இப்பாட்டில் இந்த கோவிந்த நாமாவில் இறைவனுடைய சீலமும் எளிமையும் வெளியிடப்படுகிறது. மேலும் இவ்வாய்ச்சியர் சன்மானம் கேட்கிறார்கள். இப்பெண்கள் தங்களுக்கு எளியனான இறைவனை வென்று விட்டார்கள். இவர்களுடைய அன்புக்கும் அழகுக்கும் கண்ணன் தோற்றுப் போனான். தோற்றவர் வென்றவர்களுக்குப் பகுமானம் செய்ய வேண்டாமா? ஆதலால் 'யாம் பெறும் சன்மானம்' என்று மிகவும் கம்பீரமாய்க் கேட்கிறார்கள்.

இதுவரை அணிமணிகளையும் அழகையும் துறந்து நோற்ற பெண்கள், இப்போது நோன்பு முடியும் தறுவாயில் பல அணிகளை வேண்டுகிறார்கள். 'சூடகமே, தோள் வளையே, தோடே செவிப்பூவே, பாடகமே என்று பல்கனும் யாம் அணிவோம் என்று பல ஆபரணங்களைக் கேட்கிறார்கள். பின் ஆடையுடுப்போம்' என்கிறார்கள். அதன் பின்பே "பால்சோறு மூட நெய் பெய்து முழங்கை வழிவார கூடியிருந்து குளிர்ந்து" என்று சர்க்கரைப் பொங்கலாகிய க்ஷீரான்னத்தை (பால் சோற்றை) உண்ணவேணும் என்று கேட்கிறார்கள். அதுவும் அவனும் தங்களுமாய்க் கூடிக் குளிர்ந்து உண்ணவேண்டும் என்கிறார்கள். ஆனால் பாட்டில் "உண்போம்" என்ற சொல் இல்லை. வருவித்துக் கொள்ள வேண்டும். உண்மையில் இவர்களுக்கு உண்பதில் நாட்டமில்லை. கூடிக்களிப்பதுதான் இந்த விருந்தில் முக்கியமாகக் கருதப்படுகிறது. கண்ணனைக் கண்டு அவனோடே கூடினாலே இவர்கள் பசியும் தாபமும் நீங்கிப் போம். அதற்கு மேலும் உணவு வேண்டுமோ! என்பது கருத்து

### கறவைகள் பின்சென்று

ஆய்ப்பாடிப் பெண்கள் கேட்ட இந்த நோன்புக்குரிய கருவிகளையும், அவர்கள் விரும்பியபடி ஆடை ஆபரணங்களையும் கூடிக்குளிர்ந்து உண்ணுகையையும் இன்னும் பலவற்றையும் கூடக் கண்ணன் கொடுப்பதற்கு இசைந்தான். ஆனால் இப்பெண்கள் இது செய்தார்கள், கண்ணன் இதைக் கொடுத்தான் என்று உலகோர் சொல்லும்படி, நீங்கள் என்ன உபாயம்

அல்லது சாதனம் செய்தீர்கள்? ஏதாவது உண்டா? என்று ஒரு கேள்வி கேட்டுவிட்டான். அதற்குப் பதிலாகத்தான் ''கறவைகள் பின்சென்று'' என்ற இப்பாசுரத்தை இவர்கள் பாடித் தெரிவித்தார்கள்.

முதலில் ''அறிவொன்றுமில்லாதவர்கள் நாங்கள்!'' என்று தங்கள் அறியாமையைத் தெரிவித்துக் கொண்டார்கள். எனவே இவர்கள் ஞானயோகத்தைப் பற்ற மூடியாதவர்கள் என்று தெரிந்தது. அடுத்து பசுக்களின் பின்னே சென்று வயிறுவளர்க்கும் எங்களிடம், ஒரு நற்செயலுமில்லை என்று தெரிவித்து விட்டார்கள். ஆதலால் நற்கருமங்களைச் செய்வதாகிய கர்மயோகமும் இவர்களிடம் இல்லை என்பது தெளிவாயிற்று. பக்தியோகம் செய்வதற்கு நிரம்ப நூல்களைப் படித்து நல்லவைகளைக் கடைப் பிடித்து மனனம் செய்து—அதன்படி ஒழுகி, பல காரியங்களையும் செய்ய வேண்டும். இவைகளையெல்லாம் இந்த ஆய்ப்பாடிப் பெண்கள் செய்ய வல்லவர்களா? நீயே எண்ணிப் பார்க்க வேண்டும் என்று இவர்கள் கண்ணனிடம் முறையிட்டார்கள். மறுபடியும் உங்களிடம் கூறிக்கொள்ள ஒன்றுமே இல்லையா என்று கேட்டபொழுது 'உன்தன்னைப் பிறவி பெறுந்தனை புண்ணியம் யாமுடையோம்' என்றார்கள். அவனோடு உறவு முறையை அறிந்து இவர்கள் உரிமை கொண்டாடினார்கள். இங்கு உறவு, அவன் இவர்கள் குலத்தில் பிறந்த சரீர உறவை அல்ல; ஆன்ம உறவையே குறிப்பிடுகிறார்கள். அதாவது உன்னைப் பெற்றெடுத்த குலத்தில் பிறந்து, உன்னுடன் ஆன்ம உறவு கொள்ள நீயேதான் புண்ணியம் ஆக எங்களுக்கு உண்டு என்பதை இவர்கள் துணிவோடு கூறி வெற்றி கொள்கிறார்கள். ஸாக்ஷாத் புண்ணிய ஸ்வரூபியான கண்ணனுக்குத் தயிரும், வெண்ணெயும், பாலும், அன்பும் ஊட்டியல்லவா கண்ணனாகிய புண்ணியத்தை இவர்கள் வளர்த்துள்ளார்கள். இந்த ஆன்ம உறவு யாராலும் ஒழிக்க ஒண்ணாதது. 'உறவேல் நமக்கு இங்கு ஒழிக்க ஒழியாது' என்று அழுத்தம் திருத்தமாக இவர்கள் கூறுகிறார்கள். மேலும் இப்பாட்டில் தாங்கள் பிழைசெய் திருக்கக் கூடும் என்று எண்ணி அதனால் எங்கள் மேல் கோபித்துச் சீறாமல் அருளவேண்டும் என்பதனைச் ''சீறி அருளாதே இறைவா நீ தாராய் பறை'' என்று வேண்டிக் கொள்கிறார்கள். இனி இதுவரை விடாமல் பறை பறை என்று இவர்கள் கேட்ட அப்பறையின் பொருளை அடுத்த பாட்டில் வெளியிடுகிறார்கள்.

## சிற்றம் சிறுகாலே

ஊராருக்காக நோன்பு என்ற ஒன்றை வியாஜமாகக்கொண்டு கண்ணனை வந்தடைந்த பெண்கள், உண்மையில் அக்கண்ணன் திருவடித் தாமரைகளில் தொண்டாகிற கைங்கர்யத்தை எப்பொழுதும் செய்ய விரும்புகிறார்கள். மேலும் 'இனி ஒரு நொடிப் பொழுதும் உன்னை விட்டு நாங்கள் பிரிய மாட்டோம்; வேறு வகையான விருப்பமும் எங்களுக்குப் பிறவா வண்ணம் நீயே அருள் புரிய வேணும்'' என்றும் இப்பாட்டில் வேண்டி அவன் காலில் விழுந்து பணிகிறார்கள். இனி பாட்டின் வரியடைவே பொருள் காண்போம். சிற்றம் சிறுகாலே என்று தொடங்குகிறது இப்பாட்டு. சிறு பிள்ளைகளாகிய நாங்கள் காலையில் வரவில்லை. சிற்றஞ்சிறுகாலை என்று சொல்லத்தக்க அதிகாலை வேளையிலே எழுந்து, பனியைப் பாராமல் குளிரைப் பாராமல் வந்திருக்கிறோம். இதிலிருந்தே எங்கள் மனநிலையை நீ தெரிந்து கொள்ளலாம் என்று குறிப்பாகச் சொல்லுகிறார்கள்.

மாடுமேய்க்கும் இந்த இடைக்குலத்தில் நீ வந்து பிறந்ததற்கு ஒரு பயன் வேண்டாவோ? எங்களிடத்தில் நீ கைங்கர்யம் கொள்ள வில்லையானால் (தொண்டை ஏற்காமற் போனால்) உன்னுடைய இவ்வாய்க்குலப் பிறவி பயனற்றதன்றோ? என்று கூறுகிறார்கள்.

பெற்றம் மேய்த்து உண்ணும்
குலத்தில் பிறந்து நீ
குற்றேவல் எங்களைக்
கொள்ளாமல் போகாது!

அரசர்க்கரசனும் தேவாதிதேவனுமான பரம்பொருள் மாடு மேய்க்கும் குலத்தில் பிறந்திருக்கிறான் என்றால் அதன் பயன் தன் எளிமையைப் புலப்படுத்தும் முறையில் தங்களை ஆட் கொள்வதுதான் என்கிறார்கள்.

இப்படித் தங்களைக் குற்றேவல் கொள்ள வேணும் என்று வேண்டின ஆய்ச்சியரை நோக்கிக் கண்ணபிரான், 'பெண்காள்! உங்கள் வேண்டுகோளை யான் ஏற்கிறேன்; ஆயினும் நீங்கள் மார்கழி நீராட்டத்திற்குப் பயன்படும் வகையில் விரும்பிக் கேட்ட 'பறையை' இப்பொழுது தருகிறேன், கொண்டு செல்லுங்கள் என்று ஒரு பெரிய இசைக்கருவியாகிய பறையைக் கொண்டு வந்தான். அதுகண்ட ஆய்ச்சிகள், கண்ணா! எங்கள்

கருத்தையறியாமல் செய்கிறாயே, இந்தப் பறையையா நாங்கள் கேட்டோம். எங்கள் உட்கருத்தைப் புரிந்து கொள்ள வேண்டாமா? என்று சொல்லி இறைஞ்சுகிறார்கள்! 'இற்றைப் பறை கொள்வான் அன்றுகாண் கோவிந்தா' என்று அவன் கொடுக்க வந்த பறையை ஏற்க மறுக்கிறார்கள்.

அப்படியானால் நீங்கள் விரும்பும் பறைதான் எது என்று கண்ணன் கேட்க, ஆய்ச்சியர்கள் பதில் கூறுகிறார்கள். கண்ணா! உன்னிடம் நாங்கள் யாசிப்பது உன்னையே தவிர வேறு ஒரு பொருள் இல்லை! நாங்கள் விரும்புகிற பறை 'உனக்கு நாங்கள் ஆட்செய்ய வேண்டும்' என்பதுதான் என்றார்கள். 'உனக்கே நாம் ஆட்செய்வோம்' என்று ஐயம் திரிபு இல்லாமல் பேசுகிறார்கள்.

'உன்தன்னோடு உற்றோமே யாவோம்' என்று அந்த உறவை உறுதிப்படுத்திக் கொள்கிறார்கள் மேலும் இந்த இப்பிறவியில் மாத்திரமல்ல; 'எற்றைக்கும் ஏழேழ் பிறவிக்கும் உன்தன்னோடு உற்றோமே யாவோம்; உனக்கே நாம் ஆட்செய்வோம்' என்று எம்பெருமானுடைய பிறவிகள் தோறும் தாங்களும் பிறந்து ஆட் செய்ய—அடிமைத் தொண்டாற்ற விழைகிறார்கள். வேறு ஒரு பயன் பெற வந்தோமல்லோம் என்கிறார்கள். மேலும் 'பொற்றாமரை அடியே போற்றும் பொருள் கேளாய்' என்று 'எல்லா உறவும் நீயே, நீ உகந்தபடியே பணி செய்திருப்போம்' என்று திருப்பாவையின் தனிப்பெருங் கொள்கையை இவ்வாய்ச்சிகள் வெளியிட்டு முடித்துள்ளார்கள். எனவே இறைவனுக்கு ஆளாகி, உறவு பூண்டு, ஒவ்வொருவரும் தமக்கு இசைந்த தொண்டு செய்யுமாறு திருவருள் புரிய வேண்டும் என்று, அந்த இறைவனிடமே கைங்கர்யப் பிரார்த்தனை செய்து கொள்வதுதான் திருப்பாவையின் தேர்ந்த உட்கருத்து என்பது புலனாகின்றது.

## திருப்பாவை பாசுரம் கற்பார் அடையும் பயன்

ஆண்டாள் திருவாய் மலர்ந்தருளிய இந்த முப்பது பாசுரங்களைக் கொண்ட திருப்பாவையைக் கற்பவர்கள் எல்லாம்—அவர்கள் எக்குலத்தில் எந்நாட்டில் பிறந்தவராயினும், எங்கும் எப்போதும் திருமாலருளால் நல்லின்ப வாழ்க்கை வாழ்வார்கள். வங்கக்கடல் கடைந்த மாதவன் என்றும், கேசவன் என்றும் அப்பரம்பொருள் குறிக்கப்படுகிறான். தேவர்களுக்காகத் தன் திருமேனியை நோகப் பண்ணிப் பாற்கடலைக் கடைந்தவன் எம்பெருமான் என்பது பொருள்.

அத்தேவர்கள் அமிர்தத்தை விரும்பினார்களே தவிரக் கண்ணனை விரும்பவில்லை. இவ்வாய்ச்சியர்களோ, அமுதினும் அமுதாக இக்கண்ணனையே விரும்புகிறார்கள். அதனாலேயே இவர்கள் திங்கள் திருமுகத்துச் சேயிழையாராகவும் விளங்குகிறார்கள். இப்படி இப்பெண்கள் கண்ணனிடம் விரும்பிப் பெற்ற பறையாகிய கைங்கர்யத்தை 'உனக்கே நாம் ஆட்செய்வோம்' என்று கூறும் இத்திருப்பாவைப் பிரபந்தத்தை—பட்டர்பிரான் கோதை அருளிச் செய்த இச்சங்கத் தமிழ்மாலை முப்பது பாட்டையும் ஒருபாட்டையும் நழுவவிடாமல் கற்பவர்கள் எல்லோரும் கீழே சொன்னபடி செங்கண் திருமுகத்துச் செல்வத் திருமாலால் எங்கும் (இப்பூவுலகிலும், பின்பு வானுலகிலும்) இன்புறுவர். எல்லா நலன்களையும் பெற்று வாழ்வாங்கு வாழ்ந்து பின்பு மோட்சத்தையும் அடைவர் என்று இப்பிரபந்தம் கற்றார்க்குப் பயன் வழங்கி ஆண்டாள் திருப்பாவை நிறைவு பெறுகிறது.

ஆண்டாளைப் பற்றியும், அவள் பாடிய திருப்பாவையின் சிறப்பு பற்றியும் அவளை வாழ்த்திய வாழ்த்துரையும் பிற்காலத்தில் ஆன்றோர்களால் பாடல்களாக இயற்றப்பட்டு இன்றளவும் பக்தர்களால் ஓதப்பட்டு வருகின்றன.

கோதை பிறந்த ஊர், கோவிந்தன் வாழுமூர்
சோதி மணிமாடம் தோன்றுமூர் — நீதியால்
நல்லபத்தர் வாழுமூர் நான்மறைகள் ஓதும் ஊர்
வில்லிபுத்தூர் வேதக்கோன் ஊர்
பாதகங்கள் தீர்க்கும், பரமன் அடிகாட்டும்
வேதம் அனைத்துக்கும் வித்தாகும் — கோதை தமிழ்
ஐயைந்தும் ஐந்தும் அறியாத மானிடரை
வையம் சுமப்பதும் வம்பு.

(வம்பே புதுமை
தொல்காப்பியம்)

திருவாடிப் பூரத்தில் செகத்துதித்தாள் வாழியே
திருப்பாவை முப்பதும் செப்பினாள் வாழியே
பெரியாழ்வார் பெற்றெடுத்த பெண்பிள்ளை வாழியே
பெரும்பூதூர் மாமுனிக்குப் பின்னானாள் வாழியே
ஒரு நூற்று நாற்பத்து மூன்றுரைத்தாள் வாழியே
உயர் அரங்கர்க்கே கண்ணி உகந்தளித்தாள் வாழியே
மருவாரும் திருமல்லி வள நாடி வாழியே
வண்புதுவை நகர்க்கோதை மலர்ப்பதங்கள் வாழியே

என்று இக்கோதை நாச்சியாராகிய ஆண்டாளை வாழ்த்துகின்றது வைணவ உலகம்.

## பயன்பட்ட நூல்கள்


1. ஆழ்வார்கள் வரலாறு—கா. ர. கோவிந்தராச முதலியார்
2. ஆழ்வார்கள் கால நிலை—மு. ராகவைய்யங்கார்
3. ஆழ்வார்கள் ஆரா அமுது—ந. சுப்புரெட்டியார்
4. ஆண்டாள் கருத்தரங்கு மலர்—இராமாநுச வேதாந்த சென்டர்
5. குருபரம்பரை வரலாறு—பின்பழகிய பெருமாள் சீயர்
6. திவ்வியார்த்த தீபிகை உரை—பிரதிவாதி பயங்கரம் அண்ணங்கராசாரிய சுவாமிகள்
7. திருப்பாவை உரை—பி. சி. ஆசார்யா அவர்கள்.

### ஆங்கில நூல்

8. Nammalvar—A. Srinivasa Raghavan



117372
14/12/04
SHIMLA

ஆண்டவனது அன்புச் சோலையில் பூத்த கற்பக நறுமலராகிய **ஆண்டாள்**, திருமாலடியார்களான ஆழ்வார்கள் பன்னிருவருள் ஒருவர். பரமனுக்குப் பாமாலை பாடி, 'பாடவல்ல நாச்சியார்' என்றும், பூமாலை சூடி, 'சூடிக் கொடுத்த சுடர்க்கொடி' என்றும் பெயர் பெற்றவள். ஆண்டாளுடைய பிறப்பும் வளர்ப்பும் தனித்தன்மை வாய்ந்தவை. பரம்பொருளாகிய கண்ணனையே கணவனாக அடையவேண்டும் என்று ஆசைப்பட்டு, அதில் வெற்றியும் பெற்றாள். ஆண்டாள் இயற்றிய **திருப்பாவை, நாச்சியார் திருமொழி** ஆகிய இரண்டு நூல்களும் சிறந்த பக்தி இலக்கியங்களாகும். தமிழ் அகப்பொருள் இலக்கணத்திற்குச் சிறந்த இலக்கியமாய்த் திகழ்வன இவை.

ஆண்டாள் பற்றிய இந்நூலை இயற்றிய **டாக்டர் கே. ஏ. மணவாளன்** தமிழ்-வடமொழி ஆகிய இருமொழிகளிலும் புலமை வாய்ந்தவர். வால்மீகி கம்பராமாயணங்களில் ஒப்பாய்வு செய்து சென்னைப் பல்கலைக்கழகத்தில் டாக்டர் பட்டம் பெற்றவர். தமிழ்ப் பேராசிரியராக சென்னை வைணவக் கல்லூரியில் பணியாற்றிய இவர், ஆழ்வார்கள்-இராமாநுசர் வரலாறுகளை ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்டுள்ளார். திருப்பாவை உரை, கம்பனில் இயற்கை, தமிழ் வளர்த்த சான்றோர்கள் ஆகியவை இவர் எழுதிய பிறநூல்கள். பாரதீய ஞானபீட அமைப்பின் தமிழ்க்குழுவில் அங்கம் வகிக்கிறார். பல்கலைக்கழகக் கருத்தரங்குகளில் ஆய்வுக் கட்டுரைகள் பல படித்துள்ள இவர், சிறந்த சொற்பொழிவாளர்.

Andal (Tamil) : SAHITYA AKADEMI REVISED PRICE Rs. 15·00

அட்டைப்பட உதவி: லிப் ... 17

Library IIAS, Shimla
T 891.481 015 2 An 22 M
00117372